பக்கங்கள்: 18+VI=24

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 29 ஞாயிற்றுக்கிழமை (14-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:355

## பாலசிங்கம் தம்பதியர் லண்டன் திரும்பினர்

கிளிநொச்சி,நவ.14

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்கு வந்திருந்த விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் சகிதம் நேற்று லண்டன் புறப்பட்டார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு கிளிநொச்சி மைதானத்தில் இருந்து விசேட ஹெலிகொப்டரில் புறப்பட்ட பாலசிங்கத்தை வழியனுப்ப விடுதலைப் புலிகளின் தளபதிகள் உட்படப் பெரும் எண்ணிக்கையானவர்கள் வந்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, கல்வித்துறைப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், கடற்புலிகளின் பொறுப்

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்று லண்டனுக்குப் புறப்பட்ட மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை தளபதிகள் வழியனுப்பி வைப்பதையும், அவர் ஹெலியிலிருந்து கையசைத்து விடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

# பேச்சு முயற்சியின் அடுத்த நகர்வு மாவீரர் தினத்துக்குப் பின்னரே!

## பீற்றர்ஸனின் விஜயத்தால் உடனடித் திருப்பம் எதுவுமில்லை

கொழும்பு,நவம்பர்14

**தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் இந்த முயற்சிகளின் அடுத்த கட்ட நகர்வுகள் மற்றும் முன்னேற்றம் பெரும்பாலும் நவம்பர் 27ஆம் திகதி வரும் மாவீரர் தினத்துக்குப் பின்னரே இடம்பெற வாய்ப்பிருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

**வழமைபோல மாவீரர் தினத்தன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றுகின்ற - முக்கியத்துவம் வாய்ந்த - விசேட உரையின் பின்னரே விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எடுக்கப்படக்கூடிய அடுத்த நகர்வு தெரியவரும் என்று புலிகளின் வட்டாரங்களில் அறியமுடிகிறது.**

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனின் இலங்கை விஜயம், சமாதான முயற்சிகளில் திருப்பத்தை ஏற்படுத்தக் கூடும் என்ற தீவிர எதிர்பார்ப்புக் காணப்பட்ட போதிலும் அவரது வருகையால் உடனடியாக எந்த முன்னேற்றங்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழனன்று கிளிநொச்சிக்கு வந்த பீற்றர்ஸன் தலைமையிலான நோர்வேக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து புதிய தகவல்கள எதனையும், கொண்டு வராத போதிலும் சமாதான முயற்சிகளை முன் நகர்த்துவதற்கான புதிய யோசனைகள் சில

(16ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் பிறந்த நாளன்று யாழ்ப்பாணத்தில் 300 பேர் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,நவ.14

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஐம்பதாவது பிறந்தநாளான எதிர்வரும் 26ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 300 பேர் இரத்ததானம் செய்யவிருக்கின்றனர்.

யாழ். மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் அதன் மாவட்டச் செயலகத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறவிருக்கின்றது.

தலைவரை வாழ்த்தி கேடயம் ஒன்றை அனுப்பிவைக்கவும் பேரவை நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் தெரிவித்தார்.

அத்துடன், வறுமைக்கோட்டின் கீழ் வாழும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் மழையால் பளையில் 556 குடும்பங்கள் இடம்பெயர்வு

பரந்தன்,நவ.14

தொடரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பளை - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 556 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

அந்தப் பிரதேசத்தில் உள்ள 13 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

வெள்ளத்தில் மூழ்கிய மக்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் செயற்பாடுகளை பளைக் கோட்ட எழுச்சிப் பேரவையினரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், தமிழீழ காவல்துறையின் பளை அலுவலகத்தினரும் பளை - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை ஆரம்பிக்க அரசுக்கு நோர்வே அழுத்தம் தரட்டும்

### சொல்ஹெய்மிடம் இ.தொ.கா. குழு தெரிவிப்பு

கொழும்பு,நவ.14

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேச்சை ஆரம்பிக்கும்படி அரசுக்கு நோர்வே அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நோர்வே சமாதானக் குழுவிடம் கேட்டுள்ளது.

கொழும்புக்கு வருகைதந்த நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மை நேற்றுக்காலை சந்தித்த இ.தொ.கா. குழுவினர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழு இச்சந்திப்பில் பங்குபற்றியது.

அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் உள்ள முரண்பாடுகளை - பிரச்சினைகளைக் களைந்து பேச்சுக்களை எவ்வளவு விரைவாக ஆரம்பிக்கமுடியுமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிக்க இலங்கை அரசுக்கு நோர்வே அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று குழுவினர் கேட்டுக்கொண்டனர்:

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க தமது கட்சி பூரண ஆதரவு வழங்குகிறது என்றும் இ.தொ.கா. தெரிவித்துள்ளது.

இதேவேளை -

நோர்வே விசேட தூதுவர் சொல்ஹெய்ம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம்: திருமலையில் நேர்முகப்பரீட்சை

திருகோணமலை,நவ.14

வடக்கு - கிழக்கில் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக கடந்த ஜூலை மாதம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் ஆயிரத்து 500 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இந்த நேர்முகப்பரீட்சைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் திருகோணமலையில் மாகாணக் கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளன.

பாடரீதியாகக் கூடுதல் புள்ளிகளைப் பெற்றவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்றும் -

நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அடுத்த வாரம் முதல் அனுப்பப்படவிருக்கின்றன என்றும் - மாகாணக் கல்வியமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அழைக்கப்படுபவர்களில் தகுதியுடைய ஆயிரம் பேருக்கு ஜனவரி முதல் நியமனம் வழங்கப்படும் என்றும் -

முற்றுமுழுதாகத் தகுதி அடிப்படையிலேயே

(16ஆம் பக்கம் பார்க்க)

## சங்கராச்சாரியாரின் கைதுக்கு இந்து அமைப்புகள் கண்டனம்

சென்னை,நவ.14

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டதற்கு தமிழகத்தில் பல்வேறு அமைப்பினரும் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

விஸ்வ இந்து பரிஷத்தின் பொதுச் செயலாளர் நாராயணசுவாமி விடுத்த அறிக்கையில் -

காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை நள்ளிரவில் கைது செய்து நடவடிக்கை எடுத்தது மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்து மடாதிபதிகளை தொடர்ந்து அவமானப்படுத்தும் செயற்பாடுகளில் இதுவும் ஒன்று. இந்துக்களின் நலன்களுக்கு பாடுபட்டு வந்த மடாதிபதியையும், மடத்தையும், திட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு?

கொழும்பு,நவ.14

ஈ.பி.டி.பி. அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்று விட்டனர் என்று இணையத்தளச் செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது.

நிசாந்தன், 'தினமுரசு' பாஸ்கரன், ஜெகன் ஆகியோர் கட்சிக்குள் ஏற்பட்ட உள் முரண்பாடுகளை அடுத்து வெளிநாடுகளுக்குத் தப்பி விட்டனர் என்றும், அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



குடாநாட்டு இராணுவப் படையணிகளின் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று மாலை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றவேளை எடுக்கப்பட்ட படங்கள். பான்ட் அணிவகுப்பையும் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், வீரர்களுக்கு கைலாகுகொடுப்பதையும், வைபவத்தில் கலந்துகொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.
(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம்.நவ.14

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி ஒன்றிய இயக்குநர்களுக்கும் முக்கிய சந்திப்பு ஒன்று இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு சயன்ஸ் ஹோல், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் நடைபெற இருக்கின்றது. (3)

## புற்றுநோய் சிகிச்சை முகாம் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம்.நவ.14

புற்றுநோயியல் நிபுணரும், மஹரகம வைத்தியசாலைப் புற்றுநோய் பிரிவு பொறுப்பதிகாரியுமான டாக்டர் வாணிப்பிள்ளை திர்வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தவிருக்கின்றார்.

அன்று காலை முதல் யாழ்.மத்திய கல்லூரியில் இந்தச் சிகிச்சை முகாம் இடம்பெறும்.

இச்சிகிச்சை முகாமில் பங்குபற்ற விரும்புபவர்கள் மொடேர்ண் சம்பந்தன் கிளினிக்கில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## திருச்சபையின் 84 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம்.நவ.14

அச்செழு நல்லாயன் மெதடிஸ்த திருச்சபையின் 84ஆவது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

இவ்விழாவில் திருவிருந்து ஆராதனை, திருமறைப் படிப்பு, பகிரங்கக் கூட்டம் என்பவற்றுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-202)

# 3 வருடங்கள் தொடர்ச்சியாகப் பணிபுரிந்த தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

காரைதீவு.நவ.14

01.01.2004வரை தொடர்ச்சியாக 3 வருடங்கள் சேவையாற்றிய சகல தொண்டர் ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

ஆனால், இவர்கள் கஷ்டப் பிரதேச பாடசாலை அல்லது அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலையில் தொடர்ச்சியான சேவையை செய்திருக்கவேண்டும்.

அத்துடன் அப்பாடசாலையில் வெற்றிடமும் இருக்கவேண்டும்.

மேலும், இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின்படி உள்வாங்குவதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கட்டாயம் கொண்டிருத்தல்வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. அதாவது அடிப்படைத் தகைமை எனின் ஜி.சீ.ஈ.(உயர்தரம்) பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகத் தெரிவுக்கு 'Yes' தகைமை பெற்றிருத்தல் அவசியமாகும்.

இதுதொடர்பான அறிவுறுத்தல் யாவும் கல்வி அமைச்சின் செயலர் கலாநிதி தாரா டி மெல்லினால் சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நியமனத்தினால், மலையகம், வடக்கு - கிழக்கு உட்பட நாட்டில் உள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை தீர்த்துவைக்கப்படுமென இலங்கை தமிழா ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நியமனம் சேவைக்காலம் பூராக குறிப்பிட்ட கஷ்ட/அதிகஷ்டப் பாடசாலையிலேயே சேவையாற்றும் பொருட்டு வழங்கப்படுவதாகும். முன்னைய காலத்தில் இந்நடைமுறை இருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னர் கல்வி அமைச்சின் செயலாளருடன் தாம் நடத்திய சந்திப்பின்போது நாடளாவிய ரீதியில் 2ஆயிரத்து 500 தொண்டர் ஆசிரியர் நிரந்தரமாக்கப்படுவர் என்று கூறிய போதிலும், தற்போது தொகை குறிப்பிடாமல் அவ்வகையினா அனைவரையும் வகைதொகையின்றி உள்ளீர்க்க நடவடிக்கை எடுத்திருப்பது குறித்து தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம், கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல்லுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

டிசெம்பரில் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு ஜனவரியில் தொண்டர் ஆசிரியர் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நியமனங்களை வழங்கும் பொறுப்பு அந்தந்த மாகாண சபைகளிடம் வழங்கப்பட்டிருப்பதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தெரிவித்தார்.

இதேவேளை -

ஏற்கனவே தடைப்பட்ட 143 தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனத்தை வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் மேலும் கூறினார். (எ)

# காணி, நிதி கிடைத்துள்ள போதிலும் மருந்தகம் நிர்மாணிக்கப்படவில்லை

## புன்னாலைக்கட்டுவன் மக்கள் விசனம்

வலி.வடக்கு,நவ.14

புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகத்தை நிர்மாணிப்பதற்கு காணி அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளபோதிலும் கட்டடத்தை நிறுவாமல் சுகாதாரத் திணைக்களத்தினர் இழுத்தடித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த இந்த மத்திய மருந்தகத்தை நிர்மாணிக்கக் கடந்த ஆண்டுகளில் 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டபோதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கபடாமையினால் நிதி திரும்பியுள்ளது.

மருந்தகம் இயங்கிவரும் கட்டடம் தற்போது வேறு ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டு கட்டடத்தை இடித்துத் துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனையடுதது கணேசா சனசமூக நிலையத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து அப்பகுதியைச் சேர்ந்த எஸ்.செல்லப்பா என்பவர் 12 பரப்புக் காணியை தாய், தந்தையரின் ஞாபகார்த்தமாக வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவ்வாண்டும் மத்திய மருந்தகத்தின் புதிய கட்டட நிர்மாணத்துக்கென 40 லட்சம் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, சுகாதாரத் திணைக்களத்தினர் மத்திய மருந்தகக் கட்டடத்திற்கான வேலைகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலம் நிதி திரும்பிச் செல்லாத நிலையை ஏற்படுத்தலாம் என மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (எ-86)

# பொது மன்னிப்பின் பேரில் 19பேர் யாழ்.சிறையில் இருந்து விடுவிப்பு

யாழ்ப்பாணம்.நவ.14

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்று பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கைதிகளில் 19பேர் நேற்று பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய் யப்பட்டனர்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு இணங்க சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நூர்டீன் மசூரின் பணிப்பின் பேரில் யாழ்.சிறைச்சாலையின் உதவி ஆணையாளர் எஸ்.இந்திரகுமார் நேற்றுக் காலை 19பேரையும் விடுதலை செய்தார்.

கசிப்பு, திருட்டு, மதுபோதையில் மக்களுக்கு இடையூறு விளைவித்தல் போன்ற சிறு குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களுக்கே இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

விடுதலை செய்யப்பட்டவர்களில் 14 ஆண்களும், ஐந்து பெண்களும் அடங்குவர்.

பி.சித்திரவேல், ஏ.இராஜேந்திரம், இ.ஐயாத்துரை, ரி.பசுபதி, எஸ்.இராசையா, ஜே.கரிகரன், ஆர்.தெய்வேந்திரராஜா, ஆ.அரசு, ரி.சுப்பிரமணியம், ரி.தியாகராஜா, வி.சுப்பிரமணியம், பி.பாலசிங்கம், ரி.தியாகமூர்த்தி, ஆர்.மயூரகுமார்.

பெண்களான எஸ்.செல்வராணி, ரி.செல்வராணி, ஜெ.ஜெயமணி, எஸ்.சாந்தி, எஸ்.றோசம்மா ஆகியோரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இதேவேளை - இலங்கையிலுள்ள ஏனைய சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பல கைதிகள் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய நேற்று விடுதலை செய்யப்பட்டனர் எனவும் கூறப்பட்டது. (எ-7)



நேற்று விடுதலையான கைதிகள்

## இலக்கியப் பேரவைக் கூட்டம்

குருநகர்,நவ.14

தேசிய கலை இலக்கியப் பேரவையை விரிவுபடுத்துவதற்கான ஆலோசனைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இன்றைய கலை இலக்கியப் பண்பாட்டுச் சூழலில் அதன் செயற்பாடுகளைப் பன்முகப்படுத்தும் நோக்குடன் இளைய தலைமுறையினரை இணைததுக்கொண்டு செயற்பாடுகளை விரிவுபடுத்துவது தொடர்பாக கலை இலக்கிய ஆர்வமுள்ளவர்களை கூட்டத்தில் பங்குகொண்டு தமது ஆலோசனைகளைத் தெரியப்படுத்துமாறு பேரவை அழைத்துள்ளது.(ஐ-51)




# யாழ்.ஜும்மா பள்ளிவாசலில் இன்று நோன்புப் பெருநாள் தொழுகை

யாழ்ப்பாணம்.நவ.14

நோன்புப் பெருநாளான இன்று விசேட தொழுகைகள் காலை 8.30 மணி முதல் முற்பகல் 11 மணிவரை யாழ். நகரில் உள்ள ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம்கள் சகலரும் இத் தொழுகையில் கலந்துகொள்வர்.

நோன்புப் பெருநாளை ஒட்டி யாழ்ப்பாணம் முஸ்லிம் வாலிபர் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.றஹீம் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எமது நாட்டில் உள்ள முஸ்லிம்கள் இன்று நோன்புப் பெருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். குறிப்பாக வடக்கு - கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களும் எமது நாட்டில் சமாதான சூழ்நிலையில் நோன்புப் பெருநாளை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

விரைவில் எமது நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு வடக்கு - கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து எதிர்வரும் பெருநாள்களை (இன்ஷா அல்லாஹ்) தங்கள் சொந்த இடங்களில் கொண்டாட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு எங்கள் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களையும் அன்புடன் தெரிவிக்கின்றேன் - என்றுள்ளது. (எ-3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாத்கார மயமாக்கப்பட்ட நாடு ஸ்ரீலங்கா; செல்வாவின் ஆரூடம் பலிக்க வழிவிடுமா?

**தென்னாசிய சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் பிராந்திய மாநாடு இம்மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.**

**"தெற்காசிய நாடுகளின் உள்நாட்டு மோதல்கள்" என்ற தொனிப்பொருள் குறித்து ஆராய்ந்த இந்த மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூத்த பத்திரிகை ஆசிரியர்களும் பத்திரிகையாளர்களும் பங்குபற்றினர்.**

**இந்தியாவின் வடக்கு - கிழக்கு மாநிலங்களின் தன்னாட்சிக் கோரிக்கை, பாகிஸ்தானின் மதக் குழுமங்களுக்கு இடையேயான மோதல், பங்களாதேஷின் சிட்டாககொங் மலைப் பிரதேச மக்களின் இனப்பிரச்சினை, நேபாளத்தின் மாவோயிஸ்டுகளின் போராட்டம், இலங்கையின் இனப்பிரச்சினை ஆகிய விடயங்கள் தனித்தனி ஆய்வரங்குகளாக இடம் பெற்றன.**

**இலங்கை இனப்பிரச்சினை குறித்த ஆய்வரங்கில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டப் பீட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த அசங்கா வெலிக்கல, முஸ்லிம் உரிமைகள் இயக்கத் தலைவர் எம்.ஐ. எம்.முகைதீன் ஆகியோர் விசேட பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர்.**

**'நாட்டை மீளக் கட்டமைப்பது: சவால்களும் சாத்தியங்களும்' என்ற தலைப்பில் வி.ரி.தமிழ்மாறன் ஆற்றிய உரையைத் தமிழில் தருகிறோம். அதன் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

வி.ரி.தமிழ்மாறன்

தமிழில்: நந்தன்

அரை நூற்றாண்டு காலமாக இலங்கையின் அரசியல் முரண்பாடு தீர்க்கப்படாமல் இருந்துவருகின்றது. அதாவது, 1949 ஆம் ஆண்டு காலனித்துவ நிலையிலிருந்து விடுபட்ட காலத்திலிருந்தே இந்த அரசியல் முரண்பாடு இருந்து வருகின்றது. இந்த நாட்டின் எதிர்காலம் பற்றிய ஒருமுகமான தூரப்பார்வை எதுவும் இந்த நாட்டின் பல்வேறுபட்ட மக்கள் குழுமங்களுக்கு இருக்கவில்லை என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. சுதந்திரமான ஒரு நாட்டில் எண்ணிக்கை அடிப்படையிலும் நிரந்தரமாகவும் இருக்கப் போகின்ற சிறுபான்மை மக்கள் குழுமங்களின் அந்தஸ்துத் தொடர்பாக அப்போது ஒருமித்த கருத்து எப்போதும் எட்டப்படவில்லை.

1931 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலை யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் பகிஷ்கரித்தமை முற்றிலும் சிங்கள அமைச்சர்களைக் கொண்ட சபையொன்றை நிறுவும்படியான நிலையைத் தோற்றுவித்தது. இதனால், அரசமைப்புச் சீர்திருத்தங்களை அந்த அமைச்சரவை சிபார்சு செய்யவும் அதன்மூலம் டொமினியன் அரசியல் அந்தஸ்த்தை ஏற்படுத்தவும் வழிகோலியது.

இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசமைப்பானது, 1935 ஆம் ஆண்டு இந்தியாவுக்காக உருவாக்கப்பட்ட சட்டத்தின் காலனித்துவ நாடுகளுக்கான சட்டங்களை உருவாக்குவதற்கான அரசருக்குரிய தனிப்பட்ட உரிமைகளைப் பயன்படுத்தி பிரிட்டனால் வழங்கப்பட்டதாகும். அவ்வேளையில், தமிழர்களின் அரசியல் தலைமைகள் சமாந்தர பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி நின்றார்கள் (ஐம்பதிற்கு ஐம்பது என்பது இதன் பிரசித்தமான பெயராகும்). நாட்டின் அதிகாரங்கள் ஒரு சமூகத்தின் கைகளுக்குள்ளேயே அடங்கி விடக்கூடிய அபாயத்தைத் தவிர்ப்பது மட்டுமன்றி, அரச அதிகாரங்கள் நாட்டின் சகல தரப்பின் மத்தியிலும் சமமாகப் பகிரப்படுவதையும் இந்தக் கோரிக்கை நோக்கமாகக் கொண்டிருந்தது.

### சீராக இடப்படாத அத்திபாரம்

அமைச்சரவை வழங்கிய உறுதிமொழிகளில் நம்பிக்கை வைத்த சோல்பரி ஆணைக்குழு வேறு பாரம்பரியமான பாதுகாப்புக்களைச சிபாரிசு செய்தது. அவை பின்னர் அரசமைப்பின் 29 ஆவது அத்தியாயத்தின் பிரிவுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. எனினும், சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்களித்திருந்த சட்டசபையில் அங்கம் வகித்த மூன்று தமிழ்ப் பிரதிநிதிகளும் பின்னர் 1947 இல் நடந்த பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டனர். இதிலிருந்து அத்திபாரம் சரியாக இடப்படவில்லை என்பதும் வெடிப்புக்கள் விரைவில் தோன்றக்கூடும் என்பதும் அதிகாரத்திலிருந்தவர்களுக்கு இடித்துரைக்கப்பட்டிருந்தன.

அரசமைப்பின் பன்மைத்துவத்தின் ஒரே ஓர் அறிகுறியே இது. ஆரம்பகாலத்திலேயே இதன் வழியாக சிறுபான்மையோரை நட்புக்குரியவர்களாகப் பயன்படுத்தி தேசிய கட்டுமானத்தில் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்க முடியும். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், இதைத்தான் இந்தியமக்கள் செய்தார்கள்.

ஆனால், இலங்கையில் இது சரியாக உணரப்படவில்லை. அரசு பெரும்பான்மையினருடையதாகவே மாறிக்கொண்டு வந்துவிட்டது. 29 ஆவது சரத்தின் கீழ் வழங்கப்பட்ட மிக முக்கிய பாதுகாப்பும் புறந்தள்ளப்பட்டுவிட்டது.

அரச அதிகாரங்கள் தொடர்பான அரசமைப்பு வரையறைகள் எதிர்பார்த்த அளவில் செயற்படவில்லை என்பது பின்னர் நடந்த சம்பவங்களின் மூலம் வெளிப்படலாயிற்று பெரும்பான்மை மேலாதிக்கங்கொண்ட ஒற்றை ஆட்சி முறையாக அது இனங்காட்டிக்கொள்ளும் விதத்தில் முனைப்படையலாற்று. பங்காளித்துவ ஜனநாயகத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்படுவதாக இது அமைந்தது. இதன் விளைவாக 1972 இல் முதலாவது குடியரசு அரசமைப்பு உருவானது.



1956 ஜூன் 6 ஆம் திகதி காலிமுகத்திடலில் தமிழர்கள் நடத்திய சத்தியாக்கிரகத்தின் பதிவு.

### தமிழ் உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பு

வடக்கு - கிழக்கிலிருந்து வந்த தமிழ்ப் பிரதிநிதிகள் அரசமைப்பு நிர்ணய சபையைப் பகிஷ்கரித்திருந்த நிலையிலும், குடியரசு அரசமைப்பு நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதை அவர்கள் கண்டித்தார்கள். வடக்கு - கிழக்கில் அரசமைப்புச் சட்டத்தைத் தீயிட்டுக்கொளுத்தும் ஆர்ப்பாட்டங்களின் மூலம் தம் எதிர்ப்பை அவர்கள் வெளியிட்டார்கள்.

மேலும், தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் - தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என இதுபின்னர் அழைக்கப்பட்டது - நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து விட்டு, புதிய அரசமைப்பைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்பதை நிரூபிக்கும்படி அரசுக்கு சவால் விட்டிருந்தார்.

அரசியல் நிர்ணயசபை விவாதங்களில் கலந்துகொண்டு புதிய அரசமைப்பை ஆதரித்த வடக்கு - கிழக்கு தமிழ் பிரதிநிதிகள் எவரும் அதன்பிறகு தேர்தல்களில் வடக்கு-கிழக்கு மக்களை எதிர்கொள்ளவில்லை. தேர்தலில் போட்டியிட்டவர்களும் படுதோல்வி அடைந்தார்கள்.

### ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பம்

அதன்பிறகு நிகழ்ந்தவை வரலாறாகும். அதுவே தமிழரின் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பமாகும். அரசு சிறுபான்மையினர் மீதான ஒடுக்குமுறையை அதிகரிக்கத் தொடங்கியதால் அவர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தார்கள்.

1976 இல் ட்ரயல் - அட - பார் விசாரணையொன்றில் அமரர் எம். திருச்செல்வம் -கியூ.ஸி. விவாதிக்கும்போது-

1947 ஆம் ஆண்டின் இந்திய சுதந்திரத்துக்கான சட்டத்தைப் போலன்றி சோல்பரி அரசமைப்பானது அதனை மாற்றி அமைக்கும் முழுமையான அதிகாரத்தை இலங்கை நாடாளுமன்றத்துக்கு வழங்கியிருக்கவில்லை. 29 ஆவது சரத்துக்குட்பட்டு திருத்தங்களைக் கொண்டு வருவதற்கே அனுமதியளித்திருந்தது - என்ற கருத்தை முன்வைத்திருந்தார்.

### பிரிக்கப்பட்ட தேசம் என்பதனைப் பின்னர் உணர்ந்த சோல்பரி பிரபு

இந்திய சுதந்திரத்துக்கான சட்டமானது முழு இந்தியாவுக்குமான ஓர் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கி ஏற்றுக்கொள்ளும் அதிகாரத்தை அரசியல் நிர்ணயசபைக்கு வழங்கியிருந்தது.

சோல்பரி அரசமைப்பை உருவாக்குவதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் வெளியிட்டிருந்த வியாக்கியானங்களையும் கருத்துக்களையும் இங்கு அவதானிப்பது சுவாரஸ்யமாகவிருக்கும்.

1947 ஆம் ஆண்டு இலங்கைக்கு அரசமைப்பு ஒன்றை சிபாரிசு செய்தவரான சோல்பரி பிரபு, பி.எச்.பார்மர் என்பவரின் 'இலங்கை : ஒரு பிரிக்கப்பட்ட தேசம்' என்ற நூலுக்கு 1963 இல் எழுதிய முன்னுரையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்-

*"இந்த இரு சமூகங்களுக்குக்கிடையில் நெடுங்காலமாக இருந்துவந்துள்ள பகைமையைப் பற்றி ஒரு மேம்போக்கான கருத்தையே ஆணைக்குழு கொண்டிருந்தது. ஆனால், திரு. பார்மரின் நூல் அப்பொழுது கிடைத்திருக்குமானால் இலங்கையின் பல நூற்றாண்டு கால குழப்பகரமான வரலாற்றின் தாக்கங்கள் இன்று இலங்கையர் மீது படியாமல் இருப்பதற்கான வழிமுறையைக் காண்பதற்கு உதவியிருக்கும். இந்த நிலைமை எனக்கும் எனது சக ஆணையாளர்களுக்கும் கசப்பான ஏமாற்றங்களைத் தந்துள்ளன என்பதைக் கூறத் தேவையில்லை"* - என்பதாகும்.

லஞ்ச ஆணையாளர் எதிர் ரணசிங்க வழக்கில் பிரிவு அரசமைப்புக் கவுன்ஸிலின் நீதிக் குழுவைச் சேர்ந்த பெயர்ஸ் பிரபு சட்டத்தின் 29(2) சரத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் -

*"இலங்கைப் பிரஜைகளுக்கிடையில் இவை பவுத்திரமான சமவத்துவத்தைப் பிரதிபலிக்கின்றன. அரசமைப்புச் சட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டமைக்கான அடிப்படை நிபந்தனைகளாகும் இவை. எனவே, இவை அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மாற்றியமைக்க முடியாதவை"* -என்று உள்ளது.

## ஏனைய இனங்களை எல்லாம் புறந்தள்ளி விட்டு சிங்கள பௌத்த தேசமாகவே இனங்காட்டப்பட்டுள்ளது

### தமிழர்களின் அபிலாஷைகள்

எவ்வாறு இருந்த போதிலும் சோல்பரி அரசமைப்பு, குடியரசு அரசமைப்பு ஆகியவற்றின் மூலம் ஒருதலைப்பட்சமாக மாற்றி அமைக்கப் பட்டுவிட்டது. 29 ஆவது சரத்தின் வரையறுக்கப்பட்ட அம்சங்களைப் பொறுத்தும் அதன் தன்மை பற்றிய நீதித்துறை வெளிப்பாடுகளைப் பொறுத்தும் தன்னிச்சையான செயற்பாடுகளைப் புரிந்துகொள்ளமுடியும்.

இலங்கை தனது இரண்டாவது குடியரசு அரசமைப்பை உருவாக்கியபோதும் ஒரு தலைபட்சமான செயற்பாடு 1978 ஆம் ஆண்டிலும் இடம்பெற்றது. தமிழர் அபிப்பிராயம் முற்று முழுதாகப் புறக்கணிக்கப்பட்டது. இது தமிழர்களைப் பெரிதும் துன்புறுத்தியிருந்தது. ஜனநாயகத்தின் நோக்கங்கள், பன்மைத் தன்மை பல்வேறு சமூகங்களின் அரசியல் குழுக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கல் போன்ற யாவும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன. மூன்றாவது தடவையாகவும் அரசமைப்பானது ஒரு தலைப்பட்சமானதாகவும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் விருப்பங்களுக்கும் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருந்து விட்டது.

### தமிழர்கள் தங்களது வழியில்...

இந்த நிலைமையில், இரண்டாவது குடியரசு அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையானது அரசின் சட்டபூர்வ தன்மையில் மட்டுமன்றி, பல்வேறு அரசியல் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்வதை அரசு தொடர்ச்சியாக மறுத்து வந்தது. அதனால், ஒரு பிரிவு மக்களின் நம்பிக்கையில் தளர்வு நிலையை ஏற்படுத்தலாயிற்று. அதன் விளைவாக அவர்கள் தங்கள் வழியில் செல்வதைத்தவிர வேறுவழியில்லை என்று நினைக்கத் தொடங்கினார்கள்.

1978 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பெரும்பான்மைத் தரப்பில் எதுவுமே திருந்தியதாகத் தெரியவில்லை.

சீர்குலைவுச் செயற்பாடு இடம்பெற்ற வேகமானது மிக அச்சுறுத்தும் வகையில் அமைந்தது. இந்தச் சீர்குலைவுச் செயற்பாட்டில் அரசின் மூன்று பிரிவுகளும் பங்களிப்புச் செய்துள்ளன.

ஐம்பதுக்கும் ஐம்பது கோரிக்கை அப்படியே இருக்க, மிதவாதத் தமிழ்க்கட்சிகள் வேறு யோசனைகளை முன்வைத்தன. தமிழர் ஐக்கிய முன்னணி **(TULF)** 1972 ஆம் ஆண்டில் முன்வைத்த ஆறு அம்சக்கோரிக்கையானது தயவு தாட்சண்யமின்றி அரசமைப்பு நிர்ணய சபையினால் நிராகரிக்கப்பட்டது. அனைத்துக் கட்சி மாநாடு என்ற வாக்குறுதியானது அதனை மீறுவதாகவே அமைந்ததால், தமிழர் ஐக்கிய முன்னணித் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை பகிஷ்கரித்தது. 1978 ஆம் ஆண்டில் அரசமைப்புச் சட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு தெரிவுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரசு மீண்டும் தமிழர் தரப்புக்கு விட்டுக்கொடுக்க மறுத்து விட்டது.

### போர் என்றால் போர்

அரசின் இயல்புத்தன்மை தெளிவாக வெளிவரலாற்று. 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலையடுத்து, அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் 'நியுஸ்வீக்' சஞ்சிகைக்கு அளித்திருந்த செவ்வி ஒன்று குறித்து தேசிய நாடாளுமன்றில் அன்றைய பிரதமர் ஜே.ஆர்.ஜயவர்த்தன கருத்து வெளியிடுகையில் பின்வருமாறு கூறியிருந்தார் -

*"நீங்கள் போரிட விரும்பினால் போர் நடக்கட்டும். அமைதியென்றால் அமைதி நிலவட்டும்... இதனை நான் சொல்லவில்லை.ஸ்ரீலங்காவின் மக்கள் சொல்கிறார்கள்."*

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட 'சன்சோனி' ஆணைக்குழு பின்வரும் கருத்தை வெளியிட்டிருந்தது -

*".....எனவே குழப்பங்கள் மீண்டும் நிகழாமலிருக்க நான் செய்யக்கூடிய முதலாவது சிபாரிசு என்னவென்றால் இந்த (ஈழம்) கோரிக்கை கைவிடப்பட வேண்டும் என்பதாகும்.*

அரசானது எல்லா வகைகளிலும் தனது பெரும்பான்மை மேலாதிக்க அரசாகத் தெளிவாகத் தன்னை வெளிப்படுத்தி இனங்காட்டிக் கொண்டது என்பதற்கு இதுவே முதற்தடவை என்றில்லை.

### காலிபோஸ் சத்தியாக்கிரகம்

சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்துக்குள்ளேயே அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் நடத்துவதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர், அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவிடம் அனுமதி கேட்டபொழுது திரு.செல்வநாயகத்தின் நோக்கம் 'மிகவும் அமைதிசார்ந்தது' என்பதை ஏற்றுக்கொண்டபோதிலும், அனுமதி மறுத்து அவர் கூறிய நியாயம் என்ன தெரியுமா? *"இந்தச் செயற்பாடுகள் முன்யோசனையற்றவை மட்டுமல்ல, நாட்டின் பாதுகாப்புக்கு மிகவும் அபாயகரமானவை"* - என்பதாகும்.

1956 ஜூன் 6 ஆம் திகதி தமிழர்கள் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் நடத்தினார்கள். அவர்களைக் காடையர்கள் தாக்கினார்கள்.

சிறுபான்மை இனத்தவர்களில் ஒரு பகுதியினர் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளுக்குப் பலனாக நாடு வன்முறைகளை முதன்முதலாக அனுபவித்தது. அக்காலகட்டத்தில் தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையையோ வன்முறை வழிகளையோ தேர்ந்தெடுத்திருக்கவில்லை. ஆனால், இந்த கோரிக்கைகள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவையென்று கருதப்பட்டன. காலிமுகத்திடலில் அவர்களைத் தாக்குவதன் மூலம் பதலளிப்பதாக அமைந்தது. ஆனால், தமிழ் அரசியல் தலைவர்கள் பொது இடமொன்றில் வைத்துத் தாக்கப்படுவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற வகையில் கருதப்படவில்லை.

அரசானது சிங்களவர்களை வைத்தும் பின்னர் பௌத்த சமயத்தை வைத்து அடையாளம் காணப்பட்டது. இந்தவகையில், ஏனைய சமூகங்கள் மாற்று முறைகளைப் பற்றி சிந்திக்கும் வகையில் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டன. எந்த வகையான ஆட்சேபங்களும் எதிர்ப்புக்களும் சகித்துக் கொள்ளப்படவில்லை. எதுவாகிலும் ஒரு தீர்வை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் யாவும் அரசிற்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் தீவிரவாதிகளால் எதிர்க்கப்பட்டன.

இவ்வாறு நாடு எதிர்த்திசையில் வெகுவேகமாகப் போகத் தலைப்பட்டிருந்தது. ஸ்ரீலங்காவை உருவாக்கும் அவசரத்தில் ஏனையவர்கள் வேண்டுமென்றே ஓரத்திற்குத் தள்ளப்பட்டனர். தேசிய அரசுக்குரிய தேவைகள், குணாம்சங்கள் யாவும் இழக்கப்பட்ட நிலையில் சிறுபான்மையோர் ஒருவித 'பலாத்காரமயப்பட்ட' நாட்டில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி உள்ளனர்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல இன நாய்கள், நாய்க்குட்டிகள், Love Birds குருவிகள் (Red Eyes கூட்டுடன்), பெண்டம் கோழிகள், Pinchers (கூட்டுடன்) என்பன உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: A.டானியல், 4, ஈஸ்வரி வாசா, இணுவில் றோட், மானிப்பாய். (38494)

இணைப்புடனான கேபிள் தொலைபேசி கண்ணாடிப் பெட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: N.தவமணி, 145, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு. (38493)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, சுப்பனாவத்தையில் ஊத்தன் சீமா சந்தைக்கருகில் வீடும், 4¼ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு காலை 9 - 6 மணிவரை நேரில் சமுகம் தரவும். தொடர்பு: பாலா, அளவெட்டி வடக்கு (ஊத்தன் சீமா சந்தைக்கு அருகில்), அளவெட்டி. (38557)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 3¼பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777145282 (38568)

## வீடு, காணி விற்பனைக்கு

'பத்மினி வாசா' (துரை வீதிக்கு அருகில்) கே.கே.எஸ். வீதி, கோண்டாவிலில் 3½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 011 2712973 (சி-38994)

## தவறிவிட்டது

சென். ஜேம்ஸ் வீதி, இளவாலையைச் சேர்ந்த ஞானரட்ணம் மேரி ஆன் சோனியா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 856413853V), யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.N.T. கூரியர் சேவை, 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-39020)

## வாடகைக்கு

யா/இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் புகையிரத வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. SELECT SCOOTOR விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 6128516 (38388)

## மணமகள் தேவை

தனியார் நிறுவனத்தில் பாதுகாப்பு ஊழியராகக் கடமைபுரியும் குடும்பப் பொறுப்பற்ற, நற்பண்புள்ள, சைவபோசன மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: விளம்பர இல. 2436, C/o உதயன். (38590)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரச உத்தியோகம் பார்க்கும், 28 வயது, திருவாதிரை நட்சத்திர, நற்பண்புகளுடைய மணமகனுக்கு நற்குணமுள்ள, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: புதிய பாலம், தபாற் பெட்டி இல.10, வவுனியா. (37778)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தில் 1961 இல் பிறந்த, விசாக நட்சத்திரம், 18 கிரக பாவம் செவ்வாய்க்குற்றமில்லாத, அரச பணி புரியும் மணமகனுக்கு 35 வயதிற்கு மேற்படாத, படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: விள.இல. 2430, மே/பா உதயன். (38556)

லண்டனில் பிரஜாவுரிமை பெற்ற தொழில் பாக்கும், 1974இல் பிறந்த, திருவாதிரை நட்சத்திர மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2431, C/o உதயன், யாழ்ப்பாணம். (38562)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப 1981 (பரணி) - கனடா, 1981 - கனடா, 1979 - கனடா (B.Sc.), 1978 ஆஸ்திரேலியா, 1989 - ஜேர்மன் ஆகிய நாடுகளில் PR உடைய மணமகள்களுக்கு வெளிநாட்டிலோ, உள்நாட்டிலோ மணமகன் மாரை எதிர்பார்க்கின்றோம். புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். T.P.: 031 2224978. Kesavan Marriage Service, 76 Aues Road, Negombo. (38380)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 25 வயதுள்ள அவிட்ட நட்சத்திரம், 46 கிரக பாவமுள்ள, 7 இல் செவ்வாய், A/L படித்த மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்புடன் தொடர்புகொள்க. விளம்பர இல. 2435, C/o உதயன், யாழ்ப்பாணம். (38577)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ வந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. வயதெல்லை 35 இற்கு மேல். மூன்று வேளை உணவு, உடை, கவர்ச்சிகரமான சம்பளம் உண்டு. தொடர்பு: விஜிதா ஸ்ரோர்ஸ், இல. 92, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம். T.P.: 0776681914, 0776 111419 (38565)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான இரண்டுமுறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 15.11.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (38466)

## சேவை

55,000 அமெரிக்க நிரந்தர குடியேற்ற விசா (Green Card) விண்ணப்ப விவரம் இலவசமாகப் பெற Internet மூலம் USA இறகு அனுப்பி Receipt பெற நாடுங்கள். PENGUIN B2/F23, Bloemendhal, colombo-13 T.P.: 2438367, 077 3081764 (சி-38978)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் விற்பனைக்குண்டு. புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகில் உள்ள புலவனார் வீதி. (38560)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38316)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் மூன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.சிவசுப்பிரமணியம், பொன்னாலை வீதி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். (38503)

சுத்தமான Dobermann Pincher, Dachshund நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38593)

## 200 குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்க நடவடிக்கை

கொக்குவில்,நவ.14

இந்தியாவிலிருந்து வந்து வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் விவசாய உபகரணங்களும் வேறு பொருள்கள் அடங்கிய பொதிகளையும் வழங்கவுள்ளது.

இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்களில் வறுமையானவர்கள், ஊனமுற்ற நிலையில் உள்ள வறியவர்கள், இடம்பெயராமல் இருந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு பொதிகளைப் பெறவுள்ளனர்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவில் இருந்தும் தலா ஆறு குடும்பங்கள் வீதம் இதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (எ-76)

## ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்குப் புதிய செயலாளர்

ஊர்காவற்றுறை,நவ.14

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து சபையின் புதிய செயலாளராக இரா. லோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், முன்னர் வவுனியா நகரசபையில் பிரதம எழுதுவினைஞராகவும், செயலாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-16)


### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A.C உடன் கல்சியம் இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு

BIO TEC INTERNATIONAL

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021-4590907. (37114)


### பெயர்மாற்றம்

சண்டிலிப்பாயை நிரந்தர வதிவிடமாகவும் 38A, டீ அல்வீஸ் இடம், தெஹிவளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அனற் சுதாகரி இராசதுரை ஆகிய நான் 11.11.2004ஆம் திகதி முதல் எனது பெயரை சுதாகரி இராசதுரை மாற்றம் செய்வதன் மூலம் சகல ஆவணங்களிலும் இனிமேல் அவ்வாறே கையொப்பம் இடுவேன் என்றும் பொதுமக்களுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

(சி-39019)(39-19-46-24) இ.சுதாகரி

## சனசமூக நிலைய கட்டடம் புனரமைப்பு

தென்மராட்சி,நவ.14

மீசாலை வயல் கரை மலைமகள் சனசமூக நிலையக் கட்டடம் 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. (எ-204-117)


### பத்திரிகை மடிப்பவர்கள் தேவை

பத்திரிகை மடிப்பதில் அனுபவம் பெற்றவர்கள் உடனடியாகத் தேவை. பயில விரும்புவோரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். இன்று (14.11.2004) நேரில் வரவும்.

சந்தைப்படுத்தல் முகாமையாளர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-39005)

இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்

ATLAS · MITSUI CEMENT · HINODE POZZOLANA

உங்கள் வாழ்கைக்கு ஓர் ஸ்திரமான அடித்தளத்தை அமைத்துக் கொள்ள எண்ணுகின்றீர்களா? அதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். மிட்சுயி, அட்லஸ் மற்றும் இனோடே போஸேலானோ சீமெந்து சந்தைப்படுத்துபவர்களான சென்.அந்தேனிஸ் கொன்சோலிடேட் லிமிட்டெட்டிற்கு, யாழ் மாவட்டத்தில் சந்தைப்படுத்தல் துறைக்கு துடிப்பும் திறமையும் மிக்கவர்கள் கீழ் வரும் பதவிக்கு தேவைப்படுகிறார்கள்.

### பிரதேச விற்பனை பிரதிநிதி
(வட மாகாணம்)

உங்கள் கல்வித்தராதரம் சிறந்ததாகவும்,விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் கல்வித் துறையில் ஏதேனும் தகுதி பெற்றிருப்பீர்களாயின் நீங்கள் இப்பதவிக்கு பொருத்தமானவர். விண்ணப்பதாரர் 30 வயதை அண்மித்தவராகவும் விற்பனை துறையில் குறைந்தது 3வருட அனுபவம்மிக்கவராகவும் இருத்தல் வேண்டும்.

சீமெந்து/ஹார்ட்வெயார் பொருட்கள் சந்தைப்படுத்தலில் அனுபவம் பெற்றிருப்பின் அது மேலதிக தகைமையாக கொள்ளப்படும். அத்துடன் விண்ணப்பதாரர் ஆங்கில மற்றும் தமிழ் மொழிகளில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் மேலதிக நேரம் தொழில் புரியகூடியவராகவும் இலங்கையின் எந்தவொரு பகுதிக்கும் பிரயாணம் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.கட்டாயமாக சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரர் தனது சுயவிபரங்களுடன் உறவினர் அல்லாத அத்தாட்சிப்படுத்தும் இருவரின் விபரங்களுடனும் தனது விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி.

**செனட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட் H**

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.




பரிசில்கள்
விலைக்கழிவுகள்
குறைந்த வட்டி விகிதத்தில் தவணைக் கட்டணவசதிகள்

இவை மட்டுமலல.....
உங்களில் ஒருவருக்கு

அதிர்ஷ்டமோ அதிர்ஷ்டம்!

சிங்கர் வழங்கும்
கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான
Expo-Air இன் இருவழிப் பயணச்சீட்டு!




EXPOAIR your friend in the skies...

மேலதிக விவரங்களுக்கு :

சிங்கர் காட்சியறை
01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ☎:021 222 5408

SINGER
At Home World Wide


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# மறுக்கப்படும் கல்வி உரிமை

இலங்கையில் தமிழ், சிங்களப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பாகத் திடுக்கிடும் புள்ளி விவரத் தகவல்களை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வெளியிட்டிருக்கின்றார்.

கல்வித்துறையில் அடிப்படை வசதிகளில் முக்கியமானது வள ஆளணியினரான போதனாசிரியர்கள் வசதிதான். அந்த விடயத்திலே தமிழினத்துக்கு வாய்ப்பு, வசதிகள் மறுப்பு; சிங்கள இனத்துக்கோ தாராளம்.

முதலில் - பொதுவாக - தரம் ஒன்று முதல் ஐந்து வரை கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் புள்ளிவிவர அடிப்படையில் எடுத்துப் பார்ப்போம்.

தமிழ்ப் பகுதி பாடசாலைகளிலே பொதுப்பாடங்களைக் கற்பிக்க 16 ஆயிரத்து 224 பேர் தேவை. இருப்பதோ 12 ஆயிரத்து 519, மொத்தம் 3 ஆயிரத்து 705 பேருக்குப் பற்றாக்குறை.

இதேபோன்று தமிழ்ப் பாடசாலைகளில் 3 ஆயிரத்து 108 ஆங்கில ஆசிரியர் தேவை. மொத்தம் ஆயிரத்து 997 பேருக்குப் பற்றாக்குறை.

தமிழ்ப் பகுதிகளில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை வகுப்புக்களுக்கு போதனை மற்றும் பகுதிப் பொறுப்பாளர் பணிகளுக்கு மொத்தம் இருபதாயிரத்து 61 பேர் தேவை. ஆறாயிரத்து நூறு பேருக்குப் பற்றாக்குறை.

அதாவது, தமிழ்ப் பகுதி பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புக்களில் போதனாசிரியர் பற்றாக்குறை 30.41 வீதம்.

ஆனால், சிங்களப் பகுதிகளிலோ நிலைமை தலைகீழ். இந்தக் கீழ்நிலை வகுப்புகளில் பொதுப் பாடங்கள் போதிக்க அங்கு 41 ஆயிரத்து 237 பேர் தேவை. ஆனால், மேலதிகமாக 656 பேர் உள்ளனர். எனினும், ஆங்கில ஆசிரியர்களுக்கு - தமிழ்ப் பகுதிகளில் போலல்லாவிட்டாலும் - சிங்களப் பகுதிகளிலும் ஓரளவு பற்றாக்குறை இருக்கின்றதுதான்.

ஆனால், சிங்களப் பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையுள்ள கீழ்நிலை வகுப்புக்களில் ஆசிரியப் பற்றாக்குறை ஆக 2.27 வீதம் மட்டுமே.

இதுவே, தமிழ்ப் பாடசாலைகளில் 30.41 வீதமாக உள்ளது.

அதேபோன்று மேல்நிலை வகுப்புகளில் - தரம் 6 முதல் தரம் 11 வரையான வகுப்புகளில் - ஆசிரியர் பற்றாக்குறை தமிழ்ப் பாடசாலைகளில் 21.3 வீதமாகவும் சிங்களப் பாடசாலைகளில் 7.54 வீதமாகவும் உள்ளது.

இதையே, அண்மையில் முல்லைத்தீவில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற ஆசிரிய கௌரவிப்பு வைபவத்தில் உரையாற்றிய சமயம் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் சுட்டிக்காட்டினார்.

சிறுவர்களின் அடிப்படை உரிமைகளுள் முக்கியமானது கல்வி கற்பதற்கான உரிமையாகும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அது மறுக்கப்படாமல் வழங்கப்பட வேண்டும் என்கிறது சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா. சாசனங்கள்.

ஆனால், சிறுவர்களின் கல்விக்குத் தேவையான ஆசிரியர் பற்றாக்குறை இந்த நாட்டிலே தமிழினத்துக்கே உரிய ஒன்றாக வகுக்கப்பட்டு, அவர்களின் கல்வி உரிமை ஏதோ ஒரு வகையில் தடுக்கப்பட்டு வந்திருக்கின்றது; வருகின்றது.

1994இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்ற நாள் முதல் இந்த நிலைமையில் மாற்றம் ஏதும் இல்லை. தமிழரின் ஏனைய உரிமைகள் ஏதோ ஒரு வகையில் பறிக்கப்பட்டு வந்தது போன்று, கல்வி கற்பதற்கான உரிமையும் ஆசிரிய வள அணிப் பற்றாக்குறையைப் பேணுவதன் மூலம் மறுக்கப்பட்டே வந்துள்ளது.

சிறார்களின் உரிமைகளைப் புலிகள் பறிக்கின்றார்கள் என்று சர்வதேச சமூகத்துக்கு இட்டுக் கட்டிப் புளுகி, பிரசாரம் செய்துவரும் சந்திரிகா அரசு, தமிழ்ச் சிறார்களின் கல்வி கற்பதற்கான அடிப்படை உரிமையை மறுத்து வந்துள்ளது என்ற உண்மையை - புள்ளிவிவரங்களை பாட, வகுப்பு ரீதியான தகவல்களோடு - வெளியிட்டு அம்பலப்படுத்தியிருக்கின்றார் கல்விக் கழகப் பொறுப்பாளர்.

திறமை அடிப்படையில் (Merit) பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்ட ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும், எழுபது முற்பகுதியிலும் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். இதைத் தடுப்பதற்காகத் திட்டமிட்டு இனரீதியான - மாவட்டக் கோட்டா முறையை - சிங்கள அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்து, அதன் மூலம் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் தமிழரின் எண்ணிக்கையை ஒரே வெட்டாக வெட்டியது. அந்த வாய்ப்பை சிங்களவருக்குப் பெற்றுக்கொடுத்தது.

திட்டமிட்ட கல்வி உரிமை மறுப்பு நடவடிக்கைகளினாலும் இனப்போர் நலிவினாலும் தமிழ்ப் பிரதேசங்களில் கல்விநிலை வீழ்ச்சியடைந்து திறமைப் பெறுபேறு குறைந்துள்ள இந்தச் சமயத்தில், மாவட்டக் கோட்டா அடிப்படையில் தமிழருக்குக் கிடைக்கும் கொஞ்ச நஞ்ச பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பையும் வெட்டுவதற்காக மீண்டும் திறமை முறைத் தெரிவை அறிமுகப்படுத்த கங்கணம் கட்டி நிற்கிறது சிங்கள அரசு.

நமக்கென ஒரு நிர்வாக முறையை நாமே ஏற்படுத்திக் கொள்ளாதவரை - சிங்கள தேசத்தின் அதிகார வரம்புக்குள் அடிமைகளாக நாம் ஆட்பட்டிருக்கும் வரை - இத்தகைய உரிமை விவகாரங்களில் நமக்கு நீதி நியாயம் கிடைப்பது துர்லபமே.

# தமிழர் நலன்களுக்கு எதிராக இந்தியா செயற்படமாட்டாது

## பிரதமர் மன்மோகன் சிங் உறுதிமொழி



புதுடில்லி,நவ.14

ஈழத்தமிழர்களின் நலன்களுக்கு எதிராக இந்தியா செயற்படாது என அந்த நாட்டுப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்துள்ளார். கடந்த புதன்கிழமை புதுடில்லியில் தன்னைச் சந்தித்துப் பேசிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் வைகோவிடம் அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இலங்கையுடன் எந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் இந்திய அரசுசெய்து கொள்ளக்கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வைகோ வலியுறுத்திக் கூறினார். பலாலி விமானப் படைத்தளத்தை மீள் அமைப்பதற்கு உதவும் திட்டத்தையும் இலங்கைக் கடற்படைக்கு 'சரோயா' கப்பலை விற்கும் திட்டத்தையும் இந்தியா கைவிட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புக் குறித்து பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு எதிராக இந்தியா ஒருபோதும் செயற்படாது என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்தார் என்று கூறினார்.

"1995 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் குண்டு வீச்சுக்களை நடத்த இலங்கை விமானப்படை பலாலி விமானத்தளத்தைப் பயன்படுத்தி வந்தது. இப்போது தனது படைப்பலத்தை மேலும் அதிகரிக்க இலங்கை அரசு முற்படுகின்றது. இந்தத் திட்டம் யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கும் அரசுக்கும் இடையிலான சமநிலையை முறித்துவிடும். தமிழர்களின் பகுதிகளில் குண்டு வீச்சுக்களை நடத்த இலங்கை விமானப் படை இன்னும் பலாலித்தளத்தைப் பயன்படுத்தத் தயாராக இருக்கின்றது"- என்று பிரதமருக்குத் தான் சுட்டிக் காட்டினார் என்று வைகோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக அரசு நடத்தும் தாக்குதல்கள் குறித்து இந்திய அரசு தனது கண்டனங்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும் வைகோ கோரிக்கை வைத்துள்ளார். இந்த விவகாரங்கள் தொடர்பாக இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் நட்வர்சிங்கையும் சந்தித்துப் பேசியுள்ளார் வைகோ. (எ-க)

# ஊர்காவற்றுறைக்குத் தனியான கமநலசேவை நிலையம் தேவை

## பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,நவ.14

ஊர்காவற்றுறைப் பிரதேசத்துக்கென கமநல சேவை நிலையம் ஒன்று நிறுவப்படவேண்டும்.

- இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் உதவி அரச அதிபா பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் விவசாயப் போதனாசிரியர் பொ.பத்மநாதன் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், உதவி அரச அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகெண்ட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள்:-

அனலைதீவு, எழுவைதீவு, புளியங்கூடல், கரம்பன், தம்பாட்டி, நாரந்தனை போன்ற பல்வேறு விவசாயக் கிராமங்களை உள்ளடக்கிய ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் விவசாயிகளின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிக் கொளளக் கூடிய வசதிகள் செய்து கொடுக்கப் படவில்லை.

குறிப்பாக விவசாயம் குறித்த ஆலோசனைகள, உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதில் மேற்படி பிரதேச விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேணடியுள்ளது. குறிப்பாக, வேலணையில் உள்ள கமநலசேவை நிலையத்துக்கே இவர்கள் சென்று வரவேண்டியுள்ளது. அனலைதீவு, எழுவைதீவுப்பகுதி விவசாயிகள் இது விடயத்தில் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், விவசாயம் சார் ஆலோசனைகளை வழங்கவும், மேற்பார்வை செய்யவும், விவசாய உள்ளீடுகளை வழங்கும் பணிகளை மேற்கொள்ளவும் வசதியாக ஊர்காவற்றுறையில் கமநலசேவை நிலையம் ஒன்று நிறுவப்படவேண்டும். இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கவனம் செலுத்தவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதனை அடுத்து, கமநல சேவை நிலையம் ஒன்றை ஊர்காவற்றுறையில் நிறுவக்கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ)

# நெடுந்தீவில் பூசைகள் எதுவும் இன்றி மூடிக் கிடக்கும் இந்து ஆலயங்கள்

நெடுந்தீவு,நவ.14

நெடுந்தீவுப் பிரதேச ஆலயங்கள் பூசை வழிபாடுகள் இன்றிப் பூட்டிக்கிடக்கின்றன.

பூசைவழிபாடுகளை நிகழ்த்துவத்குரிய பூசகர்கள் இன்மையே இதற்குக் காரணமாகும்.

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கோயில், நெழுவினி சித்தி விநாயகர் கோயில் மற்றும் நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப்பிள்ளையார் கோயில், நெடுந்தீவு மத்தி பெருக்கடி விநாயகர் கோயில் உட்பட சுமார் 14 இற்கும் அதிகமான இந்து ஆலயங்கள் இவ்வாறு பூசை வழிபாடுகள் ஏதுமின்றி மாதக்கணக்கில் மூடிக்கிடக்கின்றன.

'பசுத்தீவு' என ஒரு காலத்தில் புகழ்ந்து கூறப்பட்ட நெடுந்தீவில் உள்ள ஆலயங் கள் பலவும் பூசை வழிபாடுகள் இன்றி மூடிகின்றமை பிரதேச மக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

இதற்கிடையில் - கடந்த வெள்ளியன்று கௌரி விரதம் அனுஷ்டித்த நூற்றுக்கும் அதிகமானோர் தமது ஆலயங்களில் பூசை வழிபாடுகள் இன்மையால் வழிபாடுகளுக்காக கடும் காற்று, மழைக்கு மத்தியில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்குச் சென்றிருந்தனர்.

எனவே, ஆலயங்களில் பூசை வழிபாடுகளை நடத்துவதற்கும், மக்கள் வழிபாடு நிகழ்த்திப் பயன் பெறுவதற்கும் வசதியாகச் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென நெடுந்தீவு வாழ் இந்துக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமயம் சார்ந்த கருத்துக்களை வெளியிட்டு வரும் அமைப்புக்களும் சமயப்பிரமுகர்களும் இது விடயத்தில் உடனடியாகக் கவனமெடுத்து இந்து சமயத்தவர்கள் பிறநெறிமுறைகளைத் தழுவாது தமது சமய பாரம்பரியங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - அவர்கள் கோரியுள்ளனர். (எ-112-204)

# வெள்ள நிவாரணம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.14

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுககுட்பட்ட பகுதிகளில் குடிசைகளில் வசிப்போருக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு வலி. தென்மேற்கு சன சமூக நிலையங்களின் சமாசம் விடுத்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் என்றுமில்லாதவாறு தொடர்ந்து மழை பெய்துவருகிறது. இதனால் குடிசைகளில் வசிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தொடர்ந்தும் மழை பெய்யுமானால் தொழில் பாதிப்பு முற்றாக ஏற்பட்டு வறுமைநிலை தீவிரமடையும் நிலை ஏற்படலாம்.

எனவே, கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விவரம் சேகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூகசேவை திணைக்களத்தின் ஊடாக வெள்ள நிவாரணம் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்- என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-185)

# கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் வலி.தெற்கில் கலை, இலக்கியப் போட்டி

யாழ்ப்பாணம்.நவ.14

வலி.தெற்குப் பிரதேச கலாசாரப் பேரவை கலை இலக்கியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

பிரதேச பண்பாடு, கலை, கலாசார அம்சங்களை வளர்க்கும் நோக்குடன் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என கலாசாரப் பேரவையின் தலைவரும், வலி.தெற்குப் பிரதேச செயலருமான எஸ்.திருவாகரன் அறிவித்துள்ளார்.

சிறுகதை, கவிதை, நாடக எழுத்துருவாக்கம், சித்திரம், சங்கீதம், நடனம், நாட்டார் பாடல் மற்றும் இசைக்கருவிகள் மீட்டல் ஆகிய போட்டிகள் இவ்வாறு நடதத்தப்படவுள்ளன.

திறந்த போட்டிகளாக நடத்தப்படவுள்ள இந்தப்போட்டிகளில் பங்குபற்ற விருமபுவோர் வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் அல்லது தங்கள் பிரிவு கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்று கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் தமது ஆக்கங்களை அடுத்த மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் "பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்றும் - பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (எ-204)

## நாளை


ஐப்பசி 30
திங்கட்கிழமை
(15.11.2004)
திதி: திருதியை
பின்னிரவு 2.30 வரை.
நட்சத்திரம் : மூலம்
பின் இரவு.04.08
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 12.07-01.37
ராகுகாலம்: 07.37-09.07
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

இரகசியமாகப் பேசிக்கொள்ளும் பேச்சும், உரத்த கூச்சலும் கேட்கத் தகுதியற்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண வணிக நிலையம் -யாழ்., யாழ்ப்பாண இரும்பகம் -யாழ்., கதிரவன் இரும்பகம் - சாவகச்சேரி ஆகியவற்றின் உரிமையாளரான யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட

## தர்மலிங்கம் பரராஜசிங்கம்

அவர்கள் 10-11-2004 புதன்கிழமை காலமாகிவிட்ட செய்திகேட்டு நாம் மிகவும் அதிர்ச்சியுற்றோம். இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**S.V.N. TRANSPORT**
135, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 13

(38592) (26-14-17)

## எழுவைதீவில் சந்தைக் கட்டடம் நிறுவ ஏற்பாடு

ஊர்காவற்றுறை,நவ.14

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் எழுவைதீவுப் பிரதேசத்தில் விரைவில் புதிய சந்தைக் கட்டடம் ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அண்மையில் எழுவைதீவுக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் ம.கிறிஸிரியூலியஸ் தலைமையிலான பிரதிநிதிகள் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் புதிய செயலாளர் இரா.லோகநாதனைச் சந்தித்து எழுவைதீவுப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் 'கலந்துரையாடலை அடுத்து இந்தப் பிரசேத்தில் விரைவில் புதிய சந்தைக் கடடடம் ஒன்றை நிறுவுவதற்கும் அதன் பின்னர் படிப்படியாக உள்ளூர் வீதிகள் அனைத்தையும் புனரமைப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் அவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

(எ-16)

## கிளிநொச்சி பணிமனைக்கு அலுவலக எழுதுவினைஞர் தேவை

எமது கிளிநொச்சிப் பணிமனையில் பணியாற்றுவதற்குப் பெண் அலுவலக எழுதுவினைஞர் தேவை. கல்வித் தராதரப்பத்திர உயர்தரத்தில் சித்தி எய்தியவர்களாகவும் கிளிநொச்சி நகரப் பகுதியில் வசிப்பவர்களாகவும் இருக்கவேண்டும். முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. கல்விச் சான்றிதழ்கள் சிபார்சு செய்யக்கூடிய இருவரின் நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 22-11-2004**
**உதயன் மனித வள சேவை,**
**386, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-39030)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 09 07 1924



இறப்பு 10 11 2004

## அமரர் தர்மலிங்கம் பரராஜசிங்கம்

(உரிமையாளர், யாழ்ப்பாண வணிக நிலையம் - யாழ்., யாழ்ப்பாண இரும்பகம் -யாழ்., கதிரவன் இரும்பகம் - சாவகச்சேரி)

### தர்மலிங்கம் பரராஜசிங்கம்

அவர்கள் 10.11.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார் என்பதை அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்
**ஜெகன் களஞ்சியம்**
**285, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

(38586) (26-14-17)


## LONDON LANGUAGE SCHOOL

"THE SCHOOL WITH GOLDEN TOUCH"

*New Batches*
Diploma in Professional English
(Especially for working staff)
Diploma in Communication English
(To improve your English Communication Skills, for students)
TOEFL / IELTS
French
Sinhala
Diploma in Geographic Information System
(First time in Jaffna Peninsula, especially for geography students)

**இலவசக் கருத்தரங்கு, பயிற்சி நெறி விளக்கம்**
**14.11.2004 10.30a.m., 2.30 p.m., 4.00p.m.**

இக்கற்கை நெறியில் பதிவுசெய்யும் எல்லா மாணவர்களுக்கும்
இலவசம்
Dip.in MS.Office
Basic Computer principles

தொடர்புகளுக்கு: இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 077 6176383, 0777 238605, 0777 222300

(38554) (42-14-17-26)



## விற்பனைக்கு

2005ஆம் ஆண்டு படக் கலண்டர்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

**கோணேஸ் கொமினிக்கேசன்**
மீசாலை,
T.P.:0777 754616
0602212977

(33589)


# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா சந்திரகாந்தன்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது ஜேர்மனியில் வாழ்ந்து வந்தவருமாகிய செல்லப்பா சந்திரகாந்தன் நேற்றுமுன்தினம் (12-11-2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புவனேஸ்வரியின் (வசந்தா) அன்புக் கணவரும் பிரிந்தா (ஜேர்மனி), பவிதா (ஜேர்மனி), பிரவீன் (ஜேர்மனி), பிரசன்னா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் தங்கமணியின் மருமகனும் தெய்வராசா, இராஜேஸ்வரி, இராசேந்திரன் (நீர்வேலி), மகேந்திரன், இலட்சுமிதேவி (பிரான்ஸ்), இராஜகுலேந்திரம் (ராசன் - ஜேர்மனி), ரஞ்சன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (ஜேர்மனி) 15-11-2004 திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி
T.P.: 077 6257965.

தகவல்:
செல்லத்துரை தங்கமணி
குடும்பம்.

(38588) (26-14-17)

## திருமதி கந்தையா பாக்கியம் (தங்கம்மா)



சுருவிலைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பாக்கியம் 11.11.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் கெங்காலட்சுமி (கனடா), மகேஸ்வரி, தேவலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் கனகசிங்கம், திருநாவுக்கரசு (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் லோகேஸ்வரன் - தாமரைச்செல்வி (கனடா), கருணேஸ்வரன் - மங்களராணி (ஜேர்மனி),திருக்கேதீஸ்வரன் - கௌசலாதேவி (சுவிஸ்), பரமேஸ்வரன் - கமலேசு (ஜேர்மனி), வசந்தகுமாரன் - கலாதேவி (கனடா), மதியழகன் - ரேவதி (கனடா), மதிவதனி - தெய்வேந்திரன் (உரிமையாளர், நியூகலா பற்றரி ரேடிங் சென்டர், 87, மில்வீதி, வவுனியா), ரதிவதனி - முரளிதரன் (கனடா), பாஸ்கரன் - வானதி (பிரான்ஸ்), ரமேஸ் - ஜானகி (கனடா), சுரேஸ் - பேபி (லண்டன்), உமேஸ் - வாணி (கனடா), சதீஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்தியும் காலஞ்சென்ற சம்பந்தமூர்த்தியின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
இ.கனகசிங்கம்,
*(மருமகன்).*

(38587) (39-14-17-26)


## PRINCE

துருப்பிடிக்காத உலோக கிச்சன் சின்க்

### பிரின்ஸ்
### நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்:
**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**
காட்சியறை: 516. ஸ்ரீசங்கராஜ மாவத்தை. கொழும்பு 10. தொலைபேசி: 324261-5. 337283-5. 436779 பெக்ஸ்: 446554
295. காலி வீதி. கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யஸீர் அரபாத்தின் மறைவுக்குப்பின் பலஸ்தீன இலட்சியம் என்னவாகும்?

பலஸ்தீன மக்களின் விடுதலை நட்சத்திரமாக விளங்கிய அதிபர் யஸீர் அரபாத்தின் மறைவு பலஸ்தீனமக்களுக்கு மட்டுமல்ல அந்த மக்களின் எதிர்கால நல்வாழ்வில் அக்கறையுள்ள அரபுநாடுகளுக்கும் மற்றும் இதர உலக நாடுகளுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளார்.

பலஸ்தீன மக்களுக்கென ஒரு தனிநாட்டை உருவாக்கிவிட வேண்டும் என்ற தணியாத தாகத்துடன் 40 வருடங்களுக்கு மேலாக போராடி வந்த யஸீர் அரபாத் தமது கனவு நிறைவேறாமலே இவ்வுலகை விட்டு நீங்கிவிட்டார்.

அமைதிக்குப் பெரும் தடையாக இருந்துவரும மனிதர் என்று இஸ்ரேலியரால் வர்ணிக்கப் பட்டுவந்த அரபாத் அமைதித் தீர்வுக்கான அடிப்படைகளைப் பல வருடங்களுக்குப் பின்னர் உருவாக்கினார். ஆனால், அவருக்கு பின் வரும் தலைவர்களால் இந்த முயற்சியை உருப்படியாக முன்னெடுக்க முடியுமா என்ற கேள்வியும் அச்சமும் இப்பொழுது தலைதூக்கியுள்ளது.

பலஸ்தீனத்தின் சகல அதிகாரங்களையும் அவர் தமது கைக்குள் வைத்திருந்தார். அதே விதமான சக்தி படைத்த தலைவர் ஒருவர் உருவாக முடியுமா என்பது இன்றைய கேள்வியாகவுள்ளது.

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம், சுயாட்சி பலஸ்தீன அதிகாரசபை ஆகிய இரு அரசியல் பிரிவுகளிலும் அவரது ஆதிக்கம் இருந்து வந்தது. தனக்குப் பின் வரக்கூடிய தலைவர் ஒருவரை அவர் தயார்ப்படுத்தி வரவில்லை. அதனால், உள்ளுக்குள் அதிகாரப் போட்டிகள் வலுப்பெற்று அமைதி முயற்சிகளை சீர்கெடுத்து விடுமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது.

### மூளையில் இரத்தக் கசிவு

அரபாத் கடந்த ஒருவார காலமாக 'கோமா' நிலையில் இருந்துவந்தார். அவருடைய கல்லீரல் மற்றும் சிறுநீரகம் பழுதடைந்திருந்தது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 75 வயதான அரபாத்திற்கு கடந்த செவ்வாயன்று மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து வியாழன் அதிகாலையில் அவர் காலமானார்.

இஸ்ரேலியர்களால் வெறுக்கப்பட்ட அரபாத் பலஸ்தீன மக்களால் உயிருக்குயிராய் நேசிக்கப்பட்ட தலைவராய்த் திகழ்ந்தார்.

அவரது இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகள் புதன் அன்றே கெய்ரோவில் தொடங்கி விட்டது. அவரது உடல் தெற்குக் கரையில் உள்ள ரமலாவில் இயங்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் அடக்கம் செய்யப்படும்.

ரமலாவில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் யஸீர் அரபாத்தைப் புதைக்க இஸ்ரேல் அனுமதி அளித்துள்ளது. இது தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் தலைமையில் புதன் கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தேவையற்ற மோதலையும் வன்முறையையும் தவிர்க்க முறைப்படி அரபாத்தின் உடலை ரமலாவில் புதைக்க அனுமதி அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

யஸீர் அரபாத் அவர்கள் தமது கடைசிக் காலத்தை மேற்குக்கரை நகரமான ரமலாவில் இஸ்ரேலியரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் ஒரு கைதிபோன்று வாழ்ந்துவந்தார். பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் தலைமைப் பணிமனையிலிருந்து அவரால் வெளியேற முடியாதபடி இஸ்ரேலியத் தாங்கிகள் சுற்றிவளைத்துக் கொண்டிருந்தன. அந்த இடத்தில் அவரது உடல் இப்பொழுது அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

தாம் இறக்கநேர்ந்தால் ஜெருஸலேமிலுள்ள மசூதியில் அடக்கம் செய்யப்படவேண்டும் என்ற அவரது விருப்பத்தை இஸ்ரேலியர் நிறைவேற்ற அனுமதிக்கவில்லை.

பலஸ்தீனமக்களுக்கு மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் அவர். ஏனைய பலஸ்தீனர்கள் எவ்வாறு வாழ்கிறார்களோ அதேவிதமாக சிக்கனமான வாழ்க்கையை நடத்தினார். பலஸ்தீனியர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தினார் அவர். இதனால்தான், அவரின் இழப்பை தாங்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது என்று பலஸ்தீன வெளிநாட்டமைச்சர் நபில்ஷாத் புதன்கிழமை கூறினார். அரபாத்தின் உடல் அடக்கம் செய்யப்படும் போது அங்குவரும் அரபு நாட்டுத் தலைவர்களில் இஸ்ரேலியருடன் போராடும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருந்தாலும் அனுமதிக்கப்படுவார்கள் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அதேசமயம் அரபாத்தின் உடலை ஜெருஸலேமில் அடக்கம் செய்யவும் அனுமதிக்கப்படலாம், இரு தரப்பினருக்குமிடையில் சமாதானம் ஏற்பட்டதின் பின்னர் என இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். யஸீர் அரபாத் குட்டையான மனிதர் தலையில் வழுக்கை. நிரந்தரமாகவே தாடி வைத்துக் கொண்டிருந்தவர். தலையில் கறுப்பு வெள்ளை நிறத்திலான அரபு தலைப்பாகையை அணிந்து கொள்வது அவரது வழக்கம். ஏனைய புரட்சிக்காரர்கள் போன்று அவர் தோற்றமளிக்கவில்லை. ஆனால், இடுப்பில் எப்பொழுதும் சுழல் துப்பாக்கி வைத்திருப்பார்.

### நோபல் பரிசு

ருநிஸில் நாடுகடந்து வாழ்ந்து வந்த அரபாத் 1994 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால பலஸ்தீன அதிகாரசபைத் தலைமையை ஏற்று நடத்துவதற்காகத் திரும்பி வந்தார்.

அக்காலத்தில் இஸ்ரேலிய பிரதமராய் இருந்துவந்த ஷிமோன் பெரசுக்கும் இவருக்கும் சமாதானத்துக்கான நோபேல் பரிசு வழங்கப் பட்டது.

ஆனால், பாலஸ்தீன நாடு ஒன்றை உருவாக்குவதற்காக 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற அமைதிக்கான உச்சி மாநாடு, ஜெருசலேம் நகரின் எல்லைகள், அதன் இறைமை தொடர்பாகவும், 1948 போரிலிருந்து அகதிகளாக இருந்துவரும் பலஸ்தீனர்களின் பிரச்சினை தொடர்பாகவும் ஏற்பட்ட கருத்துமோதல்களையடுத்து முறிந்துபோயிற்று.

மீண்டும் மோதல்கள் வெடித்தன. இஸ்ரேலியர்கள் மேற்குக் கரையில் மீளவும் ஆக்கிரமித்தார்கள் அல்லது சுற்றிவளைத்துக் கொண்டார்கள். அரபாத்தின் பட்டா அமைப்பையும் ஏனைய எதிர் அமைப்புக்களையும் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து தற்கொலை தாக்குதல்களை நடத்தத் தொடங்கினார்கள்.

வன்முறையை அரபாத் தூண்டி விடுகிறார் என்ற இஸ்ரேலியரின் குற்றச்சாட்டை அவர் மறுத்து வந்தார். அவரை ஓரங்கட்டுவதற்கு அமெரிக்கா எடுத்த முயற்சிகளை அவர் முறியடித்தார்.

### யார் புதிய அதிபர்?

பலஸ்தீனத் தலைவர்களின் அவசரக் கூட்டமொன்றில் அரபாத்திற்கு அடுத்தபடியான தலைவர் விடயத்தில் மோதல்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டப்படி நடந்து கொள்வதென்றும், அதிகம் பிரபல்யமில்லாத நாடாளுமன்ற சபாநாயகரை பலஸ்தீன அதிகாரசபையின் காபந்து அதிபராக அமர்த்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

சபாநாயகர் ராவுஹி பட்டோஜ் இப் பதவிக்கு பொருத்தமானவர் அல்லவென்று பல பலஸ்தீனியர்கள் நினைக்கிறார்கள். சட்டத்தின் மூலம் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க 60 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பலஸ்தீனத் தலைவர்கள் ஒற்றுமையுடன் இருக் கிறார்கள் என்பதைக் காட்டிக் கொள்ள அவர்கள் பெரிதும் விருப்பம் கொண்டுள்ளார்கள்.

பட்டோஹ் 60 நாள்களுக்கு காபந்து நிலையில் பதவி வகிப்பார். அதன் பின்னர் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால், இப்போதுள்ள பாதுகாப்புப் பிரச்சினையில் தேர்தல் நடத்துவது சாத்தியமில்லையென்று கருதப்படுகின்றது. எனவே, நாடாளுமன்றமே புதிய அதிபரைத் தெரிவு செய்யக்கூடியதாக சட்டத்தை மாற்றி விடலாம் எனச் சிலர் யோசனை கூறியுள்ளார்கள்.

அதே சமயம் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் தலைவர் பதவிக்கு யாரை நியமிப்பது என்ற பிரச்சினையும் எழுந்துள்ளது. அரபாத்தின் அடக்கம் முடிவுற்றதும் பி.எல்.ஓவின் 18 பேர்கொண்ட நிர்வாகக்குழு கூடி அதன் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று சாஎம். எரக்கத் என்ற அமைச்சர் கூறியிருக்கிறார். இப்பதவி முன்னாள் பிரதமர் மக்மூத் அப்பாஸுக்குப் போகும் என்று நம்பப்படுகின்றது.

ரமலாவில் அரபாத்தை அடக்கம் செய்வதற்காகத் துப்புரவு செய்யப்பட்ட இடத்தில் ஒரு மசூதி எழுப்பப்படும் என்றும் அரபாத்தின் கல்லறை மசூதிக்குள் இருக்கும் என்றும் ஒரு பலஸ்தீன பிரமுகர் கூறினார்.

### பலஸ்தீனர்களின் இன்றைய நிலை

அரபாத் மரணமான நிலையில் இனி மேலும் போரைத் தொடர்வதா அல்லது பேச்சுக்குத் திரும்புவதா என்ற நிலைக்கு பலஸ்தீனர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என விமர்சகர்கள் கருதுகின்றார்கள். இஸ்ரேலினுடனான போரினால் எதுவும் சாதிக்கப்பட முடியாது. அவர்களின் கனவுகள் ஒருபோதும் நனவாகப் போவதில்லை. அதனால், இஸ்ரேலுடன் பேச்சுக்களை நடத்துவதே இப்போதுள்ள சிறந்த வழிஎன்று அவர்கள் கூறுகிறார்கள்.

கேம்ப் டேவிட் பேச்சுக்களில் இருந்து வெளியேறிய போது எமக்கு வழங்கப்படவிருப்பது போதாது என்று அரபாத் கூறியிருந்தார். பின்னர் ஒருபுறம் போராட்டம் மறுபுறம் பேச்சு என்ற உத்தியை அரபாத் பின்பற்றினார். பல வருடங்கள் போராடினார், பின்னர் பேச்சுக்களில் ஈடுபட்டார்.

வரலாற்றிற்குரிய பலஸ்தீனம் முழுவதையும் மீளப் பெற்றுவிடுவது அவரது நோக்கமாகவிருந்தது.

இப்போதைய சூழ்நிலையில் காஸாப் பகுதியை பலஸ்தீனர்கள் திரும்பப் பெறுவார்கள் என்று அவதானிகள் கருதுகிறார்கள். ஆனால், அவர்களின் தனி[illegible] தோன்றுகின்றது.

இஸ்ரேலியப் பிரதமராயிருந்த கோல்டா மெயர் ஒரு தடவை கூறினார். "பலஸ்தீன மக்கள் என்று கூறுவதற்கு அப்படி ஒன்றுமில்லை" அந்த நிலை இன்று இல்லை. அந்த அளவுகத்கு பலஸ்தீன மக்களை உயர்த்தியவர் யஸீர் அரபாத்.

இன்றுள்ள நிலையில் பலஸ்தீனர்கள் அனைவரும் குழுச்சண்டைகளை கைவிட்டு ஒன்று திரண்டு நிற்கவேண்டும் என்பது அவசியமாகின்றது. ஆனால், ஒற்றுமைக்கான சாத்தியம் தென்படவில்லை. அப்படியானால் பலஸ்தீனப் பிரச்சினை தீர்வதற்கு இன்னும் நெடுங்காலம் பிடிக்கலாம்.

### பிளயரின் அமைதி முயற்சி?

அரபாத் மறைவின் சூட்டோடு மத்திய கிழக்கில் ஓர் அமைதி முயற்சியில் ஈடுபட பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளயர் முன்வந்திருப்பதாகச் செய்தி வந்துள்ளது.



அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை கடந்த வியாழக்கிழமை சந்திக்கவிருந்த பிளெயர் மத்தியகிழக்கின் அமைதி முயற்சியையே ஒரு சொந்த முக்கியப் பிரச்சினையாக அமெரிக்க அதிபருடன் எடுத்துக் கொள்ளப்வோவதாக லண்டனில் தொழிற்கட்சிக் கூட்டமொன்றில் அவர் தெரிவித்திருந்தார்.

பிளெயரின் வாஷிங்ரன் விஜயத்தின் மூலம் மத்திய கிழக்குப் பிரச்சினையில் புதிய திருப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என நோக்கர்கள் கருதுகிறார்கள்.

பிரி.பிரதமரின் அமெரிக்க விஜயம் பற்றி கேள்வியுற்ற அதிபர் புஷ்ஷின் தந்தையார் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் பின்வருமாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

"பிளயருக்கு இங்கு நல்ல வரவேற்பு இருக்கு. அவர் சொல்வதை இங்கு எல்லோரும் கேட்பார்கள். முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன. பலஸ்தீன நாடொன்று இருக்கவேண்டும் என்று கூறிய முதல் மனிதர் இந்த ஜனாதிபதிதான் என்பதை மக்கள் மறந்துவிடுகிறார்கள். பலஸ்தீனத் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுமானால், நாம் இன்னும் வெளிப்படையாகவும் நம்பிக்கையாகவும் செயற்படலாம்'' என்று.

### கொள்கையில் மாற்றம் இல்லை

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தமது வெளிநாட்டுக் கொள்கையில் எதுவித தளர்வு நிலையையும் பின்பற்றப்போவதில்லை என்று அவரது இராஜாங்க அமைச்சர் கொலினபவல் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் பாதுகாப்பு, உலகப் பயங்கரவாதம் என்ற கோஷங்களுடன் தேர்தலில் இறங்கி வெற்றிபெற்றுள்ள புஷ் தமது இறுக்கமான நெகிழ்ந்துகொடுக்காத போக்கைத் தொடர்வார் என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. அது இப்பொழுது கொலின் பவலால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பயணத்தைத் திருப்புவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அது அவருடைய கொள்கை, கோட்பாடு, நம்பிக்கை" என்று கொலின் பவல் கூறியுள்ளார். அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை, சவால்களை எதிர்நோக்கும் விடயங்களில் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டதாகவே எப்பொழுதும் இருந்துவந்துள்ளது. அதே வழியில் தான் அதிபர் தொடர்ந்து முன்னேற விருக்கிறார் என்றார் பவல்.

## போர் தொடருமா அல்லது பேச்சுக்கள் மலருமா?

## பலுஜாவைப் பிடித்து விட்டால் ஈராக்கில் தேர்தல் சாத்தியம்!

### உலக வலம் — மேனா

### ஈராக் தேர்தல்

ஈராக்கில் எதிர்வரும் ஜனவரியில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு வசதியாக கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பலூஜா நகரைப் பிடிப்பதற்கு ஈராக்கியப் பிரதமர் அலவியின் உத்தரவின்படி அமெரிக்கப்படைகளும் ஈராக்கியப்படைகளும் மிக வேகமாக செயற்பட்டு வருகின்றன.

பலூஜா நகரின் மிகமுக்கிய பகுதிகள் முன்னேறும் படைகளிடம் வீழ்ச்சியுற்றுள்ளன. இந்த நகரங்களில், பணயக் கைதிகள் வைத்திருக்கப்பட்ட இடங்களும், கொலை செய்யப்பட்ட இடங்களும் அமெரிக்கக் கூட்டுப்படைகளிடம் சிக்கியுள்ளன. கைதிகளை மூடியிருந்த கறுப்புத் துணிகள் மற்றும் பொருள்கள் இங்கு சிக்கியுள்ளனவாம். இதேசமயம் தாக்குதலை நிறுத்தாவிட்டால் பிரதமர் அலவியின் உறவினர்களைக் கொல்லப்போவதாகத் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

என்னவிலை கொடுத்தாகிலும் பலூஜாவை கிளர்ச்சியாளர்களிடமிருந்து விடுவித்து விடுவதென்று பிரதமரும், கூட்டணிப் படைகளும் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஈராக்கின் வடபகுதியில் மோதல் நகரில் கிளர்ச்சியாளர்கள் அமெரிக்கப்படை நிலைகளை நோக்கிப் பீரங்கிகளை நிலைநிறுத்திவருவதாக தகவல்கள் கூறின.

அமெரிக்கப் படைகள் ஈராக்கிய படைகளுடன் சேர்ந்து வீட்டுக்கு வீடு நகர்ந்து முன்னேறிக் கொண்டிருப்பதாக தகவல் வந்துள்ள அதே வேளை இந்த வார இறுதிக்குள் பலூஜாவைப் பிடித்துவிடப்போவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

எல்லாமே திட்டப்படி நடைபெறுமானால் 48 மணிநேரத்தில் முழுநகரமுமே எமது கட்டுப்பாட்டில் வந்துவிடும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கில் இப்பொழுது இடம்பெற்றுவரும் கார்க்குண்டு வெடிப்புக்களுக்கும் தற்கொலை தாக்குதல்களுக்கும் பீரங்கித் தாக்குதல்களுக்கும் பலூஜா நகரமே கிளர்ச்சியாளர்களுக்கு தளமாகப் பயன்பட்டு வருவதாகக் கருதப்படுவதால் அந்த நகரைத் தம்வசம் கொண்டுவர ஈராக்கிய பிரதமர் விரும்புகிறார். அவரது வேண்டுகோளையடுத்து பலூஜா நகரம் மீது பெரும் எடுப்பில் விமானக்குண்டுத் தாக்குதல்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் கூட்டணிப் படைகள் ஆரம்பித்தன. "விடியற்காலை நடவடிக்கை" என்று பெயரிடப்பட்டுள்ள தாக்குதல் கடந்த திங்களன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேகத்தில் தீவிரவாதிகளும் செயல்பட்டுவருவதாக தகவல்கள் கூறுகின்றன. பிரதமரின் ஒன்றுவிட்ட சகோதரன் அவரின் மனைவி அவர்களின் மருமகள் ஆகியவர்களை கார்களில் வந்த தீவிரவாதிகள் பக்தாத்தில் வைத்து கடத்தியுள்ளார்கள். இதேசமயம், பக்தாத்தில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றி உடனுக்குடன் அமெரிக்க வெள்ளைமாளிகையில் அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷிற்கு அறிவிக்கப்பட்டுவருகின்றன.

பலூஜாவில் எல்லாம் திட்டமிட்டபடி நடைபெற்றுவருவதாகத் தகவல் கிடைத்திருப்பதாக அவர் கூறினார்.

பலூஜாவைப் பிடித்துவிட்டால் தீவிரவாதிகளின் கொட்டத்தை ஓரளவுக்கு கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விடலாம் என்றும் அதன்பின்பு திட்டமிட்டபடி ஈராக்கில் தேர்தலை நடத்தலாம் என்றும் புஷ்ஷும் அவரது நட்பு நாடுகளும் நம்புகின்றன.

பலூஜாவுக்குப் பிறகு என்ன நடக்கும் என்பது தீவிரவாதிகளுக்கு மட்டுமே தெரியும்.

★ ★ ★

### காமகோடி சங்கராச்சாரியார்

தமிழ் நாட்டில் காஞ்சி காமகோடி பீட சங்கராச்சாரிய சுவாமிகள் கைதாகியிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகள் இந்துக்கள் மனங்களை பெரிதும் துன்பத்துக்குள்ளாக்கியுள்ளன.

தென்நாட்டில் காஞ்சிகாமகோடி பீடம் மிகப் பிரசித்தமானது. புனிதமாகக் கருதப்பட்டுவந்தது.

காமகோடி பீடத்தின் பெரியவர் உயிருடனிருந்த காலத்தில் அவர் ஒரு தெய்வத்துக்கு சமமாக மதிக்கப்பட்டுவந்தார். அவர் மறைவுக்குப்பின் பட்டத்துக்கு வந்த இன்றைய சுவாமிகள் ஆரம்பகாலம் முதற்கொண்டே சர்ச்சைக்குரிய விடயங்களில் தலையிடுவதாகவும் அரசியலில் அக்கறை காட்டுவதாகவும் முறைப்பாடுகள் எழுந்ததுண்டு.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீடு விற்பனைக்கு

யாழ். மெமோறியல் வீதியில் பாடசாலைக்கு அருகிலுள்ள 28B இலக்கத்தில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. 34 லட்சம்.

தொடர்பு: 0777 975517 0112 361733 (சி-38975) (24)

## அமெரிக்கன்கிறீன் காட் விசா 2006
## U.S. GREEN CARD LOTTERY VISA (DV 2006)

"வருடந்தோறும் 55,000 பேருக்கு அமெரிக்காவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு விசா வழங்கப்படுகின்றது. சென்ற வருடத்தில் இருந்து இதற்கான விண்ணப்பங்கள் இணையத்தளத்தின் மூலம் மட்டுமே ஏற்கப்படுகின்றது. புகைப்படங்களையும் இணையத்தின் (INTERNET) மூலமே அனுப்பி வைக்கமுடியும"

இந்தவருடத்துக்கான விண்ணப்பக் காலம் 2004 November 5 தொடக்கம் January 7 ஆகும்.

யாழ். மாவட்டத்தில் தனித்துவமான இணைய (INTERNET) சேவைகளை வழங்கி வரும் நாம் குறைந்த கட்டணத்தில் துல்லியமான முறையில் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கின்றோம்.

விண்ணப்பங்கள் சென்றடைதல் உங்கள் முன்னாலேயே உறுதிப்படுத்தப்படும். மேலதிக தகவல்களுக்கு Speed InterNet Browsing, Image Scanning, Printing, CD Writing, Net 2Phone போன்ற சேவைகளை ஒரே இடத்தில் தரமாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:

**FOCUS NET CAFE**

120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்
(இந்து மகளிர் கல்லூரி முன்பாக) (38531)(39)

## நெஞ்சகலாத நினைவலைகள்




தோற்றம் 12.12.1940 மறைவு 14.11.2001
தோற்றம் 07.06.1940 மறைவு 23.07.1985

திரு. திருமதி
**(சறோஜினி) பீற்றர் தேவதாஸ்**

அன்போடு ஆதரித்து அரவணைத்தீர்
பண்போடு வாழ்ந்து மறைந்து விட்டீர்
இன்றோடு 3+16 ஆனாலும் நினைவலைகள்
எம்மோடு என்றுமே நிறைந்தே இருக்கும்.

28, சோமசுந்தரம், அவெனியூ,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(38550)(39)

அன்புடன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 03 - 1934
மறைவு 26 - 10 - 2003

திருமதி **இரத்தினம் பரமேஸ்வரி**

திதி:14.11.2004

அன்பின் சிகரமாய் அனைவருக்கும் ஆறுதலாய்
புன்னகையால் உலகாண்ட பூவையே!
ஆண்டொன்று ஆன போதும்
ஆற்றமுடியவில்லை எம் துயரம்,
சொந்தங்கள் நாமிங்கே சேர்ந்து நிற்கையிலே,
பந்த பாசங்களைத் துறந்து பரமனடி சேர்ந்தாயோ?
உன் நீண்ட துயிலின் நினைவுகளுடன் வாழ்கின்றோம்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

47,முருகமூர்த்தி வீதி.
வண்ணார்ப்பண்ணை,
யாழ்ப்பாணம். (38553)(39)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# பல வருடங்களாக வீதிகள் புனரமைக்கப்படவில்லை

கோண்டாவில்,நவ.14

கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு பின்புறமாகவுள்ள செல்வபுரம் பகுதியில் பல வருடங்களாக வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதிகளில் உள்ள குழிகளில் மழைகாலங்களில் நீர்தேங்கி நிற்பதால் அந்த வீதிகளினூடாகப் பயணம் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது.

இந்தக் கிராமத்தில் நோய் வாய்ப்பட்டவர்களை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்வதற்கு ஓட்டோ போன்ற வாகனங்கள்கூட அப்பகுதியூடாகச் செல்வதற்குப் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும், மழையில்லாத சாதாரண வேளைகளில் அப்பகுதியில் இருந்து பிரதான வீதியான பலாலி வீதிக்குச் செல்வதற்கு நீண்ட நேரமெடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10-49)

## எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் சிரமதானம்

சாவகச்சேரி,நவ.14

மாவீரர் தினத்தையொட்டி தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் கைதடி, சாவகச்சேரிப் பிரதேசங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளன.

கைதடியில் சித்த ஆயுள்வேத வைத்தியசாலையும், சாவகச்சேரியில் மாவட்ட வைத்தியசாலையும் சிரமதானம் மூலம துப்புரவு செய்யப்படவுள்ளன.

இச்சிரமதானப் பணிகள் பொது மக்களின் பங்களிப்புடன் செய்யப்படவுள்ளதாகவும் வீதிகள், பொது இடங்கள ஆகியனவும் துப்புரவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-31-203)

## சகாய விலையில் படகு இயந்திரங்கள்

யாழ்ப்பாணம்,நவ.14

மீனவர்களின் நன்மைகருதி படகு இயந்திரங்களைச் சகாய விலையில் வழங்குவதற்குக் கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் முன்வந்துள்ளது.

இம்மாத முடிவுக்குள் கொள்வனவு செய்யப்படுகின்ற யமஹா 9.9 குதிரை வலுப் படகு இயந்திரம், 15 குதிரை வலுப் படகு இயந்திரம் ஆகியவற்றை மேற்படி சம்மேளனத்தில் கொள்வனவு செய்பவர்களுக்கு ஐயாயிரம் ரூபா விலைக்கழிவு வழங்கப்படும் எனக் கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (10-12)

## கர்நாடக இசைக்கச்சேரி

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ். பல்கலைக் கழகக் கலைப்பீட இசைத் துறையின் ஏற்பாட்டில் கிழக்குப் பல்கலைக்கழக இசை விரிவுரையாளர் ஏ.கே. கருணாகரனின் கர்நாடக இசைக்கச்சேரி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-204)

## திருட்டு!

யாழ்ப்பாணம்,நவ.14

குடும்பத்துடன் கடற்கரைக்குச் சென்ற வேளையைப் பயன்படுத்தி வீட்டில் புகுந்த திருடன் முக்கிய ஆவணங்கள், பணம், உடுப்புகள் அடங்கிய பையைக் களவாடிய சம்பவம் ஒன்று பொலிகண்டி, குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசித்து வரும் வே.இருதயராஜா என்பவரது வீட்லேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையத்திலும் கடற்புலிகளின் அரசியல் துறை அலுவலகத்திலும் முறையிட... (10-204-70)

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 05.02.1918
இறப்பு 03.11.1986

அமரர்
**நாகமுத்து சிவப்பிரகாசம்**
(அம்பாள் மில் உரிமையாளர்)

பிரிவால் துயருறும்: மனைவி.
சீரணி நாகம்மாள் கோயிலடி,
சண்டிலிப்பாய். (38548)(39)

# ஆடை விற்பனைக்கு



இறக்குமதி செய்யப்பட்ட ஆடவர், மகளிர், சிறுவர்களுக்கான சகல விதமான, தரமான,

- ★ நவீன ஆடைகளும்,
- ★ உதைப் பந்தாட்ட உடைகளும்,
- ★ தொப்பிகளும்(எல்லா அளவிலும்)

விற்பனைக்கு உண்டு.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**MC TEX**
Millenium Super Market
61/10, Keyzer Street, Colombo -11
T.P.: 2335689, 2423985, 4736003

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 07 - 05 - 1922
உதிர்வு 17 - 10 - 2004

அமரர் **தங்கமுத்தம்மா நாகலிங்கம்**
(பிரபல செங்கண்மாரி வைத்தியர்)

"மண்ணில் பிறந்த பயன் மாநிலம் பின் நினைப்பது
என்றும் நினைக்க வைத்து மறைந்துவிட்ட அம்மாவே!
என்று காண்போம் உன்தன் அன்பு முகம்?
அன்பான அருள் வார்த்தை என்றும் எம் உள்ளத்தில்
நிலைத்து இருக்குதம்மா!"

17.10.2004 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் நாளை மறுதினம் (16.11.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து மோட்சபூசையும் நினைவுமலர் வெளியீடும் மலர் அன்பளிப்பும், மதியபோசன உபசாரமும் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அத்தருணம் நிகழ்வுகளில் பங்குகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் மிகவும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து எமது இல்லம் விரைந்துவந்து எமது வேதனை உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும், மரணச் சடங்கின்போது நேரில் வந்து உதவிகள் பல புரிந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், கடிதம், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

✪ தனிப்பட்டமுறையில் அழைப்பிதழ் வழங்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்:

... அம்மையார் வீதி,
சுன்னாகம். (சி-38997) (24)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

யாழ்ப்பாணம்,நவ.14

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப் பட்டோரில் சாவகச்சேரி (ஒரு பகுதி), பச்சிலைப்பள்ளி, மன்னார் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் பெயர் இங்கே பிரசுரமாகின்றன.

### சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

சா/ 1823 அருணாசலம் சிவசங்கரப்பிள்ளை
சா/ 1850 சிவகுரு இராமலிங்கம்
சா/ 1882 திருமதி. தங்கம்மா இராசையா
சா/ 1914 செந்தில்மணி செல்லத்துரை
சா/ 1922 பூதத்தம்பி இராஜநாதன்
சா/ 1980 வயிரமுத்து இரத்தினம்
சா/ 2024 திருமதி. சிவபாக்கியம் சச்சிதானந்தம்
சா/ 2054 கதிர்காமு கார்த்திகேசு
சா/ 2059 கந்தையா துரைராசா
சா/ 2105 கணபதிப்பிள்ளை சபாரத்தினம்
சா/ 2169 திருமதி. தங்கம்மா இராமலிங்கம்
சா/ 2207 பொன்னு சின்னத்தம்பி
சா/ 2225 செல்லையா யோகீஸ்வரன்
சா/ 2283 திருமதி. செல்லம்மா நமசிவாயம்
சா/ 2285 சின்னத்தம்பி பொன்னம்பலம்
சா/ 2287 சின்னத்தம்பி பொன்னம்பலம்
சா/ 2304 சின்னத்துரை செல்லத்துரை
சா/ 2310 செல்வி. நல்லம்மா செல்லையா
சா/ 2343 தம்பையா தம்பிராசா
சா/ 2347 தம்பு சரவணமுத்து பாலகிருஷ்ணமூர்த்தி
சா/ 2435 வினாயகமூர்த்தி சபாநாயகம்
சா/ 2478 சின்னப்பா நடராசா
சா/ 2544 வேதவனம் ஆறுமுகம்
சா/ 2565 இளையதம்பி பொன்னம்பலம்
சா/ 2582 கனகசபை சதாசிவம்
சா/ 2591 நாகலிங்கம் தர்மலிங்கம்
சா/ 2639 செல்லையா பீதாம்பரம்
சா/ 2669 காசித்தம்பி சரவணமுத்து
சா/ 2697 கந்தையா வீரசிங்கம்
சா/ 2768 இரத்தினம் பொன்னம்பலம்
சா/ 2803 சின்னையா வேலுப்பிள்ளை
சா/ 2817 தம்பன் சரவணை
சா/ 2837 சின்னத்தம்பி குமரேசு
சா/ 2928 கந்தையா வைத்திலிங்கம் இரவிதாசன்
சா/ 3002 கந்தையா சண்முகதாசன்
சா/ 3033 திருமதி. அன்னப்பிள்ளை செல்லத்துரை
சா/ 3036 வேலுப்பிள்ளை மகாலிங்கம்
சா/ 3040 திருமதி. தையல்நாயகி சுப்பிரமணியம்
சா/ 3097 திருமதி. சின்னம்மா சரவணமுத்து
சா/ 3115 கந்தையா விநாசித்தம்பி
சா/ 3202 சிற்றம்பலம் கந்தையா
சா/ 3209 வல்லிபுரம் கனகசிங்கம்
சா/ 3243 திருமதி. கனகாம்பிகை சரவணமுத்து
சா/ 3271 கந்தையா சுப்பிரமணியம்
சா/ 3273 அருணாசலம் சுப்பிரமணியம்
சா/ 3305 தில்லையம்பலம் திருச்செல்வம்
சா/ 3306 திருமதீ. பராசக்தி கந்தையா
சா/ 3341 கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை
சா/ 3418 இராமலிங்கம் பரமநாதன்
சா/ 3475 தம்பிப்பிள்ளை அப்பாக்குட்டி
சா/ 3483 செல்லையா பொன்னுத்துரை
சா/ 3674 கதிர்காமு கந்தையா
சா/ 3675 செல்லப்பா தம்பிப்பிள்ளை
சா/ 3678 அப்பாக்குட்டி செல்வராசா
சா/ 3708 வேலன் கணபதி
சா/ 3734 திருமதி. மங்கையக்கரசி சுப்பிரமணியம்
சா/ 3785 வல்லி அப்புக்குட்டி
சா/ 3801 திருமதி. பார்வதிப்பிள்ளை சுப்பிரமணியம்
சா/ 3825 கணபதிப்பிள்ளை கந்தையா
சா/ 3834 நல்லதம்பி வேலுப்பிள்ளை
சா/ 3945 வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
சா/ 4011 குமரேசு கதிரவேலு
சா/ 4094 திருமதி. வள்ளிப்பிள்ளை வல்லிபுரநாதர்
சா/ 4131 மயில்வாகனம் முருகேசு
சா/ 4140 வேலுப்பிள்ளை சின்னக்குட்டி
சா/ 4167 கணபதி கந்தர்
சா/ 4325 பொன்னையா கந்தையனார்
சா/ 4328 ஆறுமுகம் கதிரவேலு
சா/ 4335 குமாரசாமி சிதம்பரம்
சா/ 4358 சந்தியாப்பிள்ளை ஆரோக்கியநாதர்
சா/ 4364 கணபதிப்பிள்ளை ஞானேஸ்வரன்
சா/ 4459 திருமதி. சரஸ்வதி சிவபாதசுந்தரம்
சா/ 4555 நாகமுத்து கந்தையா
சா/ 4562 வீரகத்திப்பிள்ளை கதிரேசு
சா/ 4685 கந்தையா பொன்னையா
சா/ 4731 திருமதி. செல்லமுத்து பெரியதம்பி
சா/ 4733 என்றி அந்தோனிப்பிள்ளை பெர்னான்டோ
சா/ 4741 கந்தவனம், கணேசலிங்கம்
சா/ 4779 அம்பலவாணர் செல்லத்துரை
சா/ 4830 சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
சா/ 4864 அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து
சா/ 4867 நல்லையா கனகரத்தினம்
சா/ 4873 மயில்வாகனம் முத்துவேலு
சா/ 4899 சிதம்பரப்பிள்ளை பொன்னையா
சா/ 4921 சின்னத்தம்பி விநாயகமூர்த்தி
சா/ 4965 திருமதி. பூரணம் இராசையா
சா/ 5189 கதிர்காமர் பொன்னையா
சா/ 5231 கணபதிப்பிள்ளை இராஜேந்திரம்
சா/ 5236 கந்தையா நாகேஸ்வரன்
சா/ 5308 பெனடிக் யோசேப்ராஜா
சா/ 5382 ஆறுமுகம் கந்தையா
சா/ 5436 கணபதிப்பிள்ளை நடராசா
சா/ 5486 வேலுப்பிள்ளை செல்லையா
சா/ 5490 கந்தையா கணபதிப்பிள்ளை
சா/ 5510 ஆறுமுகம் கதிரவேலு
சா/ 5622 சீனிவாசகம் அரசு
சா/ 5625 சின்னத்தம்பி விசுவநாதர்
சா/ 5662 செல்லம்மா இராசேந்திரம்
சா/ 5669 திருமதி. செல்வதி இராசையா
சா/ 5670 திருமதி. சிவபாக்கியம் பொன்னம்பலம்
சா/ 5687 திரு. ஆறுமுகம் வேலுப்பிள்ளை
சா/ 5709 குகதாசன் கமலதாசன்
சா/ 5710 சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை
சா/ 5713 தில்லையர் வேலாயுதர்
சா/ 5834 தம்பன் கந்தையா
சா/ 5853 கந்தப்பு சின்னையா
சா/ 5982 ஆறுமுகம் செல்லையா
சா/ 6166 மயில்வாகனம் பரமநாதர்
சா/ 6168 நாகலிங்கம் கனகசபாபதி
சா/ 6223 இளையதம்பி ஞானரட்ணம்
சா/ 6239 சின்னத்தம்பி ஆறுமுகம்
சா/ 6259 பொன்னையா முத்தையா
சா/ 6498 சின்னப்பா சின்னத்தம்பி
சா/ 6551 கார்த்திகேசு சபாபதி
சா/ 6556 கதிரவேலு சின்னையா
சா/ 6592 சின்னவன் வேலன்
சா/ 6621 கார்திகேசு சண்முகம்
சா/ 6668 நல்லையா சிவஞானம்
சா/ 6683 கந்தையா சுப்பிரமணியம்
சா/ 6687 செல்லையா யோகரத்தினம்
சா/ 6774 வேலாயுதம் கதிர்காமு
சா/ 6806 திருமதி. யோக்கியம் வேலுப்பிள்ளை
சா/ 6858 குஞ்சர் செல்லையா
சா/ 6883 பொன்னையா இராசையா
சா/ 6995 பொன்னையா இராசையா
சா/ 6996 சங்கரப்பிள்ளை மயில்வாகனம்
சா/ 7071 மாப்பாணர் சரவணமுத்து
சா/ 7112 செல்லப்பா வேலுப்பிள்ளை
சா/ 7126 திருமதி. ஜெபமணி கிருபைநாயகம்
சா/ 7173 சுப்பிரமணியம் சின்னத்தம்பி
சா/ 7261 கணபதி சின்னப்பொடி
சா/ 7276 திருமதி. ஆச்சிப்பிள்ளை சின்னையா
சா/ 7298 அம்பலவாணர் சந்திரசேகரர்
சா/ 7333 திருமதி. நாகம்மா மாணிக்கம்
சா/ 7354 கதிர்காமு மார்க்கண்டு
சா/ 7428 சின்னப்பொடி ஏரம்பு
சா/ 7476 முத்துத்தம்பி தம்பையா
சா/ 7487 தம்பிப்பிள்ளை வைகுந்தா
சா/ 7532 சிதம்பரி மீனாசி
சா/ 7553 இராமலிங்கம் துரையப்பா
சா/ 7587 சரவணமுத்து அருணாசலம்
சா/ 7594 தம்பையா வைத்திலிங்கம்
சா/ 7611 அம்பலவாணர் கந்தசாமி
சா/ 7622 பொன்னன் சின்னத்தம்பி
சா/ 7639 வைத்திலிங்கம் முத்துக்குமாரு
சா/ 7646 இராமு நல்லையா
சா/ 7653 திருமதி. அன்னப்பிள்ளை சுப்பிரமணியம்
சா/ 7760 திருமதி. மீனாம்பாள் கந்தையா
சா/ 7766 திருமதி. சிவபூசணம் சுப்பையா
சா/ 7772 திரு. கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை
சா/ 7780 செல்லையா வேலுப்பிள்ளை
சா/ 7782 காசிப்பிள்ளை கனகசபை
சா/ 7816 சின்னையா கோபாலப்பிள்ளை
சா/ 7820 சின்னத்தம்பி இராமலிங்கம்
சா/ 7845 திருமதி. செல்லம்மா அப்புத்துரை
சா/ 7908 திருமதி. பாக்கியம் தம்பிஜயா
சா/ 7912 திருமதி. சின்னம்மா வினாசித்தம்பி
சா/ 7959 தம்பிப்பிள்ளை நமசிவாயம்
சா/ 7963 திருமதி. லீலாவதி கனகசபை
சா/ 8011 திருமதி. இரத்தினம் சபாரத்தினம்
சா/ 8052 திரு. கார்த்திகேசு இராசையா
சா/ 8086 திருமதி. ருக்குமணி விக்கினேஸ்வரமூர்த்தி
சா/ 8163 கந்தன் சடையர்
சா/ 8184 காசிநாதர் முருகேசு
சா/ 8322 அம்பியர் வீரசிங்கம்
சா/ 8410 சாமுவேல் பரராஜசிங்கம் இராசையா
சா/ 8414 திருமதி. சிவபாக்கியம் பீற்றர்
சா/ 8431 திருமதி. தெய்வானைப்பிள்ளை சங்கரப்பிள்ளை
சா/ 8449 வேலாயுதம் முருகர்
சா/ 8453 வெலிச்சோர் இமானுவல்
சா/ 8511 வீரகத்தி செல்லையா
சா/ 8615 நாகன் கந்தப்பு
சா/ 8636 முருகேசு மார்க்கண்டு
சா/ 8643 திருமதி. நல்லம்மா இராமலிங்கம்
சா/ 8667 தம்பையா தம்பிராசா
சா/ 8669 செல்வி. பத்மலோஜினி இராசா
சா/ 8676 குஞ்சு தம்பு
சா/ 8723 அருணாசலம் ஆறுமுகம்
சா/ 8772 குமாரவேற்பிள்ளை இராமச்சந்திரன்
சா/ 8803 திருமதி. முத்தம்மா கைலாயப்பிள்ளை
சா/ 8982 சங்கரப்பிள்ளை சிவசம்பு
சா/ 8983 திருமதி. செல்லம்மா சிற்றம்பலம்
சா/ 8997 திருமதி. சிவகாமி கதிர்காமு
சா/ 9040 கனகசபை தம்பு
சா/ 9048 பண்டாரி பொன்னையா
சா/ 9081 திருமதி. அன்னப்பிள்ளை ஆறுமுகம்
சா/ 9096 கந்தையா துரைராஜா
சா/ 9139 கார்த்திகேசு முருகப்பா
சா/ 9155 திருமதி. சிவகாமி கந்தையா
சா/ 9266 திருமதி. செல்லம்மா மாணிக்கம்
சா/ 9364 திருமதி. நாகமுத்து சிவலை
சா/ 9405 இளையதம்பி கந்தையா
சா/ 9420 கந்தையா கிருஷ்ணர்
சா/ 9426 ஆழ்வான் அப்பக்குட்டி
சா/ 9438 சடாசிவம் சரவணமுத்து
சா/ 9446 திருமதி. வேதநாயகம் தியாகராஜா
சா/ 9456 தம்பு கணபதிப்பிள்ளை
சா/ 9521 கந்தையா தர்மலிங்கம்
சா/ 9534 செல்லையா சுந்தரம்
சா/ 9593 பொன்னம்பலம் அருணாசலம்
சா/ 9619 [illegible]
சா/ 9644 அருணாசலம் கந்தையா
சா/ 9652 கந்தன் வேலன்
சா/ 9662 கோபாலு சண்முகம்
சா/ 9678 திருமதி. குஞ்சுப்பிள்ளை சின்னத்துரை
சா/ 9701 திருமதி. சரஸ்வதி இளையதம்பி
சா/ 9763 திரு. இளையகுட்டி வீரகத்தி
சா/ 9788 வல்லிபுரம் வேலுப்பிள்ளை
சா/ 9791 திருமதி. திரவியம் கணபதிப்பிள்ளை
சா/ 9818 திருமதி. இராசம்மா இராசையா
சா/ 9867 திருமதி. செல்லமுத்து ஆறுமுகம்
சா/ 9877 சின்னப்பு கந்தையா
சா/ 9914 வல்லி கந்தையா
சா/ 9940 சுப்பையா பூபாலசிங்கம்
சா/ 9949 சுப்பையா அப்புத்துரை
சா/ 9971 கதிரித்தம்பி வாரித்தம்பி
சா/ 10056 சடையர் தம்பிஜயா
சா/ 10068 திருமதி. பாக்கியம் அண்ணாசாமி
சா/ 10077 திருமதி. மாணிக்கம் இரத்தினம்
சா/ 10080 திருமதி. புனிதவதி பொன்னம்பலம்
சா/ 10084 திருமதி. பராசக்திப்பிள்ளை மெய்கண்டதேவர்
சா/ 10111 வைத்திலிங்கம் சிவப்பிரகாசம்
சா/ 10181 அந்தோனி சொலமன்
சா/ 10200 சின்ராசா கிருஷ்ணமூர்த்தி

### பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

ப/ 124 சின்னையா கந்தையா
ப/ 184 சின்னத்தம்பி செல்லையா
ப/ 217 தீம்பையா செல்லத்துரை
ப/ 256 முத்தையா குழந்தைவேலு
ப/ 299 செல்லப்பா சேனாதிராசா
ப/ 347 திருமதி. தங்கம்மா அப்பாப்பிள்ளை
ப/ 379 வைரமுத்து கணபதிப்பிள்ளை
ப/ 387 சின்னத்துரை பாலசுந்தரம்
ப/ 639 கந்தையா காசிப்பிள்ளை
ப/ 701 சின்னர் கந்தையா
ப/ 805 சின்னக்குட்டி இராசையா
ப/ 860 கார்த்திகேசு வேலாயுதம்பிள்ளை
ப/ 964 இரப்பியல் எலியாஸ்

### மன்னார் உதவி அரச அதிபர் பிரிவு

ம/ 16 வாரித்தம்பி மகாலிங்கம்
ம/ 19 திருமதி. தெய்வானைப்பிள்ளை சுப்பிரமணியம்
ம/ 23 அய்யம்பிள்ளை அருணாசலம்
ம/ 38 சின்னத்தம்பி வயிரவநாதர்
ம/ 40 கயிலாயபிள்ளை ஆறுமுகம்
ம/ 43 பொன்னையா கோபாலபிள்ளை
ம/ 45 சீனித்தம்பி தம்பித்துரை
ம/ 49 தம்பு இரத்தினசிங்கம்
ம/ 52 வயித்திலிங்கம் அரியரத்தினம்
ம/ 61 மாரிமுத்து இரத்தினம்
ம/ 75 திரு. சிற்றம்பலம் முருகேசபிள்ளை
ம/ 92 ஐயாத்துரை இராசரெத்தினம்
ம/ 104 தம்பிப்பிள்ளை இராமுப்பிள்ளை
ம/ 110 திருமதி. விமலாதேவி குலசபாநாதன்
ம/ 120 ஐயாத்துரை சோமசுந்தரம்
ம/ 129 மனுவேல் கிறிஸ்தியான்
ம/ 133 குருசாமி வீரசிங்கம்
ம/ 182 கந்தையா மயில்வாகனம்
ம/ 184 இராமலிங்கம் செல்லத்துரை
ம/ 189 சேதுகாவலர் இராசையா
ம/ 207 சவிரி சேரம்யோசப்பு
ம/ 219 வேனாட் ஞானசேகரம்
ம/ 232 பொன்னையா சதானந்தன்
ம/ 244 தொம்மை சவிரிமுத்து
ம/ 264 விசயந்தி முடியப்பு
ம/ 289 தம்பிப்பிள்ளை செல்வரத்தினம்
ம/ 307 வீரவாகு முத்துக்குமாரு
ம/ 336 மிக்கல் பிலிப்பு
ம/ 341 திரு. அந்தோனி சந்தாம்பிள்ளைகொடுதோர்
ம/ 354 கந்தையா சண்முகநாதன்
ம/ 356 நாகலிங்கம் பொன்னம்பலம்
ம/ 379 நீலன் பொன்னு
ம/ 386 திரு. அடைக்கலம் வேதநாயகம்
ம/ 391 திருமதி. பாக்கியம் இரத்தினம்
ம/ 430 மிக்கேப்பிள்ளை கிறிஸ்ரோபர்
ம/ 432 யோன்பிள்ளை இராயப்பு
ம/ 443 இராயப்பு ஞானச்சந்திரன்
ம/ 468 மருசால்பிள்ளை சந்தாம்பிள்ளை
ம/ 485 தேவசகாயம் செபமாலை
ம/ 514 சிலம்புநாதபிள்ளை சபாரெத்தினம்
ம/ 521 அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து
ம/ 530 பிலேசியான் சவிரியப்புசோசை
ம/ 539 வயிரவி மகாலிங்கம்
ம/ 555 கந்தையா அருள்வாசகம்
ம/ 572 சுவக்கீன்பிள்ளை சந்தாம்பிள்ளை
ம/ 576 சந்தியோகு சுவாம்பிள்ளை
ம/ 597 கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
ம/ 601 சீமாம்பிள்ளை பிலிப்புப்பிள்ளை
ம/ 619 திருமதி. அந்தோனியா சுவாந்து
ம/ 637 சுவாந்தகுருஸ் நீக்கிலான்
ம/ 638 திருமதி. அந்தோனியா மனுவேல்
ம/ 642 நீக்கிலாப்பிள்ளை ஆரோக்கியம்
ம/ 643 கயித்தாம்பிள்ளை சந்தியாம்பிள்ளை
ம/ 644 தேவசகாயம் பிலிப்பையா
ம/ 657 அலைக்சாந்தர் அவுலீன்
ம/ 662 பாவிலு மரிசால்
ம/ 695 திருமதி. இரத்தினம் யோசேப்பு
ம/ 703 நாகமுத்து சுப்பிரமணியம்
ம/ 707 வீரபாகு சுப்பிரமணியம்
ம/ 708 வலோரியான் தவநேசன்
ம/ 709 மனுவல் செபரத்தினம்
ம/ 723 நாகமுத்து தம்பிராசா
ம/ 727 திருமதி. செல்லம்மா நாகமுத்து
ம/ 734 சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி
ம/ 750 சந்தான் ஞானப்பிரகாசம்
ம/ 755 திரு. இராமசேது கந்தையா
ம/ 769 முருகேசு பழனி
ம/ 777 சுப்பையர் கந்தையா

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகச் சொற்பொழிவு

குடத்தனை,நவ.14

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் ஆலயத்தில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'அவதாரமகிமை' என்னும் தலைப்பில் பருத்தித்துறை கலைஞர் வட்டச் செயலாளர் இ.பஞ்சலிங்கம் சொற்பொழிவாற்றுவார். (எ-78)


## வீடும், வளவும் விற்பனை

முன்னாள் வைத்திய கலாநிதி Dr. அ.தர்மலிங்கம் அவர்களின் மகளின், திருமதி வைத்திய கலாநிதி Dr.நவரட்டினத்திற்குச் சொந்தமான கணக்கர் சந்தி, இல.170, கொழும்புத்துறை வீதியில் உள்ள 2600 சதுர அடி வீடும் 4½ பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: சீ.கனகசபை.
0112 - 361405
0112 - 717526
(சி-39000) (26-14-19)

## மாபெரும் புத்தக விற்பனை
(நவம்பர் 22 முதல் 30 வரை)


நீண்டகாலமாக நீங்கள் எதிர்பார்த்திருந்த அரிய நூல்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், கல்விக் கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் அனைத்திற்கும் பயன்தரும் புத்தம் புதிய நூல்கள் அனைத்தும் தாமதமின்றி எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
வருட இறுதியில் வரும் வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்.
உங்கள் தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 -222 2573.
(சி-39010) (26-14-19)





# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 - 08 - 1925



மறைவு 26 - 10 - 2003

## அமரா கந்தசாமி செல்வராசா

திதி: 14-11-2004

அன்னாரது முதலாம் ஆண்டு சிரார்த்தம் இன்று (14-11-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். ஆகவே, அந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சந்தனதரை, உடுப்பிட்டி. (38582) (26-14-19)




## FASHION BEAUTY CORNER

Centre for Modern women -

✪ முக ஒப்பனை (make up) ✪ மணப்பெண் அலங்காரங்கள்
✪ கூந்தல் அலங்காரங்கள் ✪ சமையல் ✪ கேக் ஐசிங்
✪ திருமண வைபவ கேக் ஐசிங் & ஐசிங் மலர்கள்

இவை அனைத்துக்குமான பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 18-11-2004

☞ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
❖ இந்தப் பயிற்சி நெறிக்கு வயதெல்லை 16இற்கு மேல்
❖ முற்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.
❖ இந்தப் பயிற்சியானது பெண்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டது. எனவே, வேலைக்குப் போகும் பெண்களுக்கு நேர ஒழுங்குகள், வசதி செய்து தரப்படும்.
❖ முழுநெறியையும் கற்கின்ற மாணவிக்கு "இமை சீர் செய்வது எப்படி?" என்பது கற்றுக் கொடுக்கப்படும் (இலவசமாக).

*மேலதிக விவரங்களுக்கு:*
திருமதி ஜெயவாணி கஜேந்திரன்
இல.14, அம்மன் வீதி (வீரமாகாளி அம்மன் கோயில் முன் வீதி),
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
☎ 021 222 6864.
(சி-39011) (26-14-19)

## பொதி செய்யப் பெண் பிள்ளைகள் தேவை

முன்பு தொழிலகங்களில் பொதிகள் செய்து அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை.
தகைமை: G.C.E.(O/L) படித்தவர்கள் நற்சான்றிதழ்களுடன் உடனே நேரில்வரவும்.
சிவாநறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2567
(39016)(42)


## பல்கலைக்கழகப் பரீட்சையை வவுனியாவிலும் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள கல்வி முதுமாணிக் கற்கைக்கான தெரிவுப் பரீட்சைக்கு மேலதிகப் பரீட்சை நிலையம் ஒன்றை வவுனியாவிலும் அமைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஆசிரியர்கள் பள் தவணை முடிவு வேலைகள், பொதுப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் என்பவற்றைச் செய்ய வேண்டிய தேவையுள்ளதால் இந்தப் பரீட்சையை வவுனியாவிலும் நடத்த ஏற்பாடு செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளது. (எ-202)

## சாட்டி துயிலும் இல்லத்தில் இன்று சிரமதானம்

யாழ்ப்பாணம்,நவ.14

தீவக சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம் நடைபெறவுள்ளது. (எ-202)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.14

-தா.பாலகணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்குக் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (எ-202)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் கந்தசஷ்டி காலச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.14

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் கந்தசஷ்டி கால விசேட நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகின. இது தொடர்ந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

தினமும் மாலை தீர்த்தப் பூசையின் பின்னர் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேலின் சொற்பொழிவு இடம்பெறும்.

சொற்பொழிவு நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'இருவகை விளையாட்டு' என்ற தலைப்பிலும், நாளை திங்கட்கிழமை 'ஆறுமுக அமுதம்' என்னும் தலைப்பிலும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 'தொண்டர் பெருமை' என்னும் தலைப்பிலும் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

சூரன்போர் அன்று விசேட நிகழ்வுகள் இடம்பெறும். (எ-202)

## மானிப்பாய் ஆஸ்பத்திரியில் மருந்து கொடுக்கும் மேலதிக பணியில் தாதியர்கள்

நவாலி,நவ.14

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் மருந்தாளர் நியமிக்கப்படாத காரணத்தால் வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்களே மருந்து கொடுக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வைத்தியசாலையில் பணியாற்றிய மருந்தாளர் கடந்த இருமாதங்களுக்கு முன்னர் மாற்றலாகிச் சென்றபோதும் இதுவரை எவரும் அவரது இடத்திற்கு நியமிக்கப்படவில்லை.

தாதியர்கள், மருந்தாளரின் கடமையைச் செய்துவருவதால், அவர்களது அன்றாடப் பணிகளில் இடையூறு ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதனால் விரைவில் மருந்தாளர் ஒருவரைநியமனஞ்செய்து நோயாளர்களுக்கு மருந்து வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென சம்பந்தப்பட்டவர்களிடம் வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (10-204-100)

## கண்ணீர் அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

நல்லூர் பிரதேச செயலக முன்னாள் காசாளரும் தற்போது கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் காசாளராக இருந்தவருமான

### செல்லத்துரை கோபாலகுமாரன்

அவர்கள் 15.10.2004 ஞாயிறு அன்று காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
நல்லூர்.
(38549)(39-14-19-26)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 - 10 - 1959



மறைவு 15 - 10 - 2004

அமரர்

## செல்லத்துரை கோபாலகுமாரன்

*(சிறாப்பர் - பிரதேச செயலகம், கரவெட்டி)*

பாசத்தின் சுமையோடு எம்மைவிட்டுப் பிரிந்தாலும் என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நுனுவில் குளக்கோட்டு விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதரர்கள், சகோதரி, மருமகன், பிள்ளைகள்.

துன்னாலை தெற்கு, கரவெட்டி. (38526) (26-14-19)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி நடராஜா (மணி)

வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடராஜா அவர்கள் 10.11.2004 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் கொட்டடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சீனிவாசகம் நடராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகேஸ்வரி (U.K.), காலஞ்சென்ற ஜெயரட்ணம் (கொழும்பு), யோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லலிதா (கனடா), கணேசராசா (ஜேர்மனி), அநுசியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தராஜா (கனடா), சுகிர்தா (ஜேர்மனி), நந்தன் (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சிதா, தமேஷா, திவிஷா, கபேஸ்மன், சாருஜன், நதூஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணிக்கு கனத்தை பொதுமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல. 75, யசோதரா மாவத்தை,*
*சரணங்கர றோட்,*
*தெஹிவளை.*
T.P.: 2722630
(சி-39015)(30-14-19-26)

தகவல்:
குடும்பத்தினர்.
ஜேர்மன் - 00492131593251
கனடா - 905-5026906
லண்டன் - 84235217

## தர்மலிங்கம் பரராஜசிங்கம்

(உரிமையாளர், ஜவ்னா றேடர்ஸ், யாழ்ப்பாணம், யாழ்ப்பாண இரும்பகம், கதிரவன் இரும்பகம் - சாவகச்சேரி)



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பரராஜசிங்கம் அவர்கள் 10.11.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சீதேவிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் கிருஷ்ணவதியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீறஜனி (ஆஸ்திரேலியா), ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரி (கனடா), சிவபாலன் (ஆஸ்திரேலியா), தயராஜினி, அனுஷியா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சண்முகராஜா, நாகரெத்தினம் மற்றும் இராசையா, சரோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நாகேஷ், சரஸ்வதி, ஞானாம்பாள், விஜயலஷ்மி காலஞ்சென்ற சிவநாமம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிருஜா, நிவேதா, பிரவீனன், பிரதாபன், ஜாகவன், ஜாகுலன், அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் காலை 10 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/7, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம். (38538)(42-14-19-26)

தகவல்:
மனைவி, மக்கள்.
021 222 3205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமறையான திருக்குறளைப் படியுங்கள்; வளமான வாழ்வு உங்களுக்குக் கிடைக்கும்

## யாழ். வந்த சிங்கப்பூர் சிங்கன் தெரிவிக்கின்றார்

உலகத்துப் பொதுமறை எனக் கருதப்படும் திருக்குறள் ஒவ்வொரு தமிழரின் இல்லத்திலும் இருக்கவேண்டியது இன்றியமையாத தொன்றாகும். கிறிஸ்தவர்கள் பைபிளைப் படிப்பது போன்று, இஸ்லாமியர்கள் குரானைப் படிப்பது போன்று, இந்துக்கள் தவறாது திருக்குறளைப் படித்து விளங்கிக்கொள்வதுடன், திருக்குறள் கூறும் நல்வழிகளைப் பின்பற்றி வாழப் பழகிக் கொள்வது அவசியமாகும். இந்துமதம், தமிழ்மொழி, தமிழ் கலாசாரம், பண்பாடுகளை உணர்த்தும் திருக்குறளின் மகத்துவத்தை உலகெங்கும் பரப்பும் வகையில் திருக்குறள் இயககம் என்ற அமைப்பின் மூலம் செயலாற்றி வருகிறேன்.

- இவ்விதம் தெரிவித்தார் ஈ.வி.சிங்கன் எனச் சுருக்கமாக அழைக்கப்படும் சிங்கப்பூரைச் சேர்ந்த இளையதம்பி விக்கிரமசிங்கம்.

தமது இலங்கைப் பயணத்தின் ஒரு பகுதியாக அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த அவர், நமது 'உதயன்' அலுவலகத்துக்கும் விஜயம் செய்திருந்தார். அவருடனான கலந்துரையாடலின்போது பல அரிய தகவல்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

இவரது பெற்றோரின் பூர்வீகம் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த தொல்புரம் மற்றும் மாதகல் கிராமங்களாகும். தொழில்வாய்ப்புத் தேடிச் சிங்கப்பூர் சென்ற இவரது பாட்டனார் தமது பிறந்த மண்ணின் மீது கொண்ட பற்றுதல் காரணமாகச் சிங்கப்பூரில் பிறந்த தமது மகனுக்கு யாழ்ப்பாணத்துப் பெண்ணை மணம் முடித்து வைத்தார். அவர்களுக்குச் சிங்கப்பூரில் பிறந்த மூத்த மகனான ஈ.வி.சிங்கனுடன் உடன் பிறந்தோர் பதினொரு பேராவர். அரச சேவையில் கடமையாற்றிய பாட்டனும், காப்புறுதி முகவராகக் கடமையாற்றிய இவரது தகப்பனாரும் தமது தொழிலுக்கு மேலதிகமாக வியாபார முயற்சிகளின் மூலம் சேர்த்த சொத்துக்கள் ஏராளம்.

இத்தகைய வசதி வாய்ப்புக்களுடன் 1934 இல் சிங்கப்பூரில் பிறந்த விக்கிரமசிங்கம், சிங்கப்பூரில் தமது ஆரம்பக் கல்வியை முடித்துத் தமது இடைநிலைக் கல்வியை இலங்கையில் மேற்கொள்ள நேர்ந்தது. அதைத் தொடர்ந்து லண்டனில் புகழ்பெற்ற இன்னர் டெம்பிள் கல்லூரியில் இணைந்து சட்டப் படிப்பை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்தது.

"எனது தந்தையார் தமிழ்மொழிமீது அளவு கடந்த ஆர்வம் மிக்கவர். அதேசமயம், எனது தாயார் சைவ சமயத்தின் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கடும் ஈடுபாடு கொண்டிருந்தார்" - எனக் கூறும் விக்கிரமசிங்கன், இந்தப் பின்புலம் காரணமாகவே சிறு வயது முதலே தமக்கும் தமிழ்மொழி மீதும் இந்து மதத்தின் மீதும் இயற்கையாகவே ஈடுபாடு ஏற்பட்டதென்கிறார். அவரிடம் ஆரம்பத்திலிருந்தே காணப்பட்ட இந்த ஆர்வத்துக்கு அவரது சட்டக் கல்லூரி வாழ்க்கை ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

1960களில் சட்டக்கல்லூரியில் பயின்ற வேளையிலும் அதன் பின்னர் அரசு மத்திய நூலகத்தில் பணிபுரிந்த வேளையிலும் தமிழ் மொழி மீதான பற்றின் காரணமாகப் பல தமிழ் அமைப்புகளில் இணைந்து பொறுப்பான பதவிகளை வகித்தார். அந்த வேளையில், லண்டன் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் பதவியை வகித்ததுடன், ஆங்கிலேயர்களுக்குத் தமிழ்க் கலாசாரத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் லண்டன் ஓரியண்டல் கலாசார அமைப்பையும் ஆரம்பித்து நடத்தியுள்ளார்.

லண்டனில் கல்வி கற்ற வேளையில் தமிழ் மொழியின் சிறப்பை ஏனைய மொழிபேசும் இனத்தவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் 'Tamil Legacy' என்ற ஆங்கில மொழி மூல நூலை முதன்முதலில் எழுதி வெளியிட்டார். அந்நூலுக்குக் கிடைத்த வரவேற்பே தொடர்ந்தும் நூல்களை எழுதி வெளியிடுவதற்கான ஆர்வத்தைத் தமக்கு ஏற்படுத்தியதாகக் குறிப்பிடும் விக்கிரமசிங்கன், இதுவரையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றார். அந்தவகையில், இதுவரை 450இற்கும் மேற்பட்ட பல தரப்பட்ட நூல்களைப் பதிப்பித்து இவர் வெளியிட்டுள்ளார்.

1969இல் லண்டனை விட்டுச் சிங்கப்பூருக்குத் திரும்பி வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டபோதிலும், அதன் மூலம் வரவேற்பும் வருமானமும் கிட்டியபோதிலும் - சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் மத்தியில் திருக்குறளின் பெருமையைப் பரப்பும் பணியில் மனநாட்டம் கொண்டு, வழக்கறிஞர் தொழிலைத் துறந்து, "திருக்குறள் - இடம் - ஆசிரியர் - மாணவர்கள்" என்ற பத்து அம்சங்கள் அடங்கிய திட்டம் ஒன்றின் மூலம் இயக்கமொன்றை ஆரம்பித்தார்.

லண்டனில் வாழ்ந்த காலத்தில் நண்பரொருவர் அளித்த திருக்குறள் புத்தகத்தை வாசித்து, அதன் பெருமையைத் தெரிந்து கொண்டமையே, இந்நூலைத் தமிழ் மக்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் - தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைத் தம்முள் ஏற்படுத்தியதாக இவர் குறிப்பிடுகின்றார்.

### சங்கிலியன் மந்திரிமனையைச் சீரமைத்து திருக்குறள் நிலைமாக மாற்ற உதவத் தயாராம்

தமது தந்தையின் மறைவையடுத்து, தந்தையின் பெரும் சொத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்பு இவருக்கு வாய்த்தது. மலேசியாவிலிருந்த றப்பர் தோட்டம் உட்படச் சிங்கப்பூரிலுள்ள ஏராளமான வீடுகள், கட்டடங்கள் என்பவற்றின் உரிமையை நிர்வகித்ததன் காரமாக நிதி வசதிமிக்க இவரது ஈடுபாடு முழுவதும் சைவமதம், தமிழ்மொழி மற்றும் திருக்குறள் என்பவற்றின் மீதே அதிகரித்துக் காணப்பட்டது. இவற்றின் பெருமையை உலகத்துத் தமிழ் மக்கள் மத்தியில் - குறிப்பாக இளம் தலைமுறையினர் மத்தியில் - உணரச் செய்வதையே தமது குறிக்கோளாகக் கொண்டார்.

#### இளம் தலைமுறையினர் மத்தியில் திருக்குறள்

இந்தவகையில், 1972ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் இளம் பிள்ளைகளுக்குத் திருக்குறள் வகுப்புகளை நடத்திவரும் இவர், காலத்துக்குக் காலம் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, மொறிசியஸ் மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகளுக்குச் சென்று திருக்குறள வகுப்புகளை ஒழுங்கு செய்து நடத்துவதுடன், அவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வந்துள்ளார்.

திருக்குறளை இளைய சமுதாயத்தினர் இலகுவாகவும், ஆர்வத்துடனும் கற்கக் கூடிய



வகையில் பல புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தி வரும் தமது இம்முயற்சி, தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று வருவதாகவும் குறிப்பிடும் இவர், தமிழர்களை ஒன்றுபடுத்துவதற்கான ஒரே வழி தமிழ், சைவம் மற்றும் திருக்குறள் ஆகியவற்றின் மூலமாக அவர்கள் மத்தியில் ஓர் இணைப்பை ஏற்படுத்துவதேயாகும் என்பதைத் தாம் திடமாக நம்புவதாகத் தெரிவிக்கின்றார்.

இத்தகைய தமது முயற்சிக்கு அச்சிடல் வசதியும், புத்தக விற்பனை வசதியும் பெருமளவில் உதவும் என்ற நோக்கில் 1976ஆம் ஆண்டில் சிங்கப்பூர் அப்பர் சிராங்கூன் சாலையில் பெரிய புத்தகசாலையொன்றை நிறுவித் தொடர்ந்து நிர்வகித்து வருகிறார்.

ஈ.பி.எஸ்.என்ரபிறைசஸ் என்ற இந்நிறுவனத்தினூடாக இலங்கை, தமிழ்நாடு போன்ற வெளிநாடுகளில் பிரசுரமாகும் தரமான புத்தகங்களை இறக்குமதி செய்து விற்கவும், தாம் சொந்தமாக வெளியிடும் புத்தகங்களைத் தரமாகவும், குறைந்த விலையிலும் அச்சிட்டு மலேசியா, இலங்கை, தமிழ்நாடு, தென் ஆபிரிக்கா, லண்டன் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற தமிழ் மக்கள் வாழும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தமிழ்ப் பணிசெய்யும் வாய்ப்பும் தமக்குக் கிட்டியுள்ளதாகச் சிங்கன் குறிப்பிடுகின்றார்.

"திருக்குறளைப் படித்துவிட்டு யாராவது எழுதிய பொருளை மனப்பாடம் செய்துவிடுகின்றனர் அல்லது ஆர்வம் எதுவுமின்றிப் பார்த்து எழுதுவதை வழக்கமாக்கிக் கொள்கின்றனர். இதன் பலன் சிந்தனை வளர்ச்சியே அற்றுப்போய் விடுவதாகும்" எனக் கூறும் விக்கிரமசிங்கன், திருக்குறளைப் பரப்புவது எப்படி? என்பது பற்றி உரை நிகழ்த்துவதில் வல்லவர். புத்தகங்களைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் விளக்கவுரை நிகழ்த்துவதிலும் பேராற்றலும் பட்டறிவும் கொண்டிருக்கும் இவர், பல துறைகளில் தேர்ச்சி பெற்றுத் திகழும் நூலாசிரியரும் கூட. இலத்தீன், ஆங்கிலம், மலேசிய மொழி உள்ளிட்ட வேறு பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ள இவர், தமது உரையாடலின்போது தமிழ் மொழியைச் சரளமாகக் கையாள்வதினின்றும் அவர் [illegible] மொழி மீது அளவற்ற பற்றுக்கொ[illegible] பதை உணர்ந்துகொள்ளமுடிகிறது.

இதுவரை 450இற்கும் மேற்பட்ட [illegible] கள், கையேடுகள் ஆகியவற்றைத் [illegible] ஆங்கிலத்திலும் பதிப்பித்து வெளியி[illegible]க்கும் இவர், ஒரு காலத்தில் ஆத்மீக ஈடுபாட்டின் காரணமாக சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு ஆகிய இடங்களிலுள்ள இந்து ஆலயங்களுக்கு மன அமைதிதேடிப் பல தடவைகள் சென்றிருப்பதாகக் குறிப்பிடுகின்றார். இவர் வெளியிட்ட புத்தகங்களில் பெரும்பாலானவை சைவம், தமிழ் மொழி, திருக்குறள் என்பவற்றின் சிறப்புகளை எடுத்தியம்புவனவாகவே உள்ளன.

இத்தகைய நன்நோக்கில் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட தமது விஜயத்தின் போது கொழும்பில் பிரபல கல்லூரிகள் சிலவற்றில் தமிழ் மாணவர்களுக்கு இத்திருக்குறள் வகுப்புகளைத் தாம் நடத்தியதாகக் குறிப்பிட்ட இவர், திருக்குறளின் பெருமை குறித்த இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினரின் அக்கறை திருப்தியளிக்கும் வகையில் காணப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

விவேகானந்தர், நாவலர், கம்பன் ஆகியோரின் கருத்துகளுக்கு இங்கு காட்டப்படும் அக்கறை போன்று தெய்வப் புலவராம் திருவள்ளுவரின் கருத்துக்கும் தமிழ் மக்கள் அக்கறைகாட்ட வேண்டியது அவசியமாகும் என்ற கருத்தையும் அவர் முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரிகள சிலவற்றில் உரையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தில் தாம் இக்கருத்தை வலியுறுத்திக் கூறியதாகவும் சிங்கன் தெரிவித்தார்.

#### தமிழ்க் கலாசாரத்தைக் கட்டிக்காக்கும் யாழ்ப்பாணம்

'உதயன்' அலுவலகத்தில் ஆசிரிய பீடத்தினருடனான சந்திப்பின்போது அவர் தமது முக்கிய அபிலாசையொன்றினையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. தமது பாரம்பரியத் தமிழ்க் கலாசாரத்தைக் கட்டிக்காப்பதிலும் இந்துமதக் கோட்பாடுகளை ஒழுங்குடன் கடைக்கொள்வதிலும் பல ஆண்டுகளாக அக்கறை காட்டிவருவதன் மூலம் உலகத்துத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கிவரும் யாழ்ப்பாணத்துச் சமூகம் -

இன்றைய இளம் தலைமுறையினருக்கு 'திருக்குறள்' மீது ஆர்வத்தையும் அக்கறையையும் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**செவ்வி: வீயெஸ்ரி**

இதனை இங்குள்ள புத்திஜீவிகள் செய்ய வேண்டும் என்ற கருத்தையும் அவர் வெளியிட்டார்.

இந்தவகையில், பழம்பெருமைமிக்க நல்லூர் சங்கிலியன் மந்திரிமனை சீரழிந்து பாழடைந்து போயிருப்பதைக் காண்பது தாங்கொணாக் கவலை அளிப்பதாகவும் குறிப்பிட்ட அவர், சமூகப் பிரமுகர்கள் முன்னின்று இந்தச் சங்கிலியன் மந்திரிமனையைப் புனரமைத்து, அதனைத் திருக்குறளின் சிறப்பையும் பெருமையையும் வளர்த்தெடுக்கும் ஒரு நிலையமாக உருவாக்க முன்வருவார்களேயானால் அதற்காக முழு அளவில் உதவிடத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். இத்தகைய தனது எண்ணத்தைத் தற்போதைய யாழ். மாநகர சபை ஆணையாளரிடமும் தாம் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

திருக்குறளைப் படிக்கவும், தாம் படித்ததை மற்றவர்களுக்குக் கற்றுத் தரவும் பத்து முறைகளைச் செயல் வடிவில் நாம் பின்பற்றுவோமானால் நம் அன்றாட வாழ்க்கையில் திருக்குறள் ஒரு பயனுள்ள நூலாக மாறிவிடும். இவ்விதம் எமது சமூகத்துக்குப் புத்திஜீவிகள் முன்னின்று திருக்குறள் வகுப்புகளை ஆரம்பித்து நடத்திவந்தால் செயல்முறையில், நாளாவட்டத்தில் அது ஓர் இயக்கமாக உருவாகிவிடும் எனக் கருத்து வெளியிடும் இவரது இக்கூற்று எம்மை ஒரு கணம் சிந்திக்கவைக்கிறதல்லவா?

---

# தென்மராட்சி முன்பள்ளி அபிவிருத்திக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,நவ.14

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகிய பகுதிகளில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் 5 லட்சத்து 5ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மூன்று முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கென ஒருலட்சத்து 10ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 6 முன்பள்ளிகளின் அபிவிருத்தி உட்பட பத்து வேலைத் திட்டங்களுக்கென 3 லட்சத்து 95 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சாவகச்சேரி நகரசபை தனக்குக் கிடைக்கவுள்ள நிதியிலிருந்து தென்னிந்தியத் திருச்சபை முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய 40 ஆயிரம் ரூபாவும், கச்சாய் வீதி குழந்தையேசு முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய 50 ஆயிரம் ரூபாவும், சங்கத்தானை நாமகள் முன்பள்ளிக்குப் பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவுசெய்ய 20 ஆயிரம் ரூபாவும் -

அதேபோல, சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட மீசாலை மேற்கு முன்பள்ளிக்குத் தளபாடம் கொள்வனவுசெய்ய 25 ஆயிரம் ரூபாவும், மிருசுவில் தவசிகுளம் முன்பள்ளி தளபாட கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், இடைக்குறிச்சி முன்பள்ளி தளபாடக் கொள்வனவுக்கு 15ஆயிரம் ரூபாவும், கரம்பைக்குறிச்சி முன்பள்ளிக்குத் தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும், மிருசுவில் வடக்கு வன்னியர் முன்பள்ளிக்குத் தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும், தென்மராட்சி கிழக்கு முன்பள்ளிக்குக் கல்வி உபகரணங்கள் கொள்வனவுசெய்ய 5 ஆயிரம் ரூபாவும் -

பிரதேசத்தில் உள்ள 20 சனசமூக நிலையங்களுக்குப் புத்தகங்கள் வழங்க 50 ஆயிரம் ரூபாவும், மட்டுவில் அம்பாள் சனசமூக நிலையக் கட்டடப் புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் கிணறு அமைக்க 50 ஆயிரம் ரூபாவும், கைதடி ஊரி[illegible] கிராமத்தில் கிணறு அமைக்க ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-5-117)

---

# கணிப்பீட்டுத்திட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர்-பெறுபேற்றில் உயர்வு

## பிரதிப் பரீட்சை ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.14

இலங்கையில் புதிய கல்விச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து இடம் பெற்ற பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினால் பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வடைந்துள்ளன.

கல்வி அமைச்சின் பிரதிப்பரீட்சை ஆணையாளர் ஜி.எஸ்.சொலமன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இப்படித் தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 3 லட்சத்து 5 ஆயிரத்து 318 மாணவர்கள் தோற்றி 41 வீத மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

[illegible] 2003ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் 3 லட்சத்து 205 மாணவர்கள் தோற்றி 44 வீதமான மாணவர்கள் சித்தியடைந்தனர்.

இவ்வாறு மாணவர்களின் பெறுபேறுகளும் தேர்ச்சிகளும் அதிகரிப்பதற்குப் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டம் காரணமாகி உள்ளது. இத்திட்டத்தினால் ஆசிரியர்களின் தேவையற்ற வேலைச் சுமைகள் படிப்படியாக நீக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் கல்வி வரலாற்றில் முதல் தடவையாக 2005ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைச் சான்றிதழில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் தேர்ச்சி அளவும் குறிப்பிடப்பட்டுப் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படவுள்ளது.

பாடசாலை மட்டக்கணிப்பீட்டு முறையினால் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரிப்பதுடன், மாணவர்களின் இடைவிலகலும் குறைவடைகின்றது. அத்துடன், மீளக் கற்போர் வீதமும் குறைவடைவது மகிழ்வைத் தருகின்றது - எனப் பிரதிப் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(எ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சிப் பட்டறை

வலி.வடக்கு,நவ.14

பால்நிலைச் சமத்துவம் பற்றிய பயிற்சிப் பட்டறையொன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை யாழ்ப் பாணம் பிரதேச செயலாளர் அலுவலக கேட் போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வரும் அலுவலர்க ளினால் நடத்தப்படவுள்ள இப்பயிற்சிப் பட்ட றையில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பயிற்சிப்பட்டறையானது நாளை திங் கட்கிழமையும் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமையும் இடம்பெறும்.

(எ-86)

# ஆய்வுப்பயிற்சிநெறி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.14

நோர்வே நாட்டின் ஒஸ்லோ பல்கலைக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக் கழகப் புவியியல் பீடம் ஏற்பாடு செய்துள்ள சமாதானத்திற்கும், அபிவிருத்திக்குமான கற்கை ஆய்வுப் பயிற்சிநெறி இன்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 5 நாள்க ளுக்கு புவியியல்துறை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் திட்ட மிடல், நிர்வாகம் போன்றவற்றில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 40 பயிற்சியாளர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்வர். (எ-185-202)

## ஓராண்டு சென்றும் எம் நெஞ்சைவிட்டு அகலாத நினைவலைகள்



தாயின் மடியில் — இறைவன் அடியில்
12.09.1949 — 14.11.2003

**திருமதி செல்வராஜா பேர்ணதேத் (செல்வமணி)**

**அன்னைக்குச் சமர்ப்பணம்**

அன்பின் அம்மா! தாயே நீங்கள்
கருவறையைத் தற்கொடையாக்
கினீர்கள்!
தரணியில் எம்மைத் தலைநிமிர
வைத்தீர்கள்!
காப்பரணாக நின்ற உங்களை
எம்மிடம்
இருந்து பிரித்து காலன் கண்
கலங்க வைத்தானோ எங்களை?

மணற்குடியிருப்பு,
10ஆம் வட்டாரம்,
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு. (C/39018)

-அன்புக் கணவர், சகோதரன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



(K.T.C) கோண்டாவில் கல்வி நிறுவனத்தின்
ஆங்கிலபாட ஆசிரியை **செல்வி தமிழினி**
அவர்களின் பாசமிகு பேர்த்தியார்

**திருமதி சின்னத்துரை மகேஸ்வரி**

*அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்ததோடு, அன்னாரின் சடங்கில் கலந்துகொண்ட பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆறுதலைக் கூறுவதோடு, அன்னாரின் ஆன்மா இறைவனடி சேர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*புகையிரத வீதி,*
*கோண்டாவில்.* (38595)

K.T.C. அதிபர், ஆசிரியர்,
மாணவர், உதவி இயக்குநர்.

# உலகவலம் தொடர்ச்சி

(7ஆம் பக்கத்தில் இருந்து)

பெரியவர் காலத்திலேயே இரண்டாவது இடத்திலிருந்த இப் போதைய சுவாமிகள் ஒரு முறை கோபித்துக்கொண்டு ஆந்திராவுக்கு சென்று சிறிதுகாலம் இருந்துவிட்டுத்திரும்பி வந்தவர்.

அயோத்தி இராமர் கோயில் விவகாரத்திலும் தலையிட்டு சமரசம் செய்துவைக்க முயன்று தோற்றுட் போனவர். இப்பொழுது கொலை வழக் கொன்றில் சம்பந்தப்பட்டிருப்பதாக பொலீஸார் அவரைக் கைது செய் துள்ளனர்.

ஒரு கோயில் விவகாரம் தொடர்பாக அக்கோயிலின் பிரமுகர் ஒருவர் கொலை செய்யப்பட்டதில் கைதானவர்களுடன் காஞ்சிகாம கோடி பீட சங்கராச்சாரியாரும் ஒருவராகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

வேண்டுமென்றே சுவாமிகள் மீது அபாண்டமாகப் பழி சுமத்தி கைது செய்ய வைத்திருப்பார்களோவென்ற சந்தேகம் எழுவது நியாயமே.

இப்பொழுது விளக்கமறியலில் இருக்கும் அவர் விசாரிக்கப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படும் போது உண்மை வெளிவரும்.

### மஞ்சள் உடைதாரி உமாபாரதி

இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சியின் மஞ்சள் உடைதரித்த தலைவர்களில் ஒருவரான உமாபாரதி அம்மையார் அக்கட்சியில் வகித்த உயர்மட்ட பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை அக்கட்சியில் தோன்றி யுள்ள உள்பூசல்களை மேலும் ஆழமாக்கியுள்ளதாக அரசியல் அவ தானிகள் கூறுகிறார்கள்.

கட்சியின் விதிகளுக்குமாறாக நடப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்க கட்சிப் பிரமுகர்கள் கூடியிருந்தவேளையில் உமாபாரதி தரக் குறைவாக நடந்துகொண்டதாகக் கூறப்பட்டது.

"இந்த மண்டபத்தில் நான்கு ஐந்துபேர் இருக்கிறார்கள். இவர்கள் என்னைப் பற்றி பத்திரிகை நிருபர்களிடம் பிரசுரிக்க வேண்டாம் என்று கூறி அதையும் தெரிவிக்கிறார்கள். அவை அடுத்தநாளே கொட்டை யெழுத்துக்களில் வெளிவருகின்றன" என்று, கூட்டத்தை விட்டு வெளி யேறுவதற்கு முன்னர் கட்சி உறுப்பினர்களிடம் உமாபாரதி உரத்தக் குரலில் கூறியதாகவும் அதனால், கூட்டத்திலிருந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாஜ், முன்னாள் உதவிப் பிரதமர் அத்வாணி, முன்னாள் நிதியமைச்சர் ஜஸ்வந்த்சிங் முதலியவர்கள் புண்படுத்தப்பட்டிருந்தார்கள் என்றும் பார்த்தவர்கள் கூறியுள்ளார்கள்.

கட்சியின் உயர்பதவிக்காகப்போராடி வந்த உமாபாரதிக்கு அண்மை யில்தான் பொதுச் செயலாளர் பதவி வழங்கப்பட்டிருந்தது. கட்சியின் ஆரம்ப உறுப்புரிமையிலிருந்து ஆறு வருடங்களுக்கு அவர் இடைநிறுத் தம் செய்யப்பட்டுள்ளார்.

★ ★ ★

### அங்கிக்குள் பிஸ்டல் கொண்டுவரும் பாதிரியார்

தனது அங்கிக்குள் சுழல்துப்பாக்கியுடன் வந்து பிரசங்கம் செய்யும் பாதிரியாரை அந்த ஆலயத்தின் மேலதிகாரிகள் பதவி நீக்கம் செய்துவிட்டார்கள். இதனால், ஆத்திரம் கொண்ட அவ்வாலயத்தைச் சேர்ந்த சபை உறுப்பினர்கள் அவர் திரும்பிவரும் வரை ஆலயத்தைத் திறக்கக் கூடாதெனக்கூறி ஆலயத்தை மூடி சங்கிலியால் பிணைத்து பூட்டுப்போட்டுவிட்டார்கள்.

மெக்ஸிக்கோ நகரில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

'பாதரே பிஸ்டலொஸ்' என அறியப்படும் அந்த பாதிரியார் ஆலயத் துக்கு வரும்போது அங்கியினுள்ளே இடுப்பில் சுழல் துப்பாக்கியைச் சொருகிக்கொண்டுவருவது வழக்கம். அதனால், அல்பராடோ காலிகொஸ் என்ற அப்பாதிரியார் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

மெக்ஸிக்கோவில் தனிப்பட்ட பிரஜைகள் ஆயுதத்துடன் உலாவு வது சட்டவிரோதம்.

★ ★ ★

### 206 மீற்றர் படம்

206 மீற்றர் நீளமான படம் ஒன்றை வரைவதற்கு சீன ஓவியர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். உலகத்திலேயே நீளம் கூடிய படமாக இது இருக்கும் என்று கருதப்படுகின்றது. சீனாவில் மங்கோலிய இனத்தின் 206 ஆண்டு வரலாற்றை ஓவியர்கள் இந்தப் படத்தில் வரையப் போகிறார்கள். கெங்கிஸ்கானின் பிறப்பிலிருந்து படம் ஆரம்பிக் கப்படுமாம்.

கெங்கிஸ்தான் மங்கோலியாவை உருவாக்கியவர். அவரது பேரன் குப்லேகான் யுவான்வமசத்தை நிறுவினார். ★


# இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

எந்திரவியல் தொழில்நுட்பப் பீடம்

**புதிய மாணவர்களை சேத்துக்கொள்ளல் 2005/2006**

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் தொழில்நுட்பப் பீடத்தால் நடத்தப்படும் பின்வரும் கற்கைத்திட்டங்களுக்கு அனுமதி பெற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆடைத்தொழில்நுட்பம், தொழில்துறை சூழல் அனர்த்தங்கள், நூல்உற்பத்தி, நெசவு, புடவை இராசயன செயல் முறை ஆகிய துறைகளில்
**தொழில்துறைக் கல்வியில் சான்றிதழ்**

ஆடை உற்பத்தியும் முகாமைத்துவமும், புடவை உற்பத்தி, விவசாயம் ஆகிய துறைகளில்
**தொழில்துறைக் கல்வியில் டிப்ளோமா/தொழில்துறைக் கல்வியில் இளமாணிப்பட்டம்**

விவசாய, மோட்டார் வாகன, குடிசார், கணனி, மின்னியல், இலத்திரனியலும் தொலைத்தொடர்பும், உற்பத்தி, பொறிமுறை, புடவை எந்திரவியல் ஆகிய துறைகளில்
**தொழில்நுட்பவியலில் டிப்ளோமா/தொழில்நுட்பவியலில் (எந்திரவியல்) இளமாணிப்பட்டம்**

நிர்மாண முகாமைத்துவம், தொழில்துறை எந்திரவியல், ஆகிய துறைகளில்
**தொழில்நுட்பவியலில் பட்டப்பின் டிப்ளோமா/தொழில்நுட்பவியலில் முதுமாணிப்பட்டம்**

ஆராய்ச்சி மூலம்
**தத்துவத்தில் முதுமாணிப்பட்டம்**

ஆராய்ச்சி மூலம்
**தத்துவத்தில் கலாநிதிப்பட்டம்**

இவை தவிர, தனித்துவப் பாடநெறிகளும் வழங்கப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை, 2004 கார்த்திகை 17ந் திகதிக்கும், மார்கழி 17ந் திகதிக்கும், இடைப்பட்ட காலப்பகுதியில் (ஞாயிறு, அரச விடுமுறை தினங்கள் தவிர்ந்த) காலை 0930 முதல் மாலை 0330 வரை நாவலை, நாவலை வீதியிலுள்ள கொழும்பு பிராந்திய நிலைய மக்கள் தகவல் நிலையத்திலோ, அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் ஏனைய பிராந்திய, கற்கை நிலையங்களிலோ (திங்கள், செவ்வாய், அரச விடுமுறை தினங்கள் தவிர்ந்த) ரூபா 250.00 பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் ரூபா 250.00 பெறுமதியான வங்கிக் கட்டளையை, கற்கைத்திட்டத்தின் பெயரையும், விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரியையும் குறிப்பிட்டு, மார்கழி 3ம் திகதிக்கு முன்பதாக, நிதியாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், நுகேகொடை, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தரப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தை, 2004 மார்கழி 24ம் திகதிக்கு முன்பாக வந்து சேரும்படி அனுப்பப்படல் வேண்டும்.

மேற்தரப்பட்டுள்ள கற்கைத்திட்டங்கள் குறித்ததான அறிமுகக் கருத்தரங்குகள் இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய, கற்கை நிலையங்களில் கீழ்த்தரப்பட்டவாறு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| நாவலை (தொலைபேசி 011-2853930) நவம்பர் 20, 26 டிசம்பர் 2, 11, 19, காலை 0930 மணி | | ஹற்றன் (051-2224264) நவம்பர் 20, காலை 1030மணி |
| பண்டாரவளை (057-2222820) நவம்பர் 21, காலை 0930 மணி | மாத்தறை (041-2222943) நவம்பர் 28, காலை 1000 மணி | குருணாகலை (037-2223473) நவம்பர் 26, காலை 9.30 மணி |
| அம்பலாங்கொடை (091-2258585) நவம்பர் 28, காலை 0900 மணி | யாழ்ப்பாணம் (021-2223374) டிசம்பர் 05, காலை 0930 மணி | காலி (091-2223784) நவம்பர் 28,பிற்பகல் 0115 மணி |
| பொல்கொல்லை, கண்டி (081-2499370) நவம்பர் 28 டிசம்பர் 12 காலை 1000மணி | மட்டக்களப்பு (065-2222264) டிசம்பர் 12, காலை 1030 மணி | கேகாலை (035-2222501) டிசம்பர் 5, பிற்பகல் 0130 மணி |
| இரத்தினபுரி (045-2228660) டிசம்பர் 5, காலை 0900 மணி | பொலநறுவை (027-2223048) டிசம்பர் 12, காலை 0930 மணி | அநுராதபுரம் (025-2222871) டிசம்பர் 11, காலை 1030 மணி |

**கற்கைக் கட்டணங்களை செலுத்த உதவும் உபகார நிதி**

தெற்காசிய மன்ற மதன்ஜீற் சிங் புலமைப்பரிசில் தேவை உள்ள மற்றும் வலது குறைந்த மாணவர்களுக்கு கற்கைக் கட்டணங்களை செலுத்த உதவும்படியாக வழங்கப்படுகின்றது. இப்புலமைப் பரிசில் வழங்கப்படுவது குறித்ததான பொதுவான வழிகாட்டி விண்ணப்பப் படிவத்துடன் கிடைக்கப்பெறும். விண்ணப்பப் படிவங்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் எந்த கற்கை நிலையத்திலேனும் அல்லது இணையத்தளத்திலிருந்தோ (www.ou.ac.lk) பெற்றுக் கொள்ளப்படலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் உதவிப் பதிவாளர், மாணவர் அலுவல்கள் பகுதி, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், த. பெ. இலக்கம் 21, நாவலை, நுகேகொடை, 10250 என்ற முகவரிக்கு 24.12.2004 இற்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல்வேண்டும். தொழில்நுட்பவியல் கற்கை விண்ணப்பப் படிவத்தடன் இதனை இணைத்து அனுப்பவேண்டாம்.

பதிவாளர்

We celebrate our 25th Anniversary in 2005



# கணனித் தட்டச்சாளர்கள்

**தமிழ்க் கணனித் தட்டச்சுச் செய்வதிலும், பக்கம் அமைப்பதிலும் ஆகக் குறைந்தது இரண்டுவருட அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்விச் சான்றிதழ்கள், வேலை அனுபவச் சான்றிதழ்களுடன், சுயவிவரங்களைத் தெரிவித்து விண் ணப்பங்களை அனுப்பவும். உறவினர் அல்லாத இரு பிரமுகர்களின் சிபார்சு - நற்சாட்சிப் பத்திரங்களுடன் - 22.11.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்ப டும்.**

உதயன் மனிதவள சேவை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-39006)



# மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

**இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 12.11.2004 - 16.11.2004**
**முன்கூட்டியே பதிவுசெய்யவும்.**

இளைஞர்களே!
✳ சக்தி குறைவு; ✳ ஞாபக மறதி ✳ பயம்
✳ நடுக்கம் ✳ நித்திரைக் குறைவு ✳ ஆளுமைக்குறைவு
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! 'ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-39021) (24-33-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பலஸ்தீன மக்களின்

# சுயநிர்ணய உரிமைக்காக வாழ்நாளை போராட்டத்துடன் செலவழித்த அரபாத்!

'மகா சக்தி பொருந்திய பலஸ்தீன மக்களே, நாம் எல்லோரும் கூட்டாகக் கிளர்ந்தெழுவோம். 'இன்ஷா அல்லாஹ்' இறைவன் நாடினால் நமது இளைய தலைமுறையின் ஆணும், பெண்ணும் ஜெருசலேத்தின் சுவர்களில் - கோபுரங்களில் - தேவாலயங்களில் - நமது மண்ணில் பலஸ்தீனத்தின் கொடியை ஏற்றுவார்கள். அந்தநாள் ஏதோ நெடுந்தூரத்தில் இருப்பதாக அவர்கள் (இஸ்ரேல்) நினைக்கலாம். ஆனால், அந்த நாள் மிக அருகில்தான் இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம்."

அது மறைந்த பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் கடந்த வருடம் ஆற்றிய உரையின் சில உணர்வுமிக்க கருத்துக்கள்.

ஜெருசலேம் நகரைத் தலைநகராகக் கொண்ட பலஸ்தீனத் தேசத்தை உருவாக்குகின்ற அரபாத்தின் இலட்சியத்துடன் கூடிய போராட்டவாழ்வு மிக நீண்டது.

1953 ஆம் ஆண்டில் எகிப்தியத் தலைவருக்கு அவர் இரத்தத்தால் எழுதிய கடிதத்தில் மூன்று வார்த்தைகள் இருந்தன.

"பலஸ்தீனத்தை - மறக்க - வேண்டாம்" என்பதுதான் அந்த வார்த்தை.

அன்றிலிருந்து அரை நூற்றாண்டு காலமாக பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் வடிவமாகத் திகழ்ந்தவர் அரபாத்.

இன்று, அவர் கண்ட பலஸ்தீன தேசத்தை உருவாக்கும் இலட்சியம் இன்னமும் சிக்கலுக்குள் சிதைந்து கிடக்கையில், அவர் உயிர் நீத்திருக்கின்றார்.

பலஸ்தீனர்களைப் பொறுத்தமட்டிலே நிலைமைகள் இன்றுபோல் எப்போதும் மோசமானதாக அதிகம் இருந்ததில்லை. கடந்த சில காலமாக நடந்துவருகின்ற பலஸ்தீனத் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களும், அதற்கு பதிலடியாக இஸ்ரேல் மேற்கொள்கின்ற அதிரடிகளும் சேர்ந்து ஆண்டாண்டு காலமாக இரு தரப்பினரிடையேயும் புரையோடிப் போயிருந்த பகைமையையும், விரோதத்தையும் மீண்டும் வெளிக்கொண்டு வந்திருக்கின்றன.

பலஸ்தீனத் தலைமை பிளவுபட்டு பலவீனமாகத் தென்பட்டுக்கொண்டிருக்கின்றது. அரபாத்திற்குப் பிறகு அடுத்த தலைவர் யார் என்பது தெளிவில்லாமல் உள்ளது.

அரபாத் பிறந்ததும், படித்ததும் எகிப்தில் என்றாலும், பலஸ்தீன விடுதலையோடு பின்னிப் பிணைந்தவர் அவர். 1948 இல் இஸ்ரேலிய தேசம் உருவானது முதற்கொண்டு பலஸ்தீன மக்களின் இலட்சியத்துக்கான ஆயுதப் போராட்டத்தில் தன்னை உறுதியாகப் பிணைத்துக்கொண்டவர் அரபாத்.

அதற்காக அல்பத்தாஹ் எனப்படுகின்ற பலஸ்தீன விடுதலை இயக்கத்தை உருவாக்குவதற்கு உதவியவர். 1967 ஆம் ஆண்டிலே இஸ்ரேல் தம்முடைய அரபு எதிரிகள் பலரை முறியடித்து மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளைக் கைப்பற்றிய பொழுது, பலஸ்தீன மக்களுக்கு இஸ்ரேலை எதிர்க்கக்கூடிய நம்பத்தகுந்த சக்தியாகத் தென்பட்டது அரபாத்தின் அல்பத்தாஹ் இயக்கம் மட்டும் தான்.

இதனால் 1969 ஆம் ஆண்டில் அரபாத் பலஸ்தீன விடுதலை இயக்கமான பி.எல்.ஓவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருடைய தலைமையின் கீழ் விமானக் கடத்தல்களும், வேறு வன்முறைச் சம்பவங்களும் பலஸ்தீன உரிமைக்குரலை உலகுக்கு எடுத்துக்காட்டுவதற்காக நடத்தப்பட்டன.

1987 இல் அரபாத்தின் போராளிகள் 'இன்திபாழா' எனும் எழுச்சிப் போரை மேற்குக்கரைப் பகுதியில் ஆரம்பித்தார்கள். ஓர் இராணுவத்தலைவனாக அரபாத் இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகள் பலவற்றில் முன்நின்றார்.



சமாதானத்திற்கான நோபல் பரிசினை இஸ்ரேலிய முன்னாள் பிரதமர் ராபினும் பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தும் கூட்டாகப் பெற்றுக்கொண்ட பின்னர் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் இருவரும் சந்தித்துக் கைகுலுக்கிக்கொண்ட போது எடுக்கப்பட்ட படம் இது. நடுவில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டனும் காணப்படுகிறார்.

அவருக்கு எப்பொழுதெல்லாம் போர்க்களத்தில் நெருக்கடிகள் ஏற்பட்டனவோ அப்பொழுதெல்லாம் அசாத்தியத்துணிவோடு செயற்பட்டார்.

1968 இல் ஜோர்தானின் கரமேவில் இஸ்ரேல் முற்றுகையின் போதும் 1970 இல் ஜோர்தானிலும் 1982 இல் பெய்ரூட்டிலும் நடந்த முற்றுகையின் போதும் அரபாத் தன்னுடைய தனிவீரத்தை - தைரியத்தை - வெளிப்படுத்தியதை அருகில் இருந்து பார்த்தவர்கள் பலர்.

எத்தனையோ தடவைகள் அரபாத்தைக் கொலை செய்வதற்கு சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1992 இல் லிபியாவில் அடித்த மண் சூறாவளியில் அவர் பயணித்த விமானம் விபத்துக்குள்ளானதில் அரபாத் இறந்தேவிட்டார் என முடிவுகட்டப்பட்டது. விமானத்தின் மூன்று விமானிகளும் இறந்துவிட்ட நிலையிலும் 15 மணி நேரம் எதுவுமே இல்லாதிருந்து கடைசியில் உயிருடன் மீட்கப்பட்டவர் அவர்.

வாழ்க்கையின் பெரும்பகுதி முழுவதும் அரபாத் நாடு நாடாக பலஸ்தீன விடுதலைக்காகப் பிரகாசம் செய்துகொண்டிருந்தார். என்றாலும், அவருடைய பயண விவரங்கள் எல்லாமே இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. அதேபோலத்தான் அவருடைய தனிமனித வாழ்வுபற்றிய செய்திகளும் யாருக்கும் தெரியாமல் வைக்கப்பட்டிருந்தன.

1990 இல் அவர் தன்னில் பாதிவயதான கிறிஸ்தவப் பெண்மணியான சுஹாவை திருமணம் செய்துகொண்ட விடயமும் ஓராண்டு காலம் வெளியுலகிற்குத் தெரியாமல் வைக்கப்பட்டிருந்தது.

அரபாத்தைத் திருமணம் செய்து கொண்ட சுஹா அரபாத், "இந்தத் திருமணம் அரபாத் அவர்களை மாற்றியிருக்கிறது" - என்றார்.

வீரனாய், தீரனாய், விடுதலை நாயகனாய் சித்திரிக்கப்பட்ட அரபாத்தை இந்தத் திருமணம்

## மாமனிதனின் மறைவினால் கலங்குகின்றது பலஸ்தீனம்

ஒரு மனிதனாக வெளிப்படுத்தியிருக்கிறது என்றும் சுஹா அரபாத் மேலும் தெரிவித்திருந்தார்.

யஸீர் அரபாத் தன் அரசியல் வாழ்நாளில் எடுத்த முடிவுகளிலே மிகப் பிழையான முடிவு என்று தெரிவிக்கப்படுவது முதலாம் ஈராக்கிய போரின் பொழுது அவர் சதாம் ஹுசைனுக்குக் கொடுத்த ஆதரவுதான். இதனால் அவர் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டார். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டு பலவீனமாக இருந்த காலகட்டத்தில்தான் அரபாத் இஸ்ரேலுடன் சமரசத்திற்கு - அமைதிக்குச் சென்றார்.

இந்தச் சமாதான முயற்சிக்காக மறைந்த இஸ்ரேலியப் பிரதமர் ராபினுக்கும் யஸீர் அரபாத்திற்கும் அமைதிக்கான சமாதானத்திற்கான - நோபல் பரிசு வழங்கப்பட்டது. அந்தப் பரிசை ஏற்று அரபாத் பேசும் போது, "எனது இலட்சிய விடயங்களை நடைமுறைப்படுத்துவது என்பது கடந்த காலங்களில் அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை.. நேற்றைய தினம் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒருநாள் எனக்கல்ல; எனது மக்களுக்கும், இஸ்ரேலிய மக்களுக்கும்."

"இறுதியில் அதனை நாங்கள் சாதித்திருக்கிறோம். எதிர்ப்பட்ட எல்லா இடர்களையும் தாண்டி - சிரமங்கள் அனைத்தையும் சமாளித்து - சொல்லொண்ணா வலியைத் தாங்கிக்கொண்டு - விவரிக்கமுடியாத தியாகங்களையும் சகித்துக் கொண்டு - நாங்கள் அதனைச் சாதித்திருக்கிறோம்." - என்றார்.

நோபல் பரிசுபெற்ற இரு தலைவர்களும் அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளைமாளிகை முன்றிலில் கைகுலுக்கியது இரு தரப்பிலும் பல்வேறு குழுக்களுக்கு ஆத்திரத்தை ஊட்டியது.

பிரதமர் ராபின் 1995 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து பலஸ்தீனத்தின் தேசிய நிர்வாக தலைமைப் பதவியை வரையறுத்துக்கொள்வதும், பலஸ்தீனர்களையும் இஸ்ரேலியர்களையும் சமாதானப் பாதையில் உறுதியாகப் பிடித்து வைத்திருப்பதும் அரபாத்துக்குப் பெரும்பாடாக அமைந்தன.

அரபாத்தின் கடைசிக்காலம் எதுவும் நிம்மதியாகக் கழிந்தது என்று சொல்லமுடியாது. 2000 ஆம் ஆண்டளவில் சமரச முயற்சிகள் கலகலத்துப்போய் மீண்டும் மேற்குக்கரையிலே 'இன்திபாழா' புதிதாக வெடித்தது.

அரபாத்தின் பழைய எதிரியான ஏரியல் ஷெரோன் இஸ்ரேலில் ஆட்சிக்கு வந்தார். பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுகிறார் என்று அரபாத் மீது குற்றஞ்சாட்டினார்.

ரமல்லாவில் இருக்கின்ற அரபாத்தின் அலுவலக வளாகத்தை இஸ்ரேலியப் படைகள் சுற்றி வளைத்தன. உடைக்கத் தொடங்கின. அதே சமயத்தில் பலஸ்தீனத் தரப்பில் இருந்தும் அவர் மீது விமர்சனங்கள் வந்து வீழ்ந்தன.

ஊழல் கறைபடிந்த நிர்வாகத்தை அரபாத் கொண்டு நடத்துகிறார் என்றும் -

இஸ்ரேலுக்குக் கூடுதலாக விட்டுக்கொடுப்புகளைச் செய்கிறார் என்றும் -

அமெரிக்காவை அளவுக்கதிகமாக நம்புகின்றார் என்றும் - அவர் மீது கண்டனங்கள் வீழ்ந்தன.

பலஸ்தீன விடுதலைக்காக அரைநூற்றாண்டு போராடிய அரபாத் உயிரிழந்துவிட்டார். அவரை ஒரு தீவிரவாதியாகவும், ஒரு மாபெரும் வீரனாகவும், தலைவனாகவும் கண்டுகொண்ட இரு தரப்பினர் உள்ளனர்.

அந்த இரு தரப்பினர்களுக்கும் இடையே விவாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. எத்தனையோ தசாப்தங்கள் கழிந்துவிட்டன. சுதந்திர பலஸ்தீன தேசம் இன்னமும் மலரவில்லை. அதற்கான ரத்த வேள்வியும் முடிந்தபாடாக இல்லை.

☆






## குருநகரைச் சேர்ந்த 25 மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,நவ.14

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 25 மீனவர்களுக்கு அடுத்த ஆண்டு முற்பகுதியில் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

ஐ.நா.அபிவிருத்தித்திட்டம் மற்றும் உணவு விவசாய நிறுவனம் ஆகியவற்றின் நிதியுதவியில் இருந்து இந்த உபகரணங்கள் கையளிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டுக் கடல்களில் 'ட்றோலிங்' வலை பாவனைக்குத் தடைசெய்யப்பட்டதை அடுத்து - அந்த வலைக்கு மாற்று வலைகள் வழங்கவும், வேறுபல உபகரணங்களை வழங்கவும் - கடற்தொழில் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## இடமாற்ற மேன்முறையீடுகளின் முடிவுகள் அனுப்பப்பட்டன

தென்மராட்சி,நவ.14

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற மேற்முறையீட்டு முடிவுகள் மாகாண உள்ளூராட்சித் துணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்த உத்தியோகத்தர்களின் முறையீடுகள், பரிசீலனை செய்த பின்னர் 21 எழுதுநர்கள், 10 நூலகர்கள் ஆகியோருக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எழுதுநர்களில் ஏழுபேரின் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. நான்கு பேரின் இடமாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளன. அத்துடன் நூலகங்களில் இருவரின் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் - நால்வருக்கு இடமாற்றல் பின்போடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## கதை, கவிதைப் போட்டி முடிவுகள்

நவாலி,நவ.14

கலாசார அலுவல்கள் அமைச்சினால் அரச ஊழியர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கவிதை, கதை, சிறுவர்கதை, பாடல் போன்ற போட்டிகளில் 13 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூவரும் அடங்குகின்றனர்.

சிறுவர் கதைப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மானிப்பாய் தெற்கு கிராம சேவையாளராகப் பணிபுரியும் இ.இராசயோகனும், சிறுவர் கதை மலரில் கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய ஆசிரியை கந்தசாமி மேதவியும், கவிதைப் போட்டியில் ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் நூலகர் என்.கருணைதாசனும் இவ்வாறு பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு கலாசார அலுவல்கள் அமைச்சில் இடம்பெறவுள்ளது. (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக உதவியாளர் (ஆண்) தேவை

யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ள கம்பனி ஒன்றுக்கு அலுவலக உதவியாளர் (ஆண்) தேவை. விண்ணப்பிப்பவர் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
2. ஆங்கிலம் / சிங்களம் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
3. ஒழுக்கமானவராகவும், நேர்மையானவராகவும் இருத்தல் வேண்டும்.
4. 8 கிலோ மீற்றருக்குள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது.
5. வயதெல்லை 20 - 40

பொருத்தமான விண்ணப்பதாரிகள் தமது நற்சான்றிதழ்களுடன் சுயவிவரத்தை விளக்கமாக எழுதி 15.11.2004 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**விள.இல: 2437,**
**மே/பா உதயன்.**

(சி-39025) (39-14-17-26)

## 7 ஆம் ஆண்டு நெஞ்சம் மறவாத நினைவலைகள்

தோற்றம் 13 - 04 - 1935



மறைவு 02 - 11 - 1997

### திருமதி தர்மராசா கனகாம்பிகை

திதி: துதியை 14.11.2004

எங்கள் அன்புக்கும் பாசத்துக்கு உரியவரே!
குடும்பத்தின் குலவிளக்காய்
பாசத்தின் திருவுருவாய்த் திகழ்ந்த தாயே!
உங்கள் நினைவுகள் காலங்கள் நகர்வதால் மறந்திடல்
- இல்லை
என்றும் பசுமையாய் நெஞ்சில் சுமக்கும்
நினைவுகளாக நிலைத்து நிற்கின்றன.

*பிளாக் வீதி,*
*சங்கானை.* (38607)

உங்களையே நிதம் தேடும்
கணவர், பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 06 - 1936



மறைவு 09 - 11 - 1999

### அமரர் பழனிப்பிள்ளை இராஜமாணிக்கம்

துதியை 14-11-2004

அன்பு கொண்டு எமை அரவணைத்து
பண்பு காட்டி எமை வளர்த்த
எம்குல தெய்வம் எமை விட்டுமறைந்து
ஐந்தாண்டுகளானாலும் மறையாது
உங்கள் நினைவலைகள் எம் மனதில்!

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.*

"குற்றாலம்"
அல்வாய் வடக்கு,
அல்வாய்.
(38598) (26-14-17)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### இரத்தினம் மருதமுத்து

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியைச் சேர்ந்த இரத்தினம் மருதமுத்து அவர்கள் நேற்று 13.11.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வம், சந்திரசேகர், முரளிதரன், விக்கினராஜா, சண்முகராஜா, செந்திமதி, பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (38600)(39-14-17-26)

தகவல்:
லக்சுமி (மனைவி).

## சதுரங்கப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயினால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் உள்ளக விளையாட்டுக்களில் ஒன்றான சதுரங்கப் போட்டி அண்மையில் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆண்கள், பெண்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாகவும் திறந்த போட்டியாகவும் இடம்பெற்ற இப்போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**10 வயது ஆண்கள்**

எஸ்.சஞ்சயனுக்கும், எஸ்.அபிஸ்கருக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் எஸ்.சஞ்சயன் முதலாமிடத்தையும் எஸ்.அபிஸ்கர் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**10 வயதுப் பெண்கள்**

செல்வி கே.டிலுசிக்கும் செல்வி ரி.பிரதீபாவுக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் முதலாமிடத்தை செல்வி ஜே.டிலுசியும் இரண்டாமிடத்தை செல்வி ரி.பிரதீபாவும் பெற்றுக் கொண்டனர்.

**14 வயது ஆண்கள்**

எஸ்.விஷ்ணுசந்திரனுக்கும், ஐ.சங்கர் தினேஸுக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் எஸ். விஷ்ணுசந்திரன் முதலாமிடத்தையும், ஐ.சங்கர் தினேஷ் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**16 வயது ஆண்கள்**

எஸ்.விஷ்ணுசந்திரனுக்கும் ரி.கமலச்சந்திரனுக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் எஸ்.விஷ்ணுச்சந்திரன் முதலாமிடத்தையும் ரி.கமலச்சந்திரன் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**18 வயது ஆண்கள்**

எஸ்.அர்ச்சுதபாயனுக்கும் பி.கெனத்ஜீத்திரோவுக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் எஸ் அர்ச்சுதபாயன் முதலாமிடத்தையும் பி.கெனத் ஜீத்திரோ இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**45 வயதுக்கு மேல் ஆண்கள்**

ரி.இராஜலிங்கத்திற்கும் எ.கே.சௌந்தர நாயகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் ரி.இராஜசிங்கம் முதலாமிடத்தையும் எ.கே. சௌந்தரநாயகம் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான திறந்த போட்டியில் எஸ்.ராதிகாவும், கே.யாழினியும் விளையாடியதில் முதலாமிடத்தை எஸ்.ராதிகாவும் இரண்டாமிடத்தை கே.யாழினியும் பெற்றுக்கொண்டனர். (10-86-190)

## பளு தூக்கும் போட்டியில் யாழ்.பல்கலை அணிக்கு மூன்றாமிடம்

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 8ஆவது மினி ஒலிம்பிக் போட்டியின் பளுதூக்கும் போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணி மூன்றாமிடத்தினைப் பெற்றுள்ளது.

77 கிலோகிராம் பளுதூக்கும் போட்டியல் எம்.பசிரதன் வெள்ளிப் பதக்கத்தினையும், 85 கிலோகிராம் பளு தூக்கும் போட்டியில் எஸ்.கிரிதரன் வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுள்ளனர்.(10-190)

## வீர,வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனா

வலி.வடக்கு, நவ.14

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் இடம்பெற்ற மேசைப் பந்தாட்டப் போட்டியல் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகள் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ் மாவட்டப் பிரிவினால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பணிமனையில் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பொ.ஈஸ்வரன் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

வீரர்களான ஆர். நிதர்சன், ஜே.மோகன் மற்றும் வீராங்கனைகளான செல்வி எஸ். சாரண்யா, செல்வி எ.கிருஸ்யா, செல்வி எஸ். பானுரேகா, செல்வி ஆர். கஜந்தினி ஆகியோரும் கௌரவிக்கப்பட்வர்களாவர்.

கௌரவிப்பு நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத் துறையினர், விளையாட்டு உத்தி[illegible] ஆகியோர் கலந்து கொண்டனர். (10-86)

## மேசைப்பந்தாட்டப் போட்டிகள் அடுத்தவாரம் நடைபெறும்

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்ப்பாணம் வைஎம்.சி.ஏயினால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் உள்ளக விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் அடுத்தவாரம் முதல் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

பெண்களுக்கான திறந்த இரட்டையர் போட்டிகள் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கும் 18 வயது ஆண்கள் தனிநபர், இரட்டையர் போட்டிகள் 17ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கும் 18 வயது பெண்கள் தனிநபர் மற்றும் இரட்டையர்களுக்கான போட்டிகள் 18ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கும் 12, 14, 16 வயது ஆண்களுக்கான தனிநபர் போட்டிகள் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (10-86-190)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
யாழ்ப்பாண வணிக நிலையம், யாழ்ப்பாண இரும்பகம்
ஆகியவற்றின் உரிமையாளருமாகிய

### தர்மலிங்கம் பரராஜசிங்கம்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரமடைகின்றோம்.
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**
(C/39033)(42-14-17-26)

## மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம்

அமரர் சூரியஜீவன் குகாநந்தி
அவர்களின்
ஞாபகார்த்தமாக நடத்தும்

### மாபெரும் மருத்துவ முகாம்

இடம்: வேலணை ஐயனார் வித்தியாலயம்
திகதி: இன்று (14-11-2004) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 9.00 மணி (காலை)

இம்முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் ஏனைய பரிசோதனைகளும், சிகிச்சைகளும் இடம்பெறும்.

இதில் கலந்துகொண்டு அனைவரையும் சுகவாழ்வு பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Leo T. விஜயகுமார்
தலைவர்.
(38604) (26-14-17)

லியோ S.சயந்தன்
செயற்திட்ட இயக்குநர்,
சுகாதாரம்.





இப்பொழுதே எங்களது பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று மூன்றே மூன்று வருடங்களில் திறமை மிக்க பட்டதாரியாக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள்!

எமது கற்கை நெறியான
- Bachelor of Business Management (BBM)
- Bachelor of Computer Applications (BCA)

ஆகிய இரு பட்டப்படிப்புகளை இலங்கையிலேயே மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் வேலை இல்லாத் திண்டாட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

(Minimum Qualification Required : A/L-2 Simple Passes in any stream)

அனுமதிக்கு முந்துங்கள்!

**Dr. M.G.R. DEEMED UNIVERSITY**
Offshore Campus

**INFORMATION AND ADMISSION CENTRE**
#195, Navalar Road, Jaffna. ☎: 021 222 2840

இலவச கருத்தரங்கு

"உயர் கல்விக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு"
உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்து கொள்ளுங்கள்

காலம் - 20.11.2004
இடம் - MPCS, கேட்போர் கூடம், K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் - காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை

UTHAYAN Graphics


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பன் சூ.பகீரதனின் தாயார்

### திருமதி சூரியபாலன் யோகநாயகி

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

தயாளன் தனுஷியா கூல்பார்
உரிமையாளரும், ஊழியர்களும்.

(சி-39034)(38-16-15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி றோசம்மா நாகமணி



ஏழாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி றோசம்மா நாகமணி அவர்கள் நேற்று (13.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசத்தின் (கிளாக்கர் - நாகமணி) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"யசிந்தா இல்லம்"*
*ஏழாலை கிழக்கு,*
*ஏழாலை.*
*T.P. 0602213278.*

தகவல்:
N.N.அரியரத்தினம்
(மகன்)

(38617)(38-16-15)

### திருமதி செல்வமணி சிவசுப்பிரமணியம்



82/5, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி சிவசுப்பிரமணியம் அவர்கள் 12.11.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை - பொன்னம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலு, பார்வதியின் அன்பு மருமகளும் கணேசலிங்கம் (சுவிஸ்), மகாலக்சுமி, அமுதலிங்கம் (சுவிஸ்), ஸ்ரீகலா, பவானி (பிரான்ஸ்), றஜனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தெய்வேந்திரம், உஷாதேவி (சுவிஸ்), சுமதி (சுவிஸ்), காலஞ்சென்ற ஸ்ரீகுமார், அற்புதராஜா (பிரான்ஸ்), சுகந்தினி ஜெபநேசன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் திஷாந்தன் (பிரான்ஸ்), சாமுவேல் (சுவிஸ்), ஜேம்ஸ் (சுவிஸ்), றெபேக்கா (சுவிஸ்), தனுசாந், சியாம்சாந், பிரசன்னா (பிரான்ஸ்), ஜோயல் (பிரான்ஸ்), கிறேஸ் (சுவிஸ்), பிலீவ் (சுவிஸ்), பிளஸ்சி (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் மகேந்திரம், கனகையா, வரதலக்சுமி, ஆனந்தம்மா, திங்கள்ராணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சரஸ்வதி, தேவி, தவராசா, கந்தசாமி, தியாகராஜா ஆகியோரின் மைத்துனியும் போல் சற்குணராஜா (சுவிஸ்), கோபி, கோமளா, சுதாஸ் (பிரான்ஸ்), நகுலதாஸ் (ஜேர்மனி), கவிதா (லண்டன்), சுமதி (டென்மார்க்), தயானி (சுவிஸ்), தர்சினி (கனடா) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக றெலிகொம் வீதியில் உள்ள கிறிஸ்தவ மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*82/5, பருத்தித்துறை வீதி,*
*3ஆம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மக்கள், மருமக்கள்.

(38615)(30-38-16-15)

## கண்ணீர் அஞ்சலி

யா/மத்திய கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவனும் சிறந்த துடுப்பாட்ட வீரனுமான

### வெ.சிவபோதிநாதன்

அவர்கள் காலமானதையிட்டு வருந்துகிறோம். அவருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்.

**சென்றல் விளையாட்டுக் கழகம்.** (சி-39035)(38-16-15)

## பிற்போடப்பட்டுள்ளது

இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தின் வளர்ச்சிக்காக நடத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 15.11.2004 நடைபெறவிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 29.11.2004 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி
நிலையங்களின் சமாசம்,
யாழ்.மாவட்டம்.

நா. கணேசன்,
தலைவர்.

(38608)(38-16-15)


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது.
தனுஷ், வுஸ்லி, பிரியா நடித்த
ட்ரீம்ஸ் (ரீல்ஸ)
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(சி-38673)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
தீபாவளி வெளியீடாக இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக R.B. சௌத்திரியின் தயாரிப்பில் சரத்குமார், திரிஷா, வடிவேல் நடித்த
ரிக்கெற் முற்பதிவுகள் யாழ். வெலிங்டன் சந்தி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். நாகம்ஸ் சினிமா.
டொல்பி ஒலி அமைப்புடன்
சத்ரபதி
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)



லக்சுமி சினிமா இணுவில்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சிம்பு (இருவேடம்), ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்
மன்மதன்
தினசரி: 11.00, 3.00, 7.00, 10.00 புதிய நேரம்
பதிவு ஆசனம்: 0776592008
(38480)



ராஜா யாழ்ப்பாணம்
அஜித் + அஜித், பூஜா நடித்த
அட்டகாசம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30.
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-38750)

நிரஞ்சனாஸ் சங்கானை
ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
(சி-38672)


## கண்ணீர்க் காணிக்கையும், இறுதிக்கிரியை அறிவிப்பும்



### நாகப்பர் கிருஷ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், உள்ளூராட்சித் திணைக்களம்)

பருத்தித்துறை புலோலி மத்தி, அவ்வொல்லையைச் சேர்ந்த நாகப்பர் கிருஷ்ணபிள்ளை கடந்த 11.11.2004 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

எமது அன்புத் தெய்வத்திற்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற நாகப்பர் சின்னப்பிள்ளை தம்பதியினரின் நான்காவது மகனும் குழந்தையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தேவசுந்தரம் (இலங்கை ஜேர்மன் பயிற்சிக்கல்லூரி), ஜெபநேசன் உமாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவபுரத்தரசன் (ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை), பரராஜசிங்கம் பிரேமலதாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணபதிப்பிள்ளை ஜெபநேசன் (ஜேர்மனி), சின்னத்துரை பரராஜசிங்கம் (சுவிஸ்), கிருஸ்ணபிள்ளை சிவசோதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ப.பிரதீபிகா, ப.பிரசன்னா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை பார்வதி, கார்த்திகேசு, தங்கராசா, வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஏரம்பு செல்வராசா (நகரசபை, பருத்தித்துறை), காலஞ்சென்ற ஆ.கிருஸ்ணபிள்ளை (J.P - சோதிடர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சுப்பர்மடம் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அவ்வொல்லை,*
*பருத்தித்துறை.*

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

(சி-39037)(38-15-16)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கந்தசாமித்துரை

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்)



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாயைச் சேர்ந்தவருமான வேலுப்பிள்ளை கந்தசாமித்துரை அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணபூஷணத்தின் அருமைக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும் ஆறுமுகசாமி, அருணாசலத்துரை, சிவசோதித்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரவீந்திரன் (அமெரிக்கா), நிர்மலா (ஆஸ்திரேலியா), வத்சலா (திருகோண மலை), சறோஜா (மனிப்பாய்), சுந்தரேஸ்வரன், ஜெயக்குமார் (பருத்தித்துறை), சிவகுமார் (டேவிட்), காலஞ்சென்ற மகேசன் மற்றும் ஆனந்தி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ரஞ்சிதமாலா, கதிர்காமத்தம்பி, பரமேஸ்வரன், தங்கரானி செல்வராணி, வேல்நாயகம், ரோகினி ஆகியோரின் அருமை மாமனாரும் சுரேஸ், மீரா (அமெரிக்கா), மணிமோகன் (லண்டன்), கிருஸ்ணமோகன், விஜயமோகன், அருள்மோகன் (மானிப்பாய்), செந்தில்குமார், கணேஸ்குமார், செந்தூரன், நித்தியஜீவன், தஷ்சாயினி, அரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சந்திரகிரி"*
*லோட்டன் வீதி,*
*மானிப்பாய். T.P.0777 571910*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
க.பரமேஸ்வரன் (மருமகன்)
மாஸ்ரர்.

(38612)(38-15-16)

### சின்னத்துரை சிவராம்

(ஓய்வுபெற்ற கணக்காளர், மகாராஜா நிறுவனம், கொழும்பு)



பறாளாய் வீதி, சுளிபுரத்தைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய சின்னத்துரை சிவராம் அவர்கள் 13.11.2004 கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அமராவதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஜெயமணியின் அன்புக் கணவரும் சிவவதனி, சிவ ஜெயந்தன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும் பிரபாகரன், உதயகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்வியாவின் பேரனாரும் காலஞ்சென்றவர்களான சிவசண்முகம், சிவப்பிரகாசம், சிவசம்பு, சிவகாருண்யம், சிவலிங்கம் ஆகியோரின் சகோதரரும் நவமணி, சிவஞானம்பிள்ளை, கந்தவனம், சிங்காரநாதன், யோகமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*APT # 206 - 130*
*BELLAMY ROAD,*
*SEARBOROUGH,*
*ONTARIO. MIJ 2L2 CANADA.*

தகவல்:
இராசையா,
குடும்பத்தினர்.
*T.P.001 416 289 1410*

(38610)(38-15-16)

### சின்னத்தம்பி நாராயணசாமி (மனேச்சர்)

(முன்னாள் கிளை முகாமையாளர், MPCS, சங்கானை)



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுளிபுரம் மத்தி சுளிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாராயணசாமி அவர்கள் 12.11.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வலட்சுமியின் அன்புக் கணவரும் பாலகிருஸ்ணன் (குமார்), கோபாலகிருஷ்ணன் (MPCS, சங்கானை), ராதாகிருஷ்ணன், அமரர் செல்வகிருஷ்ணன், ஆனந்தகிருஷ்ணன் (ஓமான்), சிவராமகிருஷ்ணன் (MPCS,சங்கானை), கௌரி (நவாலி மகாவித்தியாலயம்), மனோகரி (யாழ்ப்பாண மின்னகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாமாதேவி, கிருஷ்ணவேணி (MPCS, சங்கானை), சுதாஜினி, திருவரங்கன் (யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் கோபிதாஸ், பபிதா, சிவசங்கர், மாதங்கி, பிரியங்கி, சுஜீவன், திவானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2004) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சுளிபுரம் மத்தியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுளிபுரம் மத்தி,*
*சுளிபுரம்.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(38614)(38-15-16)

### திருமதி சர்வானந்தம் நவமணி

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி சர்வானந்தம் நவமணி நேற்று (13.11.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதன் - சிவக்கொழுந்து தமபதியினரின் மூத்த மகளும் அச்செழுவைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் மூத்த மருமகளும் கிருஷ்மதி (சுவிஸ்), வளர்மதி (கால்நடை அபிவிருத்திப் பணிமனை, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஜெயந்தன் (நீர்வேலி) ஆகியோரின் அன்பு மாமியும் கோபிநிஷா, அபிஷா (சுவிஸ்), தரணிஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விகினேஸ்வரன் (காரைநகர்), தயாமணி விஜயசிங்கம் (அராலி), மகேஸ்வரன் (ஜேர்மனி), சோமேஸ்வரன் (பிரான்ஸ்), மனோன்மணி ரகுநாதன் (கொழும்பு), பாலேஸ்வரன் (ஜேர்மனி), பேரின்பமணி சிவதாஸ் (ஜேர்மனி) விமலாமணி ரவி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அற்புதராசா, பவளராணி, செல்வராணி, கோகிலராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியூாக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
சி.சர்வானந்தம் - கணவர்
(முன்னாள் ஊழியர் - பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ் - யாழ்ப்பாணம்).

(38616)(38-15-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி கூட்டுப் படைத்தள தகர்ப்பின் வெற்றி விழா

பூநகரி இராணுவக் கூட்டுப்படைத் தளத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் வெற்றிகொண்ட 'தவளை' நடவடிக்கையின் பதினோராம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று மாலை பூந கரி வாடியடிப்பகுதியில் சிறப்பாக நடைபெற்றன.

ஆரம்ப நிகழ்வாக, தவளைத் தாக்குதலில் இலங்கை இராணுவத்தின் டாங்கி தகர்க்கப் பட்ட இடத்தில் இருந்த கடற்கரும்புலி மேஜர் கணேஸ், கடற்கரும்புலி மேஜர் கோபி ஆகி யோரின் உருவப்படங்கள் 'பாண்ட்' வாத்திய இசை அணிவகுப்புடன், பூநகரி வாடியடிப்பகுதி யில் அமைக்கப்பட்ட அரங்கத்திற்கு எடுத்து வரப்பட்டன.

மாலை 5 மணிக்கு வாடியடியில் ஆரம்பமான நிகழ்வில், பொதுச்சுடரினை கடற்புலிகளின் தளபதி பகலவன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட கடற் புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றினார்.

கடற்கரும்புலி மேஜர் கோபியின் உருவப் படத்திற்கு பூநகரி பிரதேச செயலர் ஸ்ரீஸ்கந்த குமார், கடற்கரும்புலி மேஜர் கணேஸின் உருவப்படத்திற்கு கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தமிழன் ஆகி யோர் மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து மாவீரின் உருவப்படங்களுக் கான ஈகச்சுடர்களை மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் மற்றும் பூநகரி வர்த்தக சங்கத் தலைவர் ஆகியோர் ஏற்றினர்.

நினைவுக் கல்லுக்கான பொதுச்சுடரை கடற்புலிகளின் துணைத்தளபதி செழியனும் பூநகரி காவல் பணிமனைப் பொறுப்பாளர் சுந்தரும் ஏற்றினர்.

இந் நிகழ்வில் கடற்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த பூரணி, பூநகரி பிரதேச செயலர், பூநகரி பங்குத்தந்தை ஆகியோர் உரைநிகழ்த்தினர். தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-12)

# மன்னாரில் இளைஞர் சுட்டுக்கொலை!

மன்னார்,நவ.14

மன்னார் நகரில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் மன்னாரைச் சேர்ந்த எஸ்.ஜெயநேசன் என 'இனங்காணப்பட்டுள் ளார். "போதைப் பொருள்களுடன் தொடர்புடைய வர்களுக்கு இனிமேல் இதுதான் தண்டனை" என்ற சுலோகங்களுடன் கூடிய அட்டை ஒன்று சடலத்துக்கு அருகில் காணப்பட்டது. 'எல்லா ளன் படை' என்ற அமைப்பு இக்கொலைக்கு உரிமை கோரியுள்ளது என்று கூறப்பட்டது. (ஐ-3-13)

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக்காலமாக கட்சிக்குள் முரண்பாடு கள் அதிகரித்து வருகின்றன என்றும் இதன் உச்சமாகவே சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கொலைசெய்யப்பட்டனர் எனவும் அதில் சுட் டிக் காட்டப்பட்டிருக்கிறது. (ஐ-3)

## தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்துக் குடும்பங்களுக்கு சமூக நலன் திட்டத் தின் கீழ் உதவிகளும் வழங்கப்படவிருக்கின்றன.

பல்வேறு நலன்சார் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றன என்றும் அவர் மேலும் கூறினார்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் பொங்கல் பொங்கி யும் இனிப்புப் பண்டங்கள் வழங்கியும் பிறந்த நாளைக் கொண்டாடவும், ஆலய பிரார்ண சபை யினருடன் இணைந்து ஆலயங்களில் பூசைகள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ஐ-3)

# எரிக் சொல்ஹெய்ம் இந்தியா பயணம்

கொழும்பு,நவ14

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கம் அளிப்பதற்காக நோர்வே சமாதா னக் குழுவின் விசேட ஆலோசகர் எரிக்சொல் ஹெய்ம் நேற்று பிற்பகல் இந்தியாவுக்கு புறப் பட்டார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்த அவர் கட்சித் தலைவர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் விரிவாகப் பேச் சுக்களை நடத்தியிருந்தார். (ஐ-3)

# பாகிஸ்தான் போர் கப்பல்கள் வருகை

பாகிஸ்தான் நாட்டின் இரண்டு இராணுவப் பயிற்சிக் கப்பல்கள், நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்திற்கு இன்று வரவிருக்கின்றன. இலங்கை கடற்படையினர் மற்றும் பாகிஸ் தான் தூதரகம் ஆகியவற்றின் உயர் அதிகாரி கள் இந் தக் கப்பல்களைப் வரவேற்கவுள்ளனர். பி.என்.எஸ். நஸீர், பி.என்.எஸ்.தாரீக் ஆகிய இருகப்பல்களும் 3 நாள்களுக்கு கொழும்புத் துறைமுகத்தில் தங்கிநிற்கவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

# சிறுவனின் சடலம் ஒப்படைப்பு

சுகவீனம் காரணமாக இறந்ததாகக் கூறப்படும் சிறுவன் ஒருவனின் சடலம் நேற்று இரவு 10 மணியளவில் யாழ். போதனாவைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டது.

கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த பரமேஸ்வரன் கருணாகரன் (வயது-7) என்ற சிறுவனின் சடலமே ஒப்படைக்கப்பட்டது.

இவர் கடந்த 3 தினங்களாக கடும் வயிற்று வலி மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந் தார் என்றும் - இவருக்கு தனியார் மருத்துவமனை யில் மருந்து பெறப்பட்டதாகவும் - உறவினர்கள் தெரிவித்தனர். சடலம் பிரேத பரிசோதனைக் காக போதனாவைத்தியசாலைப் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## சங்கராச்சாரியாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டு அவமானப்படுத்தும் செயலாக விஸ்வ இந்து பரிஷத் கருதி, இதனை வன்மையாகக் கண்டிக்கிறது. ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளும், ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கரமடமும் எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல் இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று விஸ்வ இந்து பரிஷத் நம்புகிறது.

தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.நாராயணன் விடுத்த அறிக்கை யில் - காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயிலின் உள்ளேயே கோயில் நிர்வாகி சங்கரராமன் படுகொலை செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக தமிழகப் பொலிஸார் ஜெயேந்திரரை கைது செய்திருப்பது அனைத்துப் பக்தர்களுக்கும் பெரும் அதிர்ச்சியினையும், மிகுந்த மனவேத னையையும் அளிக்கிறது. இரண்டாயிரத்து 500 ஆண்டு பாரம்பரிய காஞ்சிமடத்தின் மடாதி பதியும், கோடிக்கணக்கான இந்துக்களின் குரு வுமான ஜெயேந்திரரை, அவரின் வயது, உடல் நிலை ஆகியவற்றை மனதில் கொள்ளாமல் நள்ளிரவில் கைதுசெய்து பக்தர்களிடையே பெரும் வருத்தத்தை உருவாக்கியுள்ளது. எந்த வழக்காயினும் குற்றம் சாட்டப்பட்ட காரணத் தினாலேயே ஒருவர் குற்றவாளியாகி விடமுடி யாது என்பதை நாடு அறியும். இந்தச் சூழ் நிலையில் சட்டபூர்வ நடவடிக்கைகளை கடைப் பிடித்த தமிழக அரசு, ஜெயேந்திரரை உடனடி யாகப் பிணையில் வெளிவிட உதவவேண்டும். தற்காலிக சூழ்நிலைகள் மற்றும் நிகழ்வுகளால், காஞ்சிமடத்தின் சிறப்பு, நற்சேவைகளும் எவ வகையிலும் பாதிக்காத வகையில் அனைத்துப் பக்தர்களும் நடந்துகொள்ளவேண்டும். (ஐ)

## பாலசிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் கேனல் சூசை, திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேனல் சொர்ணம், வட முனைத்தளபதி கேனல் ஜெயம், மட்டு-அம் பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல் யன் உட்பட பொறுப்பாளர்கள், போராளிகள் அங்கு கூடியிருந்தனர்.

பாலசிங்கம் தம்பதியர் நேற்று நண்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து லண்டன் புறப்பட்டனர். (ஐ-3-12-13)

## ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

ஆங்கிலத்துக்கு 400 பேரும், ஆரம்ப கல் விக்கு 350 பேரும், கடல்வளம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கு தலா 75 பேரும், கணித, விஞ்ஞான பாடங்களுக்கு தலா 25 பேரும் நிய மிக்கப்படவுள்ளனர்.

எஞ்சிய 50 பேர் அழகியல் கலைப் பாடங் களுக்கு நியமிக்கப்படுவர்.

இதற்கிடையில் -

கடந்த காலங்களில் ஆசிரியர் நியமனத் துக்கான நேர்முகப்பரீட்சைகள் மாவட்ட மட்டத் தில் நடத்தப்பட்டன. ஆனால், இம்முறை சகல மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் திருகோண மலையிலேயே நேர்முகப்பரீட்சை நடத்த ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழர் ஆசி ரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (எ-3)

# பேச்சு முயற்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை விடுதலைப் புலிகள் முன்வைத்திருந் தனர்.

புலிகளின் புதிய யோசனைகள் குறித்து அமைச்சர் பீற்றர்ஸன் வியாழக்கிழமை இரவு ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கியிருந்தார்.

புலிகளின் புதிய யோசனைகள் என்ன என்பதோ அல்லது அதற்கு ஜனாதிபதியிடமி ருந்து எத்தகைய பிரதிபலிப்பு வெளிப்பட்டது என்பது பற்றியோ இன்னமும் எந்த விவரங் களும் வெளியாகவில்லை. எனினும் நேற்று வன்னியில் இருந்து புறப்பட்ட அரசியல் ஆலோ சகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று நண்பகல் கொழும்பு விமான நிலையத்தை அடைந்ததும் அங்கு நோர்வே அனு சரணைக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல் ஹெய்ம், கொழும்புக் கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆகியோரைச் சிறிது நேரம் சந்தித்துப் பேசி னார்.

கட்டுநாயக்க விமான நிலைய விடுதியில் - மதியபோசனவேளை - இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸன் தலைமையிலான குழு வின் வியாழன் இரவு ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்களின் விவ ரங்களை நேற்று விமான நிலையச் சந்திப்பின் போது எரிக் சொல்ஹெய்ம் பாலசிங்கத்துக்கு விளக்கினார் என்று அறியவந்தது. புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதியின் பிரதிபலிப்பு எப் படி அமைந்தது என்பதையும் எரிக் சொல ஹெய்ம் பாலசிங்கத்துக்குத் தெரியப்படுத்தினார் எனவும் தெரிகிறது. எனினும், பேச்சுக்களை முன்நகர்த்துவதற்கான முயற்சிகளில் உடன டித் திருப்பம் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை என்று விடுதலைப் புலிகளின் உயர் வட்டா ரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு எடுக்கப் பட்டுவரும் முயற்சிகளின் அடுத்த நகர்வுகள் பெரும்பாலும் விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்துக்குப் பின்னரே இடம்பெற வாய்ப்பி ருப்பதால் அடுத்துவரும் நாள்களில் எத்தகைய முன்னேற்றமான நகர்வுகளை எதிர்பார்க்க முடி யாது என்று அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. தற்போதைய அரசியல் சூழ்நிலை, எதிர் கால நகர்வுகள் என்பன பற்றி விடுதலைப் புலி களின் தலைமை கடந்த சில தினங்களாகத் தீவிர மந்திராலோசனை நடத்தியிருக்கின்றது.

மாவீரர் தினத்தன்று விடுதலைப் புலிகளின் தலைவர் ஆற்றவுள்ள விசேட உரையில் புலி களின் நிலைப்பாடு தெட்டத்தெளிவாக வெளி யிடப்படும். அதன் பின்னரே அடுத்த நகர்வு களை எதிர்பார்க்கலாம் - என்ற கருத்தே புலி களின் வட்டாரங்களிலும் தெரிவிக்கப்படுகின் றது. (ஐ)

## தொடரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளரும் மேற்கொண்டிருந்தனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு 3 நாள்களுக் குச் சமைத்த உணவு வழங்கும்படி கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் பிரதேச செயல கத்தினரைப் பணித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை கிளி நொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாகப் பொறுப்பாளர் ரெஜி, தமிழீழ நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பகிரதன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் காண்டீபன், பளை - பச் சிலைப்பள்ளி பிரதேச செயலர் ச.சிவசிறி ஆகி யோர் நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையா டினர். அவர்களுக்கு உடனடியாகச் செய்யவேண டிய உதவிகள் குறித்து இவர்கள் ஆராய்ந்த னர். (எ-3-352)

## பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த் தனையும் நேற்றுச் சந்தித்தார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை பெரும் பாலும் சீராகக் கடைப பிடிக்கப்பட்டுவருகின்ற போதிலும் இன்னமும் அதனைச் செம்மை யாகக் கடைப்பிடிக்க இரு தரப்பினரையும் நோர்வே வற்புறுத் வேண்டும் பேச்சு ஆரம் பிப்பது தாமத மான லும், யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து இறுக்க மாகக் கடைப்பிடிப்பது அவசியம் என்றும் - சித்தார்த்தன் சொல் ஹெய்மிடம் வலியு றுத்தினார். (ஐ-3)


IIS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
14-11-2004
இக்கல்வியாண்டு 2004/2005 இறுதிப் பிரிவுகளிற் கான வகுப்புக்கள் 14ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம் பமாகவுள்ளன.
இப்பிரிவில் அனைத் துக் கணனிக் கற்கை நெறிகளும் ஆரம்ப மாகவுள்ளன. புல மைப்பரிசில் திட்டம் 2004 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இவ் இறுதிச் சந்தர்ப்பத் தினைப் பயன்படுத் திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.
இயக்குநர், IIS,யாழ்ப்பாணம். (38573)



திரு ரியூசன் சென்றர்
கோண்டாவில்
A/L 2006
வரிசைமாற்றம் சேர்மானம்
By: S.பிரதீபன்
ஆரம்பம்: 15.11.2004
திங். - 7.00 a.m.
(38613)



sky
SKY COMPUTERS (PVT) LTD
AFFILIATED WITH IRISH INTERNATIONAL UNIVERSITY (UK)
No,89, Kandy Road, Chundikuli, Jaffna. Tel: 021-4590325 fax: 021-4590325
No, 90, Galle Road, Colombo - 04 Tel: 0115-335261 fax: 0115-371229
Diploma in MS Office - 3 Months
Certificate in MS - Word - 1 Month
Certificate in MS - Excel - 1 Month
Certificate in MS - Access - 1 Month
Certificate in MS - Power Point - 1 Month
Ms-Office 1500/-
WINDOWS INTERNET, E-MAIL HARD WARE Introduction
Diploma in Desk Top Publishing - 3 Months
Certificate in Adobe Photoshop - 1 Month
Certificate in Adobe PageMaker - 1 Month
Certificate in CorelDRAW - 1 Month
(E - mail : skycom@wow.lk)
Today you learn Tomorrow you lead


# மரண அறிவித்தல்

## கயிலாயபிள்ளை வாரித்தம்பி

### (கல்வயல், சாவகச்சேரி)

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக்கொண்ட கயிலாய பிள்ளை வாரித்தம்பி அவர்கள் நேற்று (13.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆகயிலாயபிள்ளை - தெய்வானைபிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரனும் அம்மாக்குட்டியின் அன்புக் கணவரும் கணேசமூர்த்தி (முன்னாள் முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி), சடாட்சரம் (அதிபர், எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயம்), தவேந்திரன் (முன்னாள் முகாமையாளர், கரைச்சி ப.நோ.கூ.சங்கம்), நரேந்திரன் (ஜேர்மனி), பொன்மலர் (அமரர்), மனோன்மணி (தாதிய உத்தியோகத்தர், மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி) ஆகி யோரின் அன்புத் தந்தையும் இராசலட்சுமி, மகேஸ்வரி, யோகேஸ் வரி, பாக்கியலட்சுமி, கருணைராஜா (பிளம்பர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சி.சற் குணம் (அமரர்), திருமதி ஆதருமபூபதி ஆகியோரின் அன்புச் சகோத ரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் கல்வயல் இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் சாவகச்சேரி கண்ணாபிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெருங்குளம் பிள்ளையார் வீதி,*
*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(38618)


EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...


யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/ 6297, 0772 2349999/ 8888
கொழும்பில் - 0112373952 / 3, வெள்ளவத்தையில் - 0112360290 / 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் ... 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர்கள் தமது தனித்துவத்தை இழந்து விடுவார்களோ என அச்சம் வருகிறது

## அங்கலாய்க்கிறார் சந்திரசேகரன்எம்.பி.

**மலையகத் தமிழர்களின் பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு என்பன போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாமலே இருக்கிறது. பெரும்பான்மையினருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மலையக மக்கள் ஏற்கனவே தமது தனித்துவத்தை இழந்து வருகின்றனர். இது மலையகத் தமிழர்கள் தமக்குரிய தனித்துவமான கலாசார பண்பாடுகளை எதிர்காலத்தில் அடியோடு இழந்து விடுவார்களோ என்ற அச்சத்தில் ஏற்படுத்துவதாக அங்கலாய்க்கிறார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன்.**

**'சுடர் ஒளி'க்காக பேட்டி என்றதும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்ட அவர் மலையக மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும், எம்முடன் பேசினார்.**

**அண்மையில் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விடயத்தில் பெரிய தொழிற்சங்கங்கள் நடந்து கொண்ட விதத்தை அவர் காரசாரமாக விமர்சித்தார். மலையக மக்களை மீட்க ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவா அவரது கருத்துக்களில் எதிரொலித்தது. இனி அவருடனான சந்திப்பு.......**

கே:– மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுபற்றி தாங்கள் கூறவிரும்புவது என்ன?

ப:– மலையகத் தோட்டத்தொழிலாளர்களின் தலைவிதி ஒரு சிலரால் மட்டும் தீர்மானிக்கப்படும் பாரிய மனிதவுரிமை மீறல் நீண்ட காலமாகத் தொடர்கிறது. சுமார் 10 லட்சம் தோட்டத் தொழிலாளரின் விருப்பு வெறுப்பு பற்றி எந்தவிதமான கேள்வியும் இன்றி, தாம் பெரியவர்கள் என்று காட்டிக்கொள்வதற்கும், துரைமார் சங்கத்துடன் தாம் செய்துகொண்ட வெவ்வேறு ஒப்பந்தங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தொழிற் சங்கங்களால் தொழிலாளர்கள் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளனர்.

வாழ்க்கைப்புள்ளி உயர்வுக்கு ஏற்ப தோட்டத் தொழிலாளர்களுக்கு 350 ரூபா சம்பளம் வழங்கப்படவேண்டும் என இலங்கை மத்தியவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அதுபற்றிக் கிஞ்சித்தும் கவனத்தில் எடுக்காமல் இன்னும் இரண்டு வருடத்தில் வாழ்க்கைப்புள்ளி எவ்வளவு அதிகரித்தாலும் சம்பள உயர்வு கேட்க முடியாத வகையில் அடிமை சாசனத்தில் கையொப்பம் இடப்பட்டுள்ளது.



தொழிலாளர்களிடம் எந்த அபிப்பிராயமும் பெறாமல் தமது விருப்பப்படியேஇலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியவை செயற்பட்டுள்ளன. இது தோட்டத் தொழிலாளரின் மனித உரிமையை மீறும்செயல்.

சம்பள விவகாரத்தில் தொழிற்சங்கங்கள் தொழிலாளரை ஏமாற்றினவா? துரைமார் சங்கம் ஏமாற்றியதா? இல்லாவிட்டால் இருபகுதியினரும் சேர்ந்து தொழிலாளர்களை ஏமாற்றினார்களா என்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது.

கே:– தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதிக்கு எதிராக நீங்கள் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

ப:– அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல்செய்வது பற்றி ஆலோசித்து வருகிறோம். தீபாவளிக்குப் பின்னர் இந்த வழக்கைத் தாக்கல்செய்வோம். அடுத்தகட்டமாக எம்மை ஆதரிக்கும் தொழிற்சங்கங்களை இணைத்துக்கொண்டு தோட்டம் தோட்டமாக எதிர்ப்புக் கூட்டங்களை நடத்துவோம். இழைக்கப்பட்ட துரோகம் குறித்து மக்களுக்கு விளக்குவோம். தோட்டத் தொழிலாளர்களைப் பரவலாக அணிதிரட்டி வீதியில் இறக்கிப் போராடுவதைத் தவிர வேறு வழி எமக்கு இல்லை என்றே தோன்றுகின்றது.

கே:– மலையக மக்களை தேசிய அரசியலில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று கூறிவரும் தாங்கள் அது பற்றி விளக்கமுடியுமா?

ப:– இந்த நாட்டில் சிறுபான்மைத் தமிழர்கள் எனும்போது வடக்கிலுள்ள தமிழர்கள், கிழக்கிலுள்ள தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என்று பிரித்துப்பார்க்கமுடியாது. தமிழர்கள் என்றால் எல்லோரும் தமிழர்கள்தான். இனரீதியான பாதிப்பு என்பது சகலருக்கும் ஒரேவகையில்தான் அமைந்துள்ளது. இலங்கையில் தமிழர் என்ற முத்திரையுடன் வாழும் அனைவரும் முகம் கொடுப்பது ஒரேமாதிரியான பிரச்சினைகளுக்குத் தான் என்பது அனைத்துத் தரப்பினரும் அறிந்தவிடயம்.

சுமார் 15 லட்சம் மலையகத் தமிழர்கள் எதிர்காலத்தில் தமது அரசியல் உரிமைகளை அடையவேண்டும். வெறுமனே சம்பள உயர்வு பற்றி மட்டும் பேசிக்கொண்டிருக்கமுடியாது. இன்று அவர்கள் சொந்த முகவரியை இழக்கும் நிலை தோன்றியுள்ளது. எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. இந்த நிலையில் அவர்களின் உரிமைகளை எப்படி வென்றெடுப்பது? இது எப்படி சாத்தியமாகும்? இதுதான் எமது சிந்தனை.

வடக்கு–கிழக்கிலே தமிழர்கள் சுமார் ஐம்பது வருடகாலமாகப் போராட்டம் நடத்திவருகின்றனர். அவர்களின் ஆயுதரீதியான போராட்டம் பலம் வாய்ந்த பின்னர் தான் தென்னிலங்கை அரசு அவர்களுடன் பேசுவதற்கு முன்வந்தது. இன்று இராணுவச் சமநிலையில் இருந்துகொண்டே தமிழர் தரப்புத் தமது கோரிக்கைகளை முன்வைக்கின்றன.

மலையகத் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடாவிட்டாலும் அவர்களுக்கும் சரிநிகரான அரசியல் உரிமை வழங்கப்படவேண்டும். விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள தீர்வுக்கான யோசனைகளுடன் மலையகத் தமிழர் பிரச்சினையும் உள்ளடக்கப்படவேண்டும்.

இதுபற்றி நாம் விடுதலைப்புலிகளிடம் பலமுறை வலியுறுத்தியுள்ளோம். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர். இது தொடர்பாகக் குறித்த சகல தரப்பிலும் நாம் வலியுறுத்தியுள்ளோம். அரசும் இந்த உண்மை நிலையை ஏற்று மலையகத் தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்க முன்வரவேண்டும். தற்போதைய விகிதாசாரத் தேர்தலிலும் கூட உள்ளூராட்சி சபைகளிலோ அன்றி நாடாளுமன்றத்திலோ மலையகத்தவர்களின் பிரதிநிதித்துவத்தை சரியாக பிரதிபலிக்க முடியாத நிலையே உள்ளது.

ஆனால், மலையகத்தவர் தமது தனித்துவங்களை இழந்து விடுவார்களோ என்ற அச்சம் இப்போது தோன்றியுள்ளது. பாதுகாப்புத் தொடர்பான சந்தேகம், வேலைவாய்ப்பு, கல்வி என்று இன்னோரன்ன மலைய மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமல் இருக்கின்றது. பெரும்பான்மை இனத்தவருடன் வாழ்ந்துகொண்டிருக்கும் மலையகத்தவர்கள் தமது தனித்துவங்களை இழந்து வருகின்றனர். நாளடைவில் அவர்கள் சிங்களவர்களுடன் சங்கமித்து விடுவார்கள் என்றே தோன்றுகின்றது.

மலையகத்தின் எல்லைப்புறங்களில் பல தமிழ் மாணவர்கள் சிங்களப் பாடசாலைக்குச் செல்கின்றனர். கலாசார ரீதியில் சிங்களவர்களைப் பின்பற்றுகின்றனர். இந்த நிலை மத்திய மலையகத்தில் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் அதிகரித்து வருகிறது. இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும். இதற்காக மலையக மக்கள் முன்னணி பல வேலைத்திட்டங்கள் பற்றி ஆராய்ந்து வருகின்றது.

கே:– மலையத்தில் ஜே.வி.பியினர் அரசி

(மறுபக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிலிங்கோ டயபிட்ஸ் நிலையத்தால் நீரிழிவு மாதமாக நவம்பர் பிரகடனம்

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதிலும் அதனை நிர்வகிப்பதிலும் முன்னிலையில் திகழும் நீரிழிவு வெளிநோயாளர் சிகிச்சை நிலையமான Ceylinco Diabetes Centre நவம்பர் மாதத்தை 'நீரிழிவு மாதமாக' பிரகடனப்படுத்தியுள்ளது.

'உலக நீரிழிவுதினம்' நவம்பர் மாதம் 14ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றபோதிலும் Ceylinco Diabetes Centre நவம்பர் மாதம் முழுவதையும் நீரிழிவு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதனையொட்டி நவம்பர் மாதம் முழுவதும் நீரிழிவுநோய் தொடர்பான பல்வேறுபட்ட விசாரணைப் பொதிகளுக்கு பத்து சதவீத விலைக் கழிவை இந்நிலையம் வழங்குகின்றது.

வைத்தியப் பரிசோதனைகள் மற்றும் பல்வேறுபட்டவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட நோயைக் கண்டறியும் சிகிச்சை முறைகள் உட்பட ஏழு விரிவான பொதிகளில் ஏதாவது ஒன்றுக்கு இவ் விலைக்கழிவு பொருந்தும்.

பொதுவான வைத்தியப் பரிசோதனைகள், நீரிழிவுநோய் கண்டறியப்பட்ட நோயாளிகளுக்கான சோதனைகள், வேகமாக வளர்ந்துகொண்டுவரும் நீரிழிவு நோய்க்கு உட்பட்டிருப்பவர்கள், சிறுநீரக நோயுடன் அவதிப்படும் நீரிழிவு நோயாளிகள், இளம் நீரிழிவு நோயாளிகள், நீரிழிவு நோய் இல்லாதோர் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்கள் என்று பல தரப்பினருக்கும் தேவையான சிகிச்சைகள் வரையும் இப்பொதிகள் உள்ளன. இந்நிலையத்தின் சிரேஷ்ட வைத்திய அதிகாரியான சாமந்தி டீ.சில்வா இதுபற்றிக் கூறுகையில்:-

இலங்கையில் ஏற்படும் மரணங்களுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றான நீரிழிவுநோயை ஆரம்பத்தில்தடுப்பதன்தேவை பற்றியும், நீரிழிவு நோயைக் குறைப்பது குறித்த முகாமைத்துவம் பற்றியும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டுவதே எமது நோக்கம்.

இலங்கையில் ஏழுபேருக்கு ஒருத்தர் என்ற விகிதத்தில் இந்நோய், தாக்கம் செலுத்துகின்றது.

இந்நோயினால் ஏற்படும் சிக்கல்கள் நீரிழிவு நோயைக் கண்டறிவதற்கான அம்சங்களாக அமைகின்றன.

இதயநோய், கண்பார்வை இழப்பு, சிறுநீரகம் செயலிழத்தல் மற்றும் உடல் உறுப்புகளை இழக்கநேரிதல் போன்றவையே நீரிழிவு நோயின் அதிகபட்சத் தாக்கங்களாகும்.

உலக நீரிழிவு தினமன்று நீரிழிவு பற்றிய பொது அறிவிப்பு ஒன்றையும் நடத்த எமது நிலையம் திட்டமிட்டுள்ளது.

Washington Hospital Centre உடன் இணைந்து Ceylinco Health Care Services நிறுவனத்தால் நிறுவப்பட்ட இந்த Ceylinco Diabetes Centre, Ceyilnco House இன் 6ஆவது மாடியில் அமைந்துள்ளது. இது நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த சிகிச்சைகளை வழங்கிவரும் வெளிநோயாளர் சிகிச்சை நிலையமாகும்.

Diabetology, Cardiology, Ophthalmology, Neurology, Nephrology, Dermatology & Diet and Nutrition போன்ற சிகிச்சை முறைகளையும் இந்நிலையம் வழங்கிவருகின்றது.

## மின்சார நாற்காலி



ஜப்பானின் மகுசாரி நகரில் நவீன மோட்டார் வாகனக் கண்காட்சி நடைபெற்றுவருகிறது. இந்தக் கண்காட்சியில் கார்கள் மட்டுமன்றி உடல் ஊனமுற்றோர் மற்றும் முதியோர்கள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகளும் இடம் பெற்றுள்ளன. தானியங்கி சக்கர நாற்காலியை சுசுகி மோட்டார் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

மின்சார பற்றரிமூலம் இயங்கும் இந்த மின்சார சக்கர நாற்காலிக்கு அவிசியா என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தச் சக்கரநாற்காலியை வீதியிலும் செலுத்தமுடியும். படிக்கட்டுகளிலும் இது ஏறி இறங்கும். மோட்டார் வாகன சட்டங்களுக்கு இது உட்பட்டதல்ல. அந்த சக்கர நாற்காலியின் ஒரு மொடல் இது.


இருமல்........ இருமல்........
எங்கும் இருமல்

இருமல், தடிமல், மூச்சுத் திணரல்,
(மூச்சு விட கஷ்ப்படுதல்)
மற்றும் எல்லாவிதமான.........




சித்தாலேப
இருமல் அரிஷ்ட



சித்தாலேப
சித்தாலேபயின்
இன்னுமொரு தயாரிப்பு

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட். 33/3, ஸ்ரீ தர்மராம றோட், இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: 2735465


**மலையக...**

(தொடர்ச்சி)

யலில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இது அங்கு ஓர் ஆரோக்கியமான அரசியலுக்கு வழி வகுக்குமா?

ப:— மலையகத்தில் ஜே.வி.பியினரின் ஊடுருவல் என்பது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது. மலையக மக்களுக்கு நம்பிக்கையூட்டும்வகையில் பசப்பு வார்த்தைகளை அவர்கள் கூறிவருகிறார்கள். மலையக மக்கள் பெரும்பான்மை இனத்தவருக்கு அடங்கிப்போய் விடவேண்டும் என்றே அவர்கள் நினைக்கிறார்கள்.

ஜே.வி.பி. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அவர்கள் இந்திய எதிர்ப்பாளர்களாக இருந்துவந்துள்ளனர். மலையகத் தமிழர்களை இந்திய விஸ்தரிப்புவாதிகள் என்று கூறிவந்தனர். இந்திய வம்சாவளித் தமிழர்கள் வெறியேற்றப்பட வேண்டும், அங்கு மாற்றுப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறிவந்தனர். மலையக 'மக்கள் பற்றி எவ்வித தெளிவும் அவர்களிடம் இல்லை. இன்றும் கூட அவர்கள் தமது முன்னைய கொள்கைகளை விட்டு மாறவில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
14-11-2004

# பேச்சு மேசையில் பச்சைப் புல்!

சர்வதேச வலைப்பின்னல் ஒன்றினூடாக விடுதலைப் புலிகளை இராஜதந்திர ரீதியாகச் சுற்றிவளைத்து வைத்துக்கொண்டு பேச்சு மேசையில் 'புலியின் பசிக்குப் புல்' போடமுடியும் எனும் தீர்மானகரமான முனைப்புடன் செயற்பட்டது முன்னைய ரணில் விக்கிரமசிங்கவின் அரசு. பிராந்திய வல்லரசான இந்தியா, உலக வல்லரசான அமெரிக்காவும், அதன் கூட்டாளியுமான ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய மூன்று பிரதான சக்திகளின் பிரசன்னத்தை அரசியல் - இராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இலங்கைத் தீவுக்குள் உள்நுழைப்பதன் மூலம்.

# புலி பசித்தாலும் புல்லை...?

தமிழ்மக்கள் வாழும் வடக்கு - கிழக்கில் வலைப்பின்னலைச் செறிவாக்குவதன் மூலம் விடுதலைப் புலிகளை இராஜதந்திர ரீதியாக முடக்கி - அதன் வழி அவர்களின் இராணுவச் செயற்பாடுகளைச் செயலிழக்க வைத்து - வெறுமனே அந்த அமைப்பை ஓர் அரசியல் கட்சியாக்கி - முடிந்தால் அக்கட்டத்தில் விடுதலைப் புலிகள் எப்படி அரசியல் நடத்தப்போகிறார்கள் என்பதையும் தமிழ் மக்கள் ஏற்கும் வகையில் அவர்களது அரசியல் வேலைகள் அமைகிறதா என்பதையும் பார்த்து, யதார்த்தத்தில் பலஸ்தீன விடுதலை இயக்கம் சந்தித்தது போல கொள்கைச் சீரழிப்பையும் வங்குரோத்துத் தனத்தையும் விடுதலைப் புலிகள் மீதும் திணித்து ஓர் அவிந்து கரையும் 'கொதிபானைக்குள்' தள்ளிவீழ்த்தி விடுவதே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வஞ்சகத்தனமான இலக்காக இருந்தது என்பதை வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ் நிபுணர்கள் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

### புலிக்குப் போதிய புல் போட நினைத்த ரணில்!

இவ்வாறான ஒரு சர்வதேச இராஜதந்திரச் சுற்றிவளைப்பைப் பலப்படுத்தி வைத்துக்கொண்டு, நோர்வே அனுசரணையாளர்களுக் கூடாகப் பேச்சு மேசையை 'ஆடாமற்' பார்த்துக்கொள்ளவும், 'புலிக்குப் போதிய புல்' போடவும், ரணில் கனவுகண்டுகொண்டிருந்த போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டதும் ரணில் அரசு கலைக்கப்பட்டதும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசு அமைத்ததும் - அந்த அரசு அமைக்கப்படுவதில் ஜே.வி.பியின் வெற்றி மிகவும் முக்கிய பங்களித்ததும், அதனால், ஜே.வி.பி. முக்கிய அரசியல் சக்தியாகத் தென்னிலங்கையில் தெளிவாகப் பரிணமித்ததும் ஜே.வி.பிக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்புகள் சந்திரிகாவால் வழங்கப்பட்டதும் ஆகிய பரபரப்பான சம்பவங்கள் நிகழ்ந்தேறின. 'புலியைப் புல தின்னவைக்கும்' ரணிலின் கனவுகளும் அடியோடு தகர்ந்தன.



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒரு கட்சியிடமும் சட்டவாக்கத்துறையும் பிரதமர் பதவியும் மற்றொரு கட்சியிடமும் இருந்த காரணத்தால் - 1978ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பு இதற்கான 'மிக அரிதான, மிக அருமையான' வரலாற்றுச் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருந்ததால் - தென்னிலங்கையின் இரு பாரம்பரியமான அரசியல் கட்சிகளின் தலைமைகள் ஒன்றையொன்று விரைவாகவும் வேகமாகவும் பழிவாங்கிக்கொண்டன; கழுத்தறுப்புகளைச் செய்தன. அதுமட்டுமல்ல, வடக்கு - கிழக்கின் தமிழ்மக்கள் தமது அரசியல் எதிர்காலத்துக்குத் 'தமிழ்த் தேசியத்தையே' நம்பியிருக்கின்றனர் என்ற விடுதலைப் புலிகளின் வாதத்தை மிகவும் நியாயப்படுத்தும் வகையில், தென்னிலங்கையில் தீவிர சிங்களத் தேசியத்தைப் பலப்படுத்த முனையும் - தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை எள்ளளவும் ஏற்றுக்கொள்ளாத - அரசியல் தீர்வைத் தமிழ் மக்களுக்கு எவ்வகையிலும் வழங்கவிரும்பாத - ஜே.வி.பி. தென்னிலங்கை அரசியல் களத்தில் ஒரு முக்கிய வகிபங்கை எடுத்துக் கொண்டுள்ளமையும் நிகழ்ந்துள்ளன. ஜே.வி.பி. விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை (ISGA) யோசனைகளை முற்றாகவே எதிர்ப்பதுடன், ஜனாதிபதி சந்திரிகா அவற்றின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு செய்யமுற்பட்டால், அரசுக்கு ஆதரவு கொடுப்பதை நிறுத்துவதுடன், தென்னிலங்கையில் தீவிர சிங்களத் தேசியத்தை உசுப்பித் தமது அரசியல் தளத்தைப் பலப்படுத்தி விஸ்தரிப்பார். ஜே.வி.பியின் சார்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் யார் [illegible] ஜே.வி.பியில் தற்பொழுது ஆராயப்படும் விடயமாக உள்ளது.

### சர்வதேச வலைப்பின்னலைப் பலப்படுத்தும் சந்திரிகா

இவ்வாறான ஒரு கட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க அத்திபாரமிட்ட, சர்வதேச வலைப்பின்னலைக் கட்டியெழுப்பி விடுதலைப் புலிகளை இராஜதந்திர ரீதியாகச் சுற்றிவளைக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி சந்திரிகா தெளிவாகவே உள்ளார். அன்று ரணில் விக்கிரமசிங்க திட்டங்களை நகர்த்திக் கொண்டிருந்தபோது, தனது சுய அரசியல் இலாபங்களைக் கருதி - அதற்காகத் தான் 'சார்ந்த சிங்கள சமூகத்தின் நலன்களையே தூக்கி எறிந்துவிட்டு - ரணிலில் திட்டங்களுக்கு 'மண்போட்ட' அம்மையார், ரணில் முன்னெடுத்த, கற்றுக்கொடுத்த சர்வதேச வலைப்பின்னலைத் தொடரவே முற்பட்டு நிற்கிறார்.

### பலாலி விவகாரத்தால் ஒப்பந்தம் தாமதமாகியதா?

அவ்வகையில் ஜனாதிபதி அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தில், இந்தியா - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார் என்று முன்னதாக இலங்கை வந்திருந்த இந்திய இராணுவத் தளபதி கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார். எனினும், ஜனாதிபதி இந்திய விஜயத்தின்போது அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியாமற்போனமைக்கு இன்னும் சில இணக்கம் காணப்படவேண்டிய விடயங்கள் இருந்தமையே காரணம் என்று கூறப்பட்டது. அவ்வாறான விடயங்களில் ஒன்றுதான் பலாலி விமானத்தளம் பற்றியது. பலாலி விமானத்தளத்தை விரைவில் புனர்நிர்மாணம் செய்துதருமாறு இலங்கை விமானப்படை, பாதுகாப்பு அமைச்சைக் கோரியிருந்தது. இராணுவத் தேவைகளுக்கான இந்த விமாணத்தளத்தைப் புனரமைப்பதற்கு இந்திய அரசு சம்மதம் தெரிவித்திருந்தது. இந்தியப் பணத்தில் 480 மில்லியன் ரூபாய்கள் பயன்படும் என்பதைத் தெரிவிக்கும் பு,ரண அறிக்கையொன்று இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டது. ஆனால், பலாலி இராணுவ விமானத் தளத்தை இவ்வளவு பாரிய தொகையைச் செலவு செய்து இந்தியா புனர்நிர்மாணம் செய்துகொடுத்தால், இந்தியாவையும்

**டன்ஸ்ரன் லூயிஸ்**

இலங்கையையும் தவிர வேறு எந்த நாட்டவரும் அதனைப் பயன்படுத்த இலங்கை அரசு அனுமதிக்கக்கூடாது என்ற நிபந்தனையை விதிக்க இந்தியா விரும்பியது எனவும் பாதுகாப்பு ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. இலங்கையினதும் இந்தியாவினதும் விமானங்கள் மட்டுமே பாலாலியில் இறங்கி ஏறுவதை இந்தியா விரும்புகிறதாம். இவ்வாறான ஓர் இணக்கப்பாடு எட்டப்படாத நிலைமை இந்திய - இலங்கை அரசுகளுக்கிடையில் தொடர்ந்துகொண்டிருந்த அதேவேளையில், இலங்கை விமானப் படை பலாலி விமானத்தளத்தைப் புனரமைத்துத் தருமாறு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. இதனால் இலங்கை அமைச்சரவையின் ஒப்புதலுடன் மத்திய பொறியியல் நிபுணத்துவ ஆலோசனை பீடம் (Central Engineering Consultancy Bureau) வீதி அபிவிருத்தி அதிகார சபை (Road Development Authority) ஆகியவற்றின் மூலமாக உள்நாட்டு நிதியைப் பயன்படுத்திப் பலாலி இராணுவ விமான நிலையம் விஸ்தரித்துப் புனரமைக்கப்படவுள்ளது. ஏற்கனவே திருத்த வேலைகள், புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான ஆரம்பக் கட்ட மதிப்பீடுகள் (An intial Assessment) நிறைவுபெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் புதுடில்லிக்கான விஜயத்தின்போது பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று உறுதியாக நம்பப்பட்ட போதிலும் - பலாலி விமானத்தளத்தை இந்திய விமானங்களும் இலங்கை விமானங்களும் மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்பதில் இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும் ஆலோசகர்களும் மிகவும் உறுதியாக இருந்தனராம். இதன் நிமித்தம் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாவது சில வாரங்களுக்குப் பிற்போடப்பட வேண்டியதாயிற்றாம்.

இவ்விடயம் தொடர்பாகக் கொழும்புச் செய்தி ஊடகம் ஒன்றுக்குப் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியொருவர் கடந்தவாரம் பின்வருமாறு கூறியிருந்தாராம். "ஜனாதிபதியின் இந்தியாவுக்கான ஐந்துநாள் விஜயத்தின்போது பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான திட்டங்கள் இருந்தன. இவ்வாறான பிந்திய நிலைவரம் காரணமாக அடுத்த சிலவாரங்களுள் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்" என்று அவர் கூறியிருந்தாராம்.

### தொடுகையைக் கைவிடவிரும்பாத அமெரிக்கா!

இவ்வாறான ஒரு கட்டத்தில் அமெரிக்காவின் நட்பு நாடான ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூஷி அகாஷி கொழும்பு வந்ததும் அங்கிருந்து கிளிநொச்சி

(VIII பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு பழைமை மிக்க எடிசனின் வீடு; அதனை அமெரிக்கர்கள் பேணுகின்ற அழகு...

புளோரிடாவில் வசிக்கும் சியாமளா என்பவர் பற்றி அன்பர் பாலாவும் அவர் மனைவியும் குறிப்பிட்டு. அவர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தனர். தென்மராட்சியைச் சேர்ந்த சியாமளா திருமணமாகி ஆறு மாதத்தில் அமெரிக்காவில் ஒரு கோர விபத்தைச் சந்தித்தவர். அவ்விபத்தின் விளைவாக இழந்த பெண்களுக்கான புனர்வாழ்வகத்தை நிர்மாணிப்பதற்கு தான் உதவியதாகச் சொல்லி அப்பெண்மணிகளின் வாழ்வை எண்ணி இவர் கண்ணீர் விட்ட காட்சியைக் கண்டு நான் திகைத்தேன்.

சியாமளாவின் வீட்டில் அன்று பகல் பொழுதைக் கழித்த யான் அவருக்காகப் பிரார்த்தனை செய்வதைவிட வேறு வழி

வருடம் முழுவதும் இந்நிலைதான் என அதன் சிறப்பைக் கூறினார். மிகச் செல்வமுடைய அமெரிக்க மக்கள் வெப்பம். கடும் குளிர் காலத்திலும் மியாமி

உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் அவர்களது இல்லம். நூதனசாலையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்ற செய்தியைக் குறிப்பிட்ட பாலா

**ஒருவரின் சுற்றுலாப் பயணம் அவருக்குப் பல அனுபவங்களையும் படிப்பினைகளையும் தருவதாகும். அவற்றைச் சம்பந்தப்பட்டவர் தன்னோடு வைத்திருக்காமல் பிறருக்குச் சொல்வதன் மூலம் வேறு சிலரும் பல புதிய விடயங்களை அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டாகிறது.**

**தமது பயணம் பற்றிக் கட்டுரை எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் அவ்வாறு செய்யும்போது, பல லட்சக் கணக்கானோர் தமக்குத் தெரிந்திராத பல புதிய விடயங்களையும் செய்திகளையும் அறிந்து கொள்ளமுடிகிறது.**

**சிறந்த ஆன்மீகப் பேச்சாளரும் சமூக நலனில் அக்கறை கொண்டவருமான இக்கட்டுரையாளரின் அமெரிக்கப் பயண அனுபவங்கள் வாசகர்களுக்குப் பல புதிய செய்திகளைச் சொல்லும்; வியத்தகு பல விடயங்களைத் தரும்.**

**உதயனின் 'சூரியகாந்தி'க்கென செஞ்சொற்செல்வர் எழுதிய சிறப்புத் தொடர் இது.**

**3**


புகழ்பூத்த விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் அவர்களின் புளோரிடா இல்லத்தில் பாதுகாக்கப்படும் அவர் பாவித்த மோட்டார் கார்.

அவரது உடம்பின் பகுதிகள் செயலிழந்த நிலையில் உள்ளன. சில்லுப் பொருத்திய கதிரையில் சிரித்த முகத்துடன் கைகூப்பி வரவேற்க எத்தனித்தபோதும் அவரால் முடியவில்லை. என்னைப் பற்றியும் எனது உரைகள் பற்றியும் அறிந்திருந்த அவர். தன் வரலாற்றைச் சொல்லத் தொடங்கியதும் கண்ணீர் வந்தது. வாழவேண்டிய வயதில் சியாமளா அவர்களை செயலிழக்கச் செய்திருக்கின்றான் இறைவன். அவரது விதியை எண்ணி அவரை அறிந்தோர் கவலைப்படுவர். சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சிறந்த பெறுபேறு பெற்ற இவர். தன் வாழ்வில் நேர்ந்த அனர்த்தங்களைச் சொல்லி 'என்வாழ்வில் ஏதாவது நன்மை செய்ய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இன்னும் வாழ்கிறேன்' என்றார்.

அமெரிக்க அரசு இவருக்கு விபத்து நஷ்டஈடாக பெருந்தொகைப்பணத்தை

தெரியவில்லை.

தனது காசோலைப் புத்தகத்தில் மிகக் கஷ்ரப்பட்டு தாதிகளின் உதவியோடு. கையொப்பமிட்டு மிகுதியை நீங்களே நிரப்பி ஆயிரம் டொலர் பணம் மாற்றி எடுத்து உங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்துங்கள் எனக் கூறி அவர் காசோலையைக் கையளித்த போது உள்ளம் பெரும் தர்மசங்கடத்துக்குள்ளானது. சகோதரி சியாமளா அவர்களிடம் விடைபெறுகின்ற போது உங்களுக்கு என்ன வேண்டும் என நான் கேட்டேன். அதற்கு அவர் தந்த பதில் "ஐயா நேரம் கிடைக்கும் போது தொலைபேசியில் ஓரிரு ஆறுதல் வார்த்தை சொன்னால் அதுவே போதும். உங்கள் ஆத்மீகம் கலந்த வார்த்தை எனக்கு ஆறுதல் தரும். உங்கள் ஆத்மீக உரை உள்ள ஒலி. ஒளி நாடாக்களைப் பாலா அண்ணன் போன்றோர் தந்தனர். அவற்றைப் பல நாள் கேட்ட யான். நேரே



தோமஸ் அல்வா எடிசன் வீடு - புளோரிடா

வழங்கியது. பெரிய மாளிகை போன்ற வீடுகட்டி. தன் தாயாருடன் வாழும் இவரைப் பராமரிக்க இரண்டு தாதியர் தொடர்ந்து பணியாற்றுவர். நீச்சல் தடாகம் முதல் அழகிய பங்களாவுமுடைய இவரின் இல்லத்தில் பூசை அறை மிகமிகப் பிரமாண்டமாக உள்ளது. அவ்வீட்டில் எலிவேற்றர் (லிப்ற்) வசதிகள் உண்டு. அவர் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் தன் வாழ்நாளை ஆத்மீகச் சிந்தனையோடு கழித்துக்கொண்டிருக்கிறார். அவரது உணவை தாதிகளே ஊட்ட வேண்டிய அளவுக்கு உடலுறுப்புக்கள் பாதிப்புற்றுள்ளன. எனினும். அவரின் பரந்த சிந்தனை. கருணை உள்ளம் என்பவற்றை அவரோடு உரையாடும்போது கண்டுகொண்டேன். தனக்குக் கிடைத்த பெருநிதியில் சுமார் 50 லட்சம் இலங்கை ரூபாவை போரினால் அவயவங்களை

சந்திப்பேன் என நினைக்கவேயில்லை" என விடை தந்தார்கள்.

உலகப் பிரசித்திபெற்ற. சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் மியாமி கடற்கரைக்கு திரு.தேவராஜா என்னை அழைத்துச் சென்றார். உலகில் மிகப் பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றான மியாமி பல்கலைக்கழகத்தைக் காணும் வாய்ப்புப் பெற்ற நான். திகைத்துப்போனேன். 40ஆயிரம் மாணவர்கள் கற்கும் பல்கலைக்கழகம் மிக நீண்ட உயர்ந்த மட்ட மாளிகைகளோடு காட்சி தந்தது. அதற்கப்பால் சுமார் 15 கி.மீ. அளவுக்கு பெருந்தெரு நெடுகலும் சர்வதேச நட்சத்திரக் ஹோட்டல்கள் காட்சியளித்தன. லட்சக்கணக்கானோர் கூடும் கடற்கரையை அடைந்த போது "இன்று ஏதாவது விழாவா" என வினவினேன். திரு.தேவா அவர்கள்

கடற்கரைச் சூழலில் தங்குவது வழக்கமாகிவிட்ட பண்பாடாகும். பல்கலை மாணவர் முதல் இளைஞர். யுவதிகள் வரை புளோரிடா கடற்கரையில் தங்களை மறந்த நிலையில். அந்நாட்டுக் கலாசாரத்தை அறியாதோருக்கு

அவர்களின் சகோதரி அங்கும் எம்மை அழைத்துச் சென்றார். இயற்கை அழகு மிக்க மரங்கள் நிறைந்த பெருவளவில் நூற்றாண்டுப் பழைமைமிக்க எடிசனுடைய அழகான வீட்டைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது.

## அமெரிக்கா நோக்கிய ஆன்மீகப் பயணம்...

கூச்சத்தைத் தரும் வகையில் - உள்ள அவர்களது கோலம் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. படகுகளை வாடகைக்கு எடுத்து அதிலேறி சாகசம் செய்யும் இருபாலாரினதும் வேடிக்கைகளைப் பார்க்க பகலிலும் இரவிலும் பொழுதுபோவது தெரியாது. மியாமி கடற்கரைத் தனியுலகமாக உள்ளமையைக் கண்டுகொண்டேன். புளோரிடாவில் உள்ள பங்காவில் புளோரிடா மக்கள் எனக்கோர் பிரிவுபசார வைபவத்தை நடத்தி என்னை வழியனுப்பினர். ஒருவாரம் புளோரிடாவில் மிகவேகமாகப் பலவற்றை பார்வையிட்டேன். மறுநாள் சிக்காக்கோ மாநிலம் செல்வதற்கிடையில் பாலா அவர்களின் அருமைச் சகோதரி. பிரபலமான வைத்திய நிபுணர். மட்டுவில் கன்கசபை தேவகாந்தன் அவர்களது அழைப்பையேற்று புளோரிடாவின் வடபகுதிக்கு திரு.பாலா அவர்களுடன் 6 மணிநேரம் பிரயாணம்செய்து சென்றடைந்தேன். மிகச் செல்வந்தரான வைத்திய கலாநிதியின் வீடு பெரிய மாளிகையாகக் காட்சி அளித்தது. யாழ்ப்பாணத்து முருங்கை மரம் முதல் நாவல் மரம் வரை இவரது அகன்ற வளவுள் இருக்கக் கண்டேன். கடற்கரை அருகே கட்டப்பட்ட இவரின் பிரமாண்டமான வீட்டில் இருந்து தனித்துவமான ஒரு பாலப்பாதை கடலுக்குள் போடப்பட்டு சிறிய விருந்துபசாரகூடம் கடலில் மிதக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது. இரவுவேளையில். கடலின் மீதிருந்து இயற்கையை ரசித்து ஓய்வெடுப்பதற்காக மிதக்கும் அறையில் இரு சாய்மனைக் கதிரைகள் இருந்தன. அப்பெரு மாடிவீட்டில் பாலா அவர்களின் பெற்றோர் [illegible] மிகவும் ஆர்வமாக [illegible] பதினங்களை விசாரித்தனர். அவர்களது இல்லத்தில் தங்கிநின்றபோது.

அப்பெருமகனார் பாவித்த நீர்க்குவளை தொடக்கம் அவர் கண்டுபிடித்த கருவிகள் அவரது வீட்டில் இருந்தன. அவரால் பயன்படுத்தப்பட்ட ஆய்வுகூடம். அவரது கருவிப்பட்டறை அனைத்தையும் அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களின் உதவியுடன் பார்வையிட்டேன். இவ்வுலகுக்குப் பெரிய விஞ்ஞானி எத்தனை கண்டுபிடிப்புகளை கொடுத்துவிட்டு அழியாப் புகழுடன் அவர் உயிர் பிரிந்தது என்பதை அவரது இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள விவரணச் சித்திரக் காட்சி அறையில் காட்டப்பட்ட திரைச்சித்திரம் விளக்கியது. அவரது கண்டுபிடிப்புகள் அவரது கையால் செய்யப்பட்ட கிராமபோன். மின்குமிழ். தொலைபேசி போன்ற பொருள்கள் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றன. அவர் பாவித்துத் தேய்ந்துபோன செருப்புக்கள்

**ஆறு.திருமுருகன் எழுதுவது...**

தொடக்கம் பயன்படுத்திய உபகரணங்கள் அனைத்தும் அவர் வைத்த ஒழுங்கிலேயே இருப்பதாகச் சொன்னார்கள். அவரது மோட்டார் வண்டியைப் பார்த்தபோது. மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். அவ்வண்டி இன்னும் இயங்கக்கூடிய நிலையில் உள்ளது என்பதை அதை இயக்கிக்காட்டினர். அவரது எழுத்து வடிவங்கள். புகழ் பூத்தவர்களால் அவருக்கு எழுதப்பட்ட கடிதங்கள். அரும்பொருள்களைக் கண்டு அதிசயித்துப்போனேன். எங்கள் நாட்டில் நூதனப்பொருள்களை. அறிஞர்களின் வாழ்வைச் சித்திரிக்கும் அரும்பொருள்களைப் பேணும் பாரம்பரியம் இன்றுவரை வளரவில்லை. ஆனால். மேலைநாட்டவர் இவ்விடயத்தில் எத்தனை தூரம் அக்கறை எடுத்துள்ளனர் என்பதை நினைக்கும்போது நாம் அவற்றைப் பேணாத தவறு உறுத்துகின்றது.

*(பயணம் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பி இல்லை! காவல் இல்லை! கைதிகள் குஷி!

அது ஒரு வித்தியாசமான திறந்தவெளிச் சிறை. கம்பிகள் கிடையாது. காவல் கிடையாது. தாங்களே வீடுகட்டிக் குடும்பம் நடத்தலாம். வெளியில் போய் வேலைசெய்யலாம். ஆனால், மாலையில் திரும்பிவிட வேண்டும். இங்கு 12 பெண்கள் உட்பட 163 பேர் தனித்தனி வீடுகளில் வசிக்கின்றனர்.அவ்வளவுபேரும் கொலைக் கைதிகள்.

எங்கே இந்த சுதந்திரச் சிறை என்கிறீர்களா? இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் குலாபண்டி என்ற இடத்தில் 10 ஏக்கரில் அமைக்கப்பட்ட மிகப் பழமையான திறந்த வெளிச்சிறை இது. ஆசியாவில், ஏன் உலகிலேயே மிகவும் பழமையான திறந்தவெளிச் சிறை இதுவாகத்தான் இருக்கும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். மானசரோவர் நகர் அருகே உள்ள சங்கனிர் என்ற இடத்தில் இது அமைந்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் பல்வேறு கொலை வழக்குகளில் சிறையிலடைக்கப்பட்ட கைதிகளில் குறிப்பிட்ட சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கு அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது. திருந்தி வாழும் எண்ணம் உள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்ட இவர்கள் இதுவரை மீண்டும் தவறு செய்யவே இல்லை, மாறாக வேலை செய்து, தொழில் செய்து, பணம் சம்பாதித்து, பொருளாதாரத்தில் உயர்ந்தது மட்டுமின்றி, பிள்ளைகளை நன்கு படிக்கவும் வைத்து வருகின்றனர்.

இவர்களுக்குச் சிறிய வீடுகள் கட்டிக்கொள்ள இடம் ஒதுக்கப்படுகிறது. சிறிய அறை, சமையல் அறை, முன்பக்கத்தில் மாடு கட்டிவைக்க, சைக்கிள் நிறுத்த சிறிய திறந்தவெளி தரப்படுகின்றது. இவர்களுக்கு காலையிலும், மாலையிலும் வருகைப் பதிவு எடுக்கப்படுகிறது. காலையில், வெளியில் போகும் போது, 'எங்குபோகிறார்? எங்கு வேலை செய்கிறார்? என்ன தொழில் செய்கிறார்?' என்ற விவரம் குறிக்கப்படவேண்டும். மாலையில் 6 இல் இருந்து 7 மணிக்குள் திரும்பிவிடவேண்டும்.

இங்குள்ள கைதிகள் பலரும் சங்கனிர் பகுதியிலும், மானசரோவர் நகரிலும் போய் வேலை செய்துவிட்டு வருகின்றனர். சிலர் கூரியர் சர்வீஸ், லொரியில் சரக்கு ஏற்றி இறக்கும் தொழிலும் செய்கின்றனர். இப்படிச் சம்பாதித்த பணத்தில் 'பைக்' முதல் சியாரா கார் வரை வாங்கி நிறுத்தி வைத்துள்ளனர்.

இப்படிக் கார் வாங்கி வைத்துள்ளவர் நவீன் சர்மா. இவர் கொலை வழக்கில் ஆயுள் சிறை பெற்றவர். இவர் திருந்தி வாழ முற்பட்ட நிலையில், இப்போது சரக்குகள் ஏற்றி இறக்கும் தொழில் செய்து வருகிறார். இப்போது பல லட்சங்களுக்குச் சொந்தக்காரர். இவரது குட்டிவீட்டின் முன்பும் சியாரா கார் நிற்கிறது.

சிலர் மாடுகளை வாங்கிப் பால் கறந்து விற்கின்றனர். சிலர் நெசவுத் தொழில் செய்கின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால், ஒருவர் கிளி ஜோதிடமும் சொல்கிறார்.

இவர்கள், குறைந்த பட்சம் ஆயிரத்து 500 ரூபாய் சம்பாதிக்கின்றனர். அதிகபட்சம் 2 லட்சம் ரூபாய் சம்பாதிக்கின்றார் சர்மா. அதேபோல, அதிக வயது உள்ளவர் 45 வயது வினோத்குமார் சர்மா. இவர் ராஜஸ்தான் தொழில் முதலீட்டு கழகத்தில் கட்டிங் மாஸ்ரராக உள்ளார். இவர் 15 ஆயிரம் சம்பளம் வாங்குகிறார். குறைந்த வயது கைதி என்பது 22 வயது வலிபர்.

இங்கு கொலை வழக்கில் சிக்கி, ஆயுள் தண்டனை அனுபவிக்கும் பலரில் முக்கியமாக குறிப்பிடத்தக்கவர்கள் அரசியல்வாதி மகன் வினித் சர்மாவும், பொலீஸ்காரர் மகனும் தான்.

இந்த சுதந்திர சிறை வளாகத்தில் கைதிகளைக் கொண்ட பஞ்சாயத்து உண்டு. இதற்கு 5 பேர் முக்கியமானவர்கள் இவர்களில் ஒருவர் தலைவர். அவர் தான் வினித்சர்மா. இவர்தான் எல்லா பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். கைதிகளில் யாராவது தவறு செய்தாலோ, தப்பமுயற்சி செய்தாலோ இவர் பொலீசுக்குக் காட்டிக்கொடுப்பார்.

இன்னொருவர் பொலீஸ்காரர் மகன். இவர் மட்டும்தான் 'ஆமாம் , நான் தான்கொன்றேன். தவறுதலாகச் செய்துவிட்டேன், இப்போது உணர்கிறேன்' என்கிறார். பெரும்பாலோர் 'நாங்கள் கொலையே செய்யவில்லை. எங்களை பொலீஸார் சிக்கவைத்து விட்டனர்' என்றுதான் சொல்கின்றனர்.

இன்னொருவர் அனில் சர்மா. இவர் ஹோமியோபதி படித்து மருத்துவம் பார்க்கிறார். சிறை வளாகத்தில் இருந்து தினமும் காலையில் பக்கத்து ஊருக்குச் சென்று விடுவார். அங்குள்ள தன் கிளினிக்கில் மருத்துவம் பார்த்துவிட்டு, மாலை திரும்பிவிடுவார்.

இவர்கள் எல்லோரும் சட்டப்படி 12 ஆண்டு எட்டு மாதங்கள் ஜெய்ப்பூர் சிறையில் கம்பியெண்ணி என்ற 'திருந்திவாழ்வார் சான்றிதழுடன்' இங்கு வந்தவர்கள். இவர்களில் சிலர் கடந்த சில ஆண்டாக இருந்துவிட்டதால், விரைவில் விடுதலையாகிவிடுவர். மொத்தத்தில் இங்குள்ள ஒவ்வொரு கைதியும் புனர்வாழ்வு பெற்று, பல்வேறு வேலை, தொழில் பயின்று கைநிறைய சம்பாதித்து, நல்ல மனிதராக மட்டுமன்றி, சமுதாயத்தில் அந்தஸ்துடன் வெளியே செல்கின்றனர் என்பது தான் பெருமிதப்படவேண்டிய விஷயம்.

# யாழ். பாணம்



ஊரின் நடுநாயகமாக அமைந்திருக்கும் விநாயகர் ஆலயம் அது. பிரமாண்டமானது. பிரசித்தியானதும் கூட.

தம்மைப் பூரணமாக நம்புவோருக்கு ஆண்டவன் அருள்வான்.

– இது இந்துமத நம்பிக்கை;

வசதி படைத்த ஊர்ப் பொதுமக்கள், வெளிநாடுகளில் வாழும் இவ்வூர்ப் பிறந்தோர் எனப் பலர் காலத்துக்குக் காலம் விரும்பி வழங்கிய நிதியுதவியே இவ்வாலயம் நாளுக்கு நாள் பற்பல புதுவசதிகள், புதுத் தோற்றம் பெறக் காரணமாயிற்று.

செயலூக்கம் மிக்க திருப்பணிச்சபை.

ஆலய நிர்வாக பரிபாலன சபையின் பொறுப்பில்...

ஓங்கி உயர்ந்து நிற்கும் ராஜகோபுரம்; அதில் கண்கவர் சிற்ப வேலைப்பாடுகள்...

தொலை தூரத்துக்கும் வியாபித்து ஒலியெழுப்பும் பாரிய காண்டாமணி.

கண்ணைக் கவரும் மணிமண்டபம்.

சித்திரத்தேர்; அழகுமிகு சப்பரம்:- அவற்றைப் பாதுகாப்பாய்ப் பேணவென ஆலய வீதியில் நவீன கொட்டகைகள்.

உட்பிரகாரம் முற்றிலும் 'மொஸாக்' கற்கள் பதித்த தரை. சுவர்கள் அனைத்திலும் பல வர்ண சித்திர வேலைப்பாடுகள்; சும்மா சொல்லக்கூடாது; குறுகிய காலத்தில் கோயிலின் உட்புற, வெளிப்புறத் தோற்றங்கள் முற்றிலும் பெருமாற்றம் கண்டுள்ளதை மறுப்பதற்கில்லை.

ஆயினும், அண்மைக் காலமாய் ஆலய நடைமுறைகளில் காணப்படும் இயந்திரமயமான செயற்பாடுகள் மனதை நெருடுகின்றனவே!

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் தான்" இது மனித வாழ்க்கையின் அனுபவ வெளிப்பாடு.

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இந்த ஊரில் திருமணம் செய்ய நேர்ந்தமையால் இந்த ஊரிலேயே நான் நிரந்தரமாகத் தங்கிவிடநேரிட்டது. ஆலயத்தின் வெளிப்புற உட்புறத் தோற்றங்களில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருப்பினும், இங்கு, இன்றும் அதே விநாயகப் பெருமானே வீற்றிருந்து அருள் செய்கிறார்.

அன்று, இந்த ஆலயம் இத்துணை பிரமாண்டமானதாக– இத்துணை பிரபல்யம் பெற்றதாக – இத்துணை விரிவான நிர்வாக அமைப்பு முறைகள் வாய்ந்ததாக இருந்ததில்லை.

ஆனால், புனிதமும், தூய்மையும், பய பக்தியும் கொண்ட பக்தி பூர்வமான கிரிகைகள், பூஜை வழிபாடுகள், உற்சவங்கள் என அத்தனையும் கிரமமாகவும் நேர்த்தியாகவும் இடம்பெற்றன.

மொத்தத்தில் அன்று கோவில் கோவிலாகவே விளங்கியது; பக்தர்கள் மனநிறைவும், மனச் சாந்தியும் கிடைக்கப் பெற்றனர். விநாயகப் பெருமானின் கடாட்சம் அவர்களுக்குப் பூரணமாகக் கிட்டியது. ஆலய வீதியில் அர்ச்சகருக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

அர்ச்சகர் ஆலயத்தைத் தூய்மையாகப் பேணியதுடன், ஆசார சீலராய், பூசைக்கருமங்களை உரிய வேளையில், உரிய வகையில் நிறைவேற்றி வந்தார்.

பரம்பரை வழியாக – தமது தந்தையார் செய்துவந்த நித்திய பூஜைக் கருமங்களை மக்கள் தொடர்ந்து கையேற்று நடத்திய முறையால்- ஆலயங்களில் இந்த ஆலய பூஜை கருமங்கள் எமக்கே உரியதென்ற உணர்வு – கடமை உணர்வு அவர்கள் மத்தியில் காணப்படலாயிற்று.

காலம் எவர் பொருட்டும் எதன் பொருட்டும் காத்திருப்பதில்லை.

அண்மைக் காலமாக ஆலயங்களில் கிரிகைகள், பூஜைகள் வழமையான அமைதி, ஆனந்தம், மனத்திருப்தி அளிப்பவையாக இல்லை.

சீரான நிர்வாகம் மேற்கொள்ளும் நோக்கில் கூலிக்கு – மாதவேதன அடிப்படையில் – அர்ச்சகர்கள் அமர்த்தப்படுகின்றனர். அந்த வகையில் குறிப்பிட்ட விநாயகர் ஆலயத்திற்கும் பல நிபந்தனைகளுடன் நியமிக்கப்பட்ட அர்ச்சகர் – வேறொரு ஊரைச் சேர்ந்தவர். ஆலயத்துக்குச் சொந்தமான வீட்டில் தங்கியிருந்து கோவில் கடமைகளை நிறைவேற்ற முன்வரவில்லை.

அர்ச்சருக்கு ஐந்து ஆண்மக்கள். மூவர் வெளிநாடுகளில்; மீதமுள்ள இருவரே தந்தைக்கு உதவி.

அர்ச்சகர் பொறுப்பேற்றுப் பூஜைசெய்யும் ஐந்து ஆலயங்களில் இந்த விநாயகர் ஆலயமும் ஒன்று. அர்ச்சகர் சார்பில் அவரது இரு மகன்மாரும் இணைந்து மாறி மாறி ஐந்து ஆலயங்களிலும் பூஜைக் கருமங்களை மேற்கொண்டு வருவதாலும் –

இக் கடமைகளுக்கு மேலதிகமாக அயல் ஊர்களில் – வீடுகளின் மங்கல காரியங்கள், சமய அனுஷ்டானங்கள் என்பவற்றை நிறைவேற்றி வைக்க நேர்வதாலும் –

விநாயகர் ஆலயத்து நித்திய கருமங்களை, ஆலயச் சூழலிலே குடும்பத்துடன் தங்கியிருந்து, முற்று முழுதாக நிறைவேற்ற பூசகரால் இயலாது என்பதே யதார்த்தம்.

இந்த நிலையில் –

கோவில் கருமங்களில் தாமதம் ஏற்படக் கூடாதென்பதில் நிர்வாகம் கடும் முனைப்புக் காட்டி வந்தது.

பூஜை நேர விவரங்களை விளம்பரப் பலகையில் கொட்டை எழுத்தில் பிரகடனப்படுத்தியது.

பலன்...?

மாலைக் காலப் பூஜை மாலை 5 மணிமுதல் 6 மணி வரை – விளம்பரப்பலகை பக்தர்களுக்கு அறிவுறுத்தும் தகவலிது.

ஐந்துமணிக்கு பத்து நிமிடம் இருக்கையில் இளைய அர்ச்சகர் – பிரதமகுருக்களின் மகன் – சீ.சீ.200 மோட்டார் சைக்கிளில் வந்திறங்குகிறார். வழமையான பூஜைகளை அவசரகெதியில் செய்து முடிக்கிறார்.

மணி ஐந்தே முக்கால் ஆகும் வேளை அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொள்கிறார்.

மணி ஆறு ஆனதும் இளைய அர்ச்சகரின் மோட்டார் சைக்கிள் படுவேகத்தோடு புறப்பட்டு விடுகிறது. ஐந்தோ பத்தோ நிமிடம் தாமதித்து வழிபாட்டுக்கு வரும் பக்தரொருவரைப் பூட்டிய ஆலயக் கதவே வரவேற்கும். ஒப்பந்தம் சரிவரக் கடைக் கொள்ளப்படுகிறதல்லவா? தட்டிக் கேட்க முடியாத நிலை பரிபாலன சபைக்கு.

ஆலயம், அர்ச்சனை, வழிபாடு அனைத்துக்கும் அடிப்படை – பக்தர்கள் மனதொன்றி – மனதை ஒரு நிலைப்படுத்தி – தொழுவதன் மூலம் மனச்சாந்தி பெறுவதற்கான முயற்சியே.

மற்றப்படி, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பவன் ஆண்டவன் – என்கிறது இந்து மத தத்துவம்.

இன்றைய நிலைக்குக் காரணம் தேடி, கடைசியில் கண்ட முடிவு இதுதான்.

தட்டுப்பாடு –

இன்று எதற்குமே தட்டுப்பாடு – பற்றாக்குறை.

எரிபொருள் தட்டுப்பாடு; உணவுத் தட்டுப்பாடு; தண்ணீர்த் தட்டுப்பாடு...

[illegible] தட்டுப்பாடு.

[illegible]வேளன்.

# தீர்க்கதரிசிகளின் சாவு

**கடுகுக் கதை**

வேகமெடுத்தது மினிபஸ்.

இதுவரைக்கும் ஆட்களுக்காய் ஊர்ந்து கொண்டிருந்த அந்த மினிபஸ் இப்போது ஏதோவோர் தூண்டலினால் வேகம் எடுத்தது.

தூண்டலின் காரணமாய் மஞ்சள் பஸ் பின்னுக்கு வேகமாய் வந்துகொண்டிருந்தது.

கைநீட்டி மறித்த ஒரு பள்ளிச் சிறுமியை நிராகரித்து விட்டு வேகமெடுத்தது மினிபஸ்.

அந்தப் பள்ளிச் சிறுமியை உள்வாங்குவதற்காய் பின்வாங்கியது மஞ்சள் பஸ்.

மினிபஸ் ஓர் இடத்தில் நின்றது. கலியாண வீடொன்றுக்கு உடுத்துப் படுத்தபடி நின்ற கூட்டமொன்றை உள்ளுக்குள் திணிப்பதில் ஆலாய்ப் பறந்தான் கண்டக்டர்.

திணிப்பதில் சற்று நேரம் தின்னப்பட மஞ்சள் பஸ் முந்தியபடி விரைந்தது.

அதனைத் துரத்தியபடி விரைந்தது மினிபஸ். மினிபஸ்சுள் நின்ற இளைஞர் கூட்டமொன்று "முந்து... முந்து..." என்று சத்தம் போட்டது. கண்டக்டரும் "அண்ண... வேளைக்கு முந்து நேரம் போட்டுது..." என்றான்.

டிரைவர் திரும்பி ஒரு வெற்றிப் புன்னகையை உதிர்த்துவிட்டு மினிபஸ்ஸை வேகமாக்குவதில் ஆர்வமானான்.

இப்போது இரண்டு பஸ்சுக்குமான இடைவெளி குறைந்திருந்தது. இப்போது மினிபஸ்சுள் இருந்த இளைஞர் கூட்டங்கள் "வாறான்... வாறான்" என்றும் "முந்து முந்து.." என்றும் கோஷமிட்டது.

மஞ்சள் பஸ்ஸை மினிபஸ் முந்த எத்தனிக்க லொறியொன்று குறுக்கிட்டது. கொஞ்சமாய் அதனோடு... உரசி... விலகி... விரைந்தது மினிபஸ். அது சாதாரணம் என்பதுவாய் டிரைவர் திரும்பி ஒரு புன்னகையை உதிர்த்தான்.

இப்போது இரண்டும் மிக... மிக... நெருங்கின மினிபஸ் மஞ்சள் பஸ்ஸை முந்த எத்தனம் செய்து இரண்டும் பக்கம் பக்கமாய் வர மஞ்சள் பஸ் டிரைவர் இன்னும் வேகமெடுக்க... இரண்டும் அந்த வேகங்களோடு... மோதுப்பட்டு... வெவ்வேறு பக்கமாய் கவிழ்ந்து விழுந்தன.

அந்த பஸ்சுகள் இரண்டிலும் இருந்தவர்கள் "வர்றான் வர்றான்" என்று யமனையும் "முந்து முந்து" என்று சாவுப்பயணத்தையும் அழைத்த தீர்க்கதரிசிகளோ?

கவிநேசன்
வதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டுக்கள் பலவிதம் கோழித் திருட்டு ஒருவிதம்

திருட்டுக்கள் பலவிதம், அதில் கோழித் திருட்டும் ஒருவிதம்.

கோழி திருடுவதற்காகச் சென்ற சிலர் மின்சாரம் தாக்கி மரணமானதாக அண்மையில் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. அவர்கள் கோழி திருடச் சென்றார்களோ இல்லையோ மின்சாரத்தில் சிக்கி உயிரிழந்தார்கள் என்பதே செய்தி.

கோழியாய் இருந்தால் என்ன, வேறு என்னவாய் இருந்தாலும் உரிமையாளர்கள் தம் சொத்தைப் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பிறர் பொருள்களை அபகரிக்கச் செல்பவர்கள் அதன் விளைவுகளையும் எதிர்பார்க்கவே வேண்டும்.

வீடுகளில் பலர் காவலுக்காக நாய்களை வளர்க்கிறார்கள். ஆனால், கைதேர்ந்த நபர்கள் நாய்களுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டுத் திருட்டை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள்.

திருட்டுக்களை ஒழிப்பதற்குப் பலரும் பல விதத்தில் முயல்கிறார்கள். ஆனால், திருட்டுக்கள் ஒழிந்தபாடேயில்லை. திருட்டையே தொழிலாகக் கொண்டவர்களைத் திருத்தவே முடியாது.

'திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது' என்ற கவிஞனின் கூற்று முழுக்கவும் உண்மையே.

வீடுகள், கடைகள் மற்றும் பொதுஸ்தாபனங்களில் பொதுவாகத் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன. இவைகளைப் பொலீஸாரைக்கொண்டு தடுத்துவிடலாம் என்பது சாத்தியமற்ற காரியம். பொலீஸார் வீடுவீடாக, தெருத்தெருவாகத் திருடர்களைப் பிடிப்பதற்காக நிற்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

திருட்டுக்கள் வழக்கமாக நடைபெறும் பகுதிகளில் விசேட கவனம் செலுத்துவது அவசியம். ஆனால், இரவு வேளைகளில் நடக்கும் திருட்டுக்களை இப்போது இருக்கும் காவல்துறையினரால் கட்டுப்படுத்தமுடியும் என்று சொல்ல முடியாது.

முதலில் அவர்களின் எண்ணிக்கை கணிசமாக இல்லை. பெரும்பாலானவர்களும் தமிழ் தெரியாதவர்கள். தமிழ் தெரிந்தவர்களாய் இருந்தாலும் தமிழர் அல்லாதவர்கள் குடிமனைகள் இருக்கும் பகுதிகளில் இரவில் நடமாடுவதை மக்கள் விரும்பமாட்டார்கள். மேலும் புதிதாகக் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் கூட இரவுவேளைகளில் திருட்டுக்கள் நடப்பதாகச் செய்திகளில் வருகின்றன.

### கண்காணிப்பு

களவுகளை ஒழிப்பதற்கென்று மட்டுமே ஒரு பொலீஸ் பிரிவை சகல பகுதிகளிலும் அமைத்து, அவ்வப்பகுதிகளில் பேர்போன திருடர்களைக் கண்காணிப்பதும், அப்பகுதிகளில் எதுவும் நடைபெற்றால் அவர்களே பொறுப்பு என்ற வகையில் ஒரு ஏற்பாட்டை செய்தால் திருடர்களை ஓரளவு கட்டுப்படுத்தலாம் என்று ஒரு நண்பர் யோசனை கூறுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் வாகன விபத்துக்கள் அதிகரித்து வருவதுபோலவே களவுகளும் அதிகரித்து வருகின்றன.

நந்தன் எழுதுவது

போர் அனர்த்தங்களால் நொந்துபோயிருக்கும் மக்கள் தம் வீடுகளில் நிம்மதியாய் இருக்கமுடியாதபடி திருடர்களின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன.

உயர்மட்ட அதிகாரிகளும் பொறுப்புள்ள பிரஜைகளும் கூடி இதற்கு ஒரு முடிவு எடுத்துக் கட்டுப்படுத்த முடியாதா?

☆ ☆ ☆ ☆ ☆

### கோழிக்கள்ளன்

கோழித் திருட்டைப்பற்றி ஆரம்பித்தபோது அந்தக் காலத்தில் பிரசித்திபெற்றிருந்த 'கோழிக்கள்ளன்' ஒருவன் பற்றிய நினைவு வந்தது.

எங்காவது இவரைக் காண நேர்ந்தால் அந்தப் பகுதியில் ஒரு கோழியாவது காணமால் போயிருக்கும் என்று சொல்வார்கள். அவர் கோழி பிடிக்கும் விதமே தனி; எங்காவது ஓர் இடத்தில் மறைவாக அமர்ந்து இருப்பார் – தூண்டிலில் மிளகாய் அல்லது வெங்காயத்தைக் கொழுவித் தூரத்தில் எறிந்து விட்டுக் காத்திருப்பார். மேய்ந்துகொண்டிருக்கும் கோழிகளில் ஒன்று அதில் சிக்கிக்கொண்டதும் மெதுவாக நூலைத் தான் இருக்கும் இடத்திற்கு இழுப்பார். கோழியும் சத்தமின்றி அவர் பக்கத்துக்கு வந்து சேரும். 'லபக்' கென்று அமர்த்திக் கழுத்தை முறித்து சாக்கில் போட்டு எடுத்துக்கொண்டு போய்விடுவார்.

ஒருமுறை இரவு நேரத்தில் ஒரு வீட்டில் கோழி பிடிக்க முயன்ற சமயம் கோழிகள் குரல் எழுப்பவே வீட்டுக்காரர் விழித்தெழுந்து வந்துவிட்டார்கள். கோழிக்கள்ளன், கோழிக் கூட்டுக்குள்ளேயே புகுந்து ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டுவிட்டார்.

வீட்டுக்காரர் வந்து பார்த்துவிட்டு போய்ப் படுத்துவிட்டார்கள். கோழிக்கள்ளனும் கூட்டுக்குள்ளேயே உறங்கிப்போனார். காலையில் கோழிகளைத் திறந்துவிட வந்தபோதுதான் ஆசாமி வசமாக மாட்டிக்கொண்டார் – பிறகு கேட்பானேன்.

# உபதேசிப்போர் ஏராளம் பின்பற்றுவோர் மிகக் 'குறைவு'

வவுனியாப் பகுதியில் போர் அனர்த்தத்துக்கு முன்னர் நடந்த ஒருகோழித் திருட்டுப் பற்றி பத்திரிகையில் வந்த செய்தி சுவாரஷ்யமானது.

ஒரு கிராமப் பகுதியை நோக்கி இரண்டு பெண்கள் போய்க்கொண்டிருந்ததைப் பொலீஸார் எதேச்சையாகப் பார்த்துவிட்டு யாரோ எங்கோ போகிறார்கள் என்று இருந்துவிட்டார்கள். சுமார் இரண்டு மணி நேரத்தின் பின்னர், அந்த இருபெண்களும் அதே வழியில் திரும்பி வந்தார்கள். பொலீஸ்காரர் அவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். அந்தப் பெண்கள் போகும்போது சாதாரண பெண்களாகப் போனவர்கள் இப்பொழுது நிறைமாதக் கர்ப்பிணிகளாகக் காணப்பட்டார்கள். சந்தேகம் கொண்ட பொலீஸ்காரர் அவர்களை அழைத்துக் கொடுத்து மெதுவாக ஒருவரின் வயிற்றுப்பக்கம் தட்டிப்பார்த்தார் – சேலைக்குள் பதுக்கி வைக்கப்பட்ட கோழி குரல் எழுப்பியது – கோழிகளைத் திருடி வயிற்றில் வைத்துக் கட்டிக்கொண்டு கர்ப்பிணிகள் போல காட்சியளித்த பெண்கள் இருவரும் பொலீஸ் நிலையம் சென்றனர்.

☆ ☆ ☆ ☆ ☆

### சமூக உணர்வு

சமூக உணர்வு படைத்த அன்பர்களும், அமைப்புக்களும் நல்ல பல காரியங்களை அலுங்காமல் குலுங்காமல் செய்துவருகிறார்கள்.

அதனை சமூகம் நல்லமுறையில் வரவேற்றுப் பயன் பெறவேண்டும்.

பாடசாலைகளில், பொது நிகழ்வுகளில், கோயில் விழாக்களில் எல்லாம் சமூகத்துக்குத் தேவையான ஏராளமான கருத்துக்கள் அறிஞர்களாலும், ஆன்மீகத் தலைவர்களாலும், அரசியல் பிரமுகர்களாலும் வெளியிடப்படுகின்றன. அவைகளைக் கேட்பவர்கள் இரசித்து மகிழ்ந்து கை தட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். அதேபோல் பத்திரிகைகளில் வரும் இக்கருத்துக்களை வாசித்துவிட்டு போட்டுவிடுகிறார்கள்.

நம் சமூகத்தில் உபதேசம் செய்பவர்களும், ஆலோசனை வழங்குபவர்களும் குறைவில்லாமல் இருக்கிறார்கள்.

இந்த ஆலோசனைகளும், உபதேசங்களும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் பயனில்லாமல் போய்விடுகின்றன. சில சமயங்களில் பிறருக்கு உபதேசம் செய்பவர்கள் ஏதோ கடமைக்குச் செய்துவிட்டு, தமதளவில் அவைகளைக் கடைப்பிடிக்காமல் விடுகிறார்கள்.

இன்றைய இளைஞர்கள் மூத்தவர்களை மதிக்காமல் போவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறலாம் போலிருக்கிறது.

மூத்தவர்கள் இளைய தலைமுறையினருக்கு முன் உதாரணமாகத் திகழும்போதுதான் அவர்களை எவரும் மதிப்பார்கள்; பின்பற்றவும் செய்வார்கள். இந்தக் கருத்து ஆசிரியர்

## சத்தமும் சந்தடியும்

சமூகத்துக்கு பெரிதும் பொருந்தும்.

முற்காலத்தில் இருந்ததுபோல் இன்று ஆசிரியர்களுக்கு மதிப்பில்லாமல் போனதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. கல்வி முறையைக் கூடக் குறைசொல்பவர்கள் உண்டு. எதுவானாலும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் முன் உதாரணமாக நடந்துகொள்வதை அனைவரும் வற்புறுத்துகிறார்கள். ஆனால், எல்லா ஆசிரியர்களுமே இவ்வாறு நடந்துகொள்கிறார்களா என்பது ஒரு பெரிய கேள்வியாக நம் முன் நிற்கின்றது.

அண்மையில் வெளியூர் பாடசாலையொன்றின் ஆசிரியர் – ஆசிரியர் அல்ல அதிபர் ஒருவர் கடையில் சிகரெட் வாங்கிவரும்படி ஒரு மாணவனை அனுப்பியிருக்கிறார். அந்த மாணவன் சிகரெட்டுடன் திரும்பி வருகையில் விபத்தொன்றில் சிக்கிக்கொண்டான். பாடசாலை நேரத்தில் சிகரெட்டும் கையுமாகக் காணப்பட்ட அந்த மாணவனை வீதியால் போனவர்கள் வந்தவர்கள் எல்லாம் திட்டியிருக்கிறார்கள். அதிபர் தான் அவனை சிகரெட் வாங்கிவர அனுப்பியிருந்தார் என்பது அப்பொழுதுதான் வெளிப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான சம்பவங்கள் ஆங்காங்கே அவ்வப்போது நடக்கத்தான் செய்கின்றன. அவை வெளியில் வருவதில்லை.

☆ ☆ ☆ ☆ ☆

### வீதி விபத்துக்கள்

வீதிகளில் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு முக்கியமான காரணம், வீதி ஒழுங்குகளை முறையாக வாகன ஓட்டிகள் தெரிந்து வைத்திருக்காமைதான். தெரிந்திருந்தாலும் சிலர் அவைகளைப் புறக்கணித்துவிட்டுக் கண்மூடித்தனமாக ஓடுவதும் உண்டு. வாகன ஓட்டுநர்கள் மட்டுமன்றி பாதசாரிகளும் அறிந்திருக்கவேண்டிய பல ஒழுங்கு நெறிகளை உள்ளடக்கிய பிரசுரம் ஒன்றை யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

வீதியில் இறங்கும்போது உங்களதும் பிறரதும் பாதுகாப்பைப் பற்றிக் கவனமெடுங்கள். அது நீங்கள் புறப்படும் இடத்திலிருந்து செல்லவேண்டிய இடத்துக்குப் பத்திரமாகப் போய்ச்சேர்வதை உறுதிப்படுத்தும் என்று அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரசுரம் வாகன ஓட்டிகள் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்வது நன்மையளிக்கும்.

---

# நேர்மையில் நிற்போம்

எல்லோருக்கும்தான் மழை தேவை. ஆனால், சிலருக்கு இடைஞ்சலாக இருக்கிறது. வெளியே போகமுடியாமல் காரியம் கெட்டுவிடுகிறது! காற்று எல்லோருக்கும் வீசுகிறது. ஆனால், வியாதியஸ்தர் சிலர், 'சில்லென்று காற்றுப் படக்கூடாது' என்று ஜன்னலை மூடிக்கொள்கின்றனர்! மழை பொழிவதில் பயிர் விளைகிறது; கூடவே களைகளும் வளர்ந்து விவசாயிக்குத் தொல்லை தருகிறது! ஆக, எந்த ஒரு காரியம் உலகில் நடந்தாலும் நல்லதும் கெடுதலும் அதில் கலந்தே இருக்கிறது. சமுத்திரத்தைத் தேவாசுரர்கள் கடைந்தார்கள். அமிர்தமும் விளைந்தது; விஷமும் கிடைத்தது! அதனை சிவபெருமான் அருந்தி நீலகண்டனாகி ரட்சித்தார். தேவர்கள் நல்லனவற்றின் பிரதிநிதி, அசுரர்கள் தீயனவற்றின் உருவகம், அசுர வம்சத்தில் நரகாசுரன் பிறந்தான். பல அரசர்களை ஹிம்சித்து வென்றான்; நல்லோரைத் துன்புறுத்தி அரசாண்டு வந்தான். அவனைக் கண்ணபிரான் அழித்து உலகைக் காத்தார்.

உலகில் நன்மைகள் இருந்தால் போதாதா? தீமைகள் எதற்கு என்று சிலர் எண்ணுகிறார்கள். இறைவன் திருவுள்ளத்தை யார் அறியமுடியும்? சில தீமைகளிலிருந்து நன்மைகள் விளையக் காண்கிறோம்! தசரதன் தவறு செய்தான். அதனால் சிரவணகுமாரன் இறந்தாலும், மகரிஷிக்குத் துன்பம் ஏற்பட்டாலும் அவர் வாக்கின்படி இராமன் பிறந்தான். உலகுக்கே எடுத்துக்காட்டாக வாழ்ந்தான். பரீட்சித்து மன்னன் ஒரு மகரிஷியின் கழுத்தில் செத்த பாம்பைப் போட்டான். தவறுதான். அதனால் அந்த ரிஷி துன்பமடைந்தாலும் பரீட்சித்துக்கு, தான் மரணமடைய வேண்டிய காலம் எப்போது என்பது புரிந்தது. நமக்கெல்லாம் பாகவதம் கிடைத்தது. அரசகுமாரி சுகன்யா புற்றிலே ஒரு குச்சியினால் குத்த, அதிலிருந்த ரிஷிக்குத் துன்பம் ஏற்பட்டது ஆனபோதிலும் அந்த ரிஷியின் கருணையால் ஆயுர்வேத மருந்தான ச்யவனப்ராசம் கிடைத்தது – இன்றும் விளங்குகிறது.

காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



நரகாசுரன் மூலம் மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் தீங்கு ஏற்பட்டாலும் நரகாசுரன் கண்ணபிரானால் கொல்லப்பட்டதில் நம் அனைவருக்கும் தீபாவளித் திருநாள் கிடைத்தது. அதையொட்டிய இறையுணர்வும் சந்தோசமும் கிடைக்கிறது. சாமான்ய மனிதன் இறந்தால் தீட்டு உண்டு. ஆனால், இறைவன் அருளால் ஒருவன் இறக்கும்போது அவன் ... அது புண்ணிய காலமாகிவிடுகிறது! தனி மனிதன் செயல்களுக்குப் பாவ புண்ணியம் உண்டு. ஆனால், இறைவன் ஒருகாரியம் செய்யும்போது அவன் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவனாதலால், அங்கே பாவம் கிடையாது; புண்ணியகாலமாகவே ஆகிவிடுகிறது.

ஒருவன் இன்னொருவனைக் கொன்றால் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதிக்கிறது. ஆனால், ஒரு நீதிபதி தன் பதவிக் காலத்தில் நூறு பேருக்கு மரணதண்டனை கொடுத்திருந்தாலும் அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படுவதில்லை. அங்கே விருப்பு வெறுப்பு இல்லை யாதலால் பாவம் இல்லை. பகவானுடைய செயல்களும் இப்படியே.

'பகவான் ஏன்தான் இப்படி நம்மைத் தண்டிக்கிறாரோ?' என்று சில சமயம் எண்ணுகிறோம். கூடவே 'இது புண்ணிய தினம், பகவான் நம்மைத் தண்டித்த நாள்' என்ற உணர்வும் ஏற்பட்டால் பாவங்கள் நீங்கும்; சாந்தி பிறக்கும்; நாம் திருந்தி நல்வழிப்படுவோம்.

விருப்பு வெறுப்பற்ற மனநிலையை நாம் படிப்படியாக

## நியாயத்துக்குப் போராடுவோம்!

அடைந்து – வளர்த்துக் கொண்டு – தெய்வத்தன்மையைப் பெறமுயற்சி செய்யவேண்டும் என்பதை உணர்த்துவதே தீபாவளித் திருநாள். விருப்புவெறுப்பு இன்றி, நேர்மையில் நின்று, தர்மத்துக்காகவும் நியாயத்துக்காகவும் போராடி வெற்றி பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன்.... சுப்பிரமணிய சுவாமிக்கு....

**ஒரு மடல்**

**சுப்பிரமணிய சுவாமி ஐயாவுக்கு!**
**வணக்கம்!**

ஐயா நானும் ஓர் ஈழத்தமிழன் என்ற முறையில் இதனை எழுதுகின்றேன். அதுவும் ஈழத்தில் வாழ்ந்து கொண்டு ஈழத்தமிழர் விடயத்தில் இந்தியாவின் அக்கறை பற்றி நீண்டகாலமாக அவதானித்து வருபவன் என்ற முறையில்.

இந்தியாவினதும் உங்களைப் போன்ற சிலரது நடவடிக்கையாலும் ஈழத்தமிழர் மனங்களில் கவலையும் சீற்றமும் எழுந்திருக்கிறது.

ஐயா, என்னை உமக்குத் தெரியாது. ஆனால், உம்மைப் பற்றி என்னைக் கேளும். உமது கோமாளித்தனங்கள், நீர்விடும் சரடுகள், குத்துக் கரணங்கள் என்று அடுக்குவேன் - இது உங்கள் கருத்து.

புலிகள் பயங்கரவாத இயக்கம் மட்டுமல்ல, இந்திய அரசுக்கும் எதிரான கொள்கை உடையவர்கள். எனவே, மன்மோகன்சிங் தலைமையிலான இந்திய அரசு பிரபாகரனை நாடுகடத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

ஐயா, அறிக்கைவிடும் போது கொஞ்சமாவது யோசிக்கவேண்டாமா?

எந்த இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என்கிறீர்களோ அந்த இயக்கத்தின் தலைவரை தமது தலைவராக ஏற்றுக்கொண்டு 'புலிகளே எமது ஏக பிரதிநிதிகள்' என ஏற்று மக்களின் ஆணை பெற்றவர்கள் இன்று நாடாளுமன்றில் அரசியல் உரிமை கேட்டு நிற்கின்றனர். அதனை விட்டாலும் வீரப்பன் மூன்று பேருடன் மட்டுமே வெளியே வந்தான். அவனையே உயிருடன் பிடிக்க நாதியற்றவர்கள் 9 கோடி தமிழர்களின் மனதில் இடம்பிடித்த தலைவரைப் பிடிக்க எப்படி ஐயா முடியும்?

இது ஒரு சின்ன எடுத்துக்காட்டு.

இலங்கையின் இறைமையையும் ஐக்கியத்தையும் பாதுகாக்க கொழும்பில் 3 விமானப்படைப் பிரிவுகளையும் இராணுவப் பிரிவுகளையும் நிறுத்தவேண்டும் எனச் சென்ற அரசின் பாதுகாப்பு அமைச்சர் பெர்னாண்டஸிடம் வேண்டுகோள் விடுத்தீர். ஐயா! இலங்கை[illegible] உள்ளதையே அரச படைகளால் பாதுகா[illegible] முடியாமல் உள்ளது. இதுவேற தலையிடியா? அதனை விட மீண்டும் கைகளைச் சுடவிரும்பாத பெர்ணாண்டஸிற்கு நன்றிசொல்ல இந்தியர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

2002 செப்ரெம்பர் அளவில் ஒரு விசித்திரமான அறிக்கை விட்டீர். ஞாபகம் இருக்கிறதா? உமக்கு எங்கு நினைவிருக்கப்போகுது நான் சொல்கிறேன் கேளும். "இலங்கைத் தமிழருக்குப் புலிகள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள்" எனச் சென்னையில் செய்தியாளர்களைக் கூட்டி புலம்பினீரே!

தாய்லாந்து பேச்சுகளின்போது தமிழீழக் கோரிக்கையைப் புலிகள் கைவிட்டு விட்டார்கள் என்றும் -

இலங்கையிலும் இந்தியா போன்ற சமஷ்டி ஆட்சி அமைந்ததால்தான் தமிழர்களின் பிரச்சினை தீரும். இதற்காகத்தான் தமிழீழம் கோரி தமிழர்கள் போராடி வந்தனர். தற்போது போரை நிறுத்திவிட்டு அரசுடன் பேச்சுக்குச் சென்றதே தவறு. இந்தநிலையில் முதற்கட்டப் பேச்சின் போது தமிழீழம் கேட்டுப் போராடவில்லை என்று அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். இதனை தமிழர்கள் ஒருபோது ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இவ்வாறு கூறியதன் பின் புலிகள் தமிழர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டனர் என்று தெரிவித்திருந்தீர்கள்.

ஐயா! உமது கண்டுபிடிப்புக்குத் தமிழர்கள் சார்பில் நன்றி. அடுத்தது, தமிழர்கள் தமது அரசியல் ஆலோசகராகப் பாலசிங்கத்தையே இப்பொழுதும் வைத்திருக்கின்றனர் என்பதை ஞாபக மூட்டுகிறேன்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னி வர மாலைதீவு ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவேளை -

"1988 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குப் புளொட் இயக்கத்தின் உதவியோடு உங்கள் அரசியல் எதிரிகள் சிலர் சதி செய்தனர். அவ்வேளை, ராஜீவ்தானே தனது படைகளை அனுப்பி அந்தப் புரட்சியை முறியடித்து உங்கள் ஆட்சியைக் காப்பாற்றியவர். அவரைக் கொலைசெய்த அமைப்பின் ஆலோசகர் மாலைதீவு ஊடாக வன்னி செல்ல அனுமதிக்கக்கூடாது" என்று ஜனாதிபதி அப்துல் ஹயூமிற்குக் கடிதம் எழுதியிருந்தீர்கள்.

மாலைதீவுச் சதிப்புரட்சிப் பின்னணியில் முழுக்க முழுக்க றோவின் (RAW) ஏற்பாட்டில் உமாமகேஸ்வரனைப் பணத்தைக் காட்டித் தமது வலையில் வீழ்த்தி மேற்கொள்ளப்பட்டதென்று இதற்குத் தேவையான ஆயுதங்கள், போக்குவரத்து வசதிகள், தேவையான பண வசதிகள் செய்து கொடுத்ததும் 'றோ'தான். இதனை அனைவரும் நன்கு அறிவார்கள். தாக்குதல் வெற்றியளித்த நிலையில் அப்துல் ஹயூம் சர்வதேசத்திடம் உதவி கோரினார். இந்தக் கட்டத்தில் வேறு நாடுகள் (குறிப்பாக பாகிஸ்தான், சீனா) தலையிட்டு உதவினால் இந்தியாவின் கௌரவம் என்னாவது என்ற நிலையில் தான், ராஜீவ் காந்தி இந்திய இராணுவத்தை அனுப்பி புளொட் உறுப்பினர்களைக் கைது செய்தார். மாலைதீவு ஜனாதிபதிதான் இன்றும் உள்ளார். இதனை அவர் நன்கு அறிவார். புலிகளுடன் பேசவேண்டாம். சந்திரகாசனுடன் பேசுங்கள். புலிகளுடன் பேச்சு நடத்தினால் அது இந்தியாவுக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேலும் நடவடிக்கைகளில் இறங்க வாய்ப்பளித்துவிடும். எனவே, தமிழர்களுடன் பேச விரும்பினால் தமிழகத்தில் உள்ள ஏதிலியர் மன்றத் தலைவர் சி.எஸ்.சந்திரகாசனுடன் பேசுமாறு முன்னாள் பிரதமர் ரணிலிடம் தாங்கள் கேட்டிருந்தீர்கள்.

ஐயா, தமிழர்களால் புறக்கணிக்கப்பட்டவர்களில் சந்திரகாசனும் ஒருவர். இவர், தந்தை இவருக்கு மட்டுமல்ல, ஈழத்தமிழன் ஒவ்வொருவரின் மனதிலும் நிலைகொண்டவர். ஆனால், சந்திரகாசனை ஒரு களங்கமாகவே தமிழர்கள் பார்க்கின்றனர். இந்தியாவில் அகதிகள் பாதுகாப்புச்சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி முழுக்க முழுக்க இந்திய ஆதரவு பெற்று இந்தியாவிற்கு ஆதரவான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். நல்ல விடயம்.

ஆனால், நிதியம் ஒன்றை உருவாக்கி வெளிநாடுகளில் வதியும் ஈழத்தமிழ்ச் செல்வந்தர்களிடமும் இந்தியாவின் ஈழத்தமிழ் அனுதாபிகளிடமும் பெருமளவு நிதி உதவியைப் பெறுகின்றவர். இந்திய அரசும் இவர் அமைப்பு ஊடாகவே உதவுகின்றது. இருந்தபோதிலும் இந்தியாவின் கருத்துக்களை வெளிப்படுத்துபவராகவே இருக்கின்றார். இங்கு திரைமறைவில் செய்யப்படும் திட்டங்களை மக்கள் அறிவர்.

ஈழ அகதிகள் தாயகம் வர விரும்பும்போது, புலிகள் வரி வசூலிக்கின்றார்கள், நிலைமைகள் சரியில்லை, புலிகள் கட்டாய இராணுவ சேவையில் இணைக்கின்றனர் போன்ற செய்திகளை பகிரங்கமாகவே வெளியிட்டு வருகின்றார். இந்திரகாந்தி அம்மையார் தமிழ் போராளிகளுக்குப் பயிற்சி வழங்கும் திட்டத்தை றோவிடம் கையளித்தார். 1983ஆம் ஆண்டு காலத்தில் சென்னையில் 'றோ' அதிகாரியாக இருந்த சாமி ரவி மேனன், சந்திரகாசனின் நண்பர். றோவிற்கும் புலிகளுக்கும் இடையில் விரிசல்கள் ஏற்படக் காரணமாக இருந்தவர் தான் இந்த சந்திரகாசான்.

ஐயா, இவ்வாறு சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இருந்தபோது முடிக்கிறேன் அதற்கு முன் சின்ன சந்தேகம்.

ஈழத்தமிழர் இன்னல் தீர என்ன செய்ய வேண்டும் என்று புலிகள் உலகு எங்கும் சென்று ஆலோசனை பெற்று வருகின்றனர். அந்த நாடுகளோ அவர்களை வரவேற்று, உபசரித்துச் சமாதானத்தை முன்னெடுக்க ஆலோசனையும் வழங்கி வருகின்றன. வெற்றியடைந்தால் உதவி வழங்கவும் தயாராக உள்ளன.

இந்தியாவின் நிலையோ எதிர்மாறாகவுள்ளது. புலிகள் போரைக் கைவிட்டுச் சமாதானம் பற்றிப் பேசும் வேளையில் நீங்களோ (இந்தியா) வன்முறை தழுவிய பேச்சுகளையும் ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறீர்கள்.

சிங்கள பேரினவாத அரசியலில் உங்களுக்கு ஏன் இந்த அக்கறை?

உங்களை யார் இப்படி ஆட்டி வைக்கிறார்கள்?

நீர் படித்த படிப்புக்கு இதுவா வேலை?

உங்கள் மரியாதையையும் கௌரவத்தையும் தொடர்ந்து காப்பாற்ற வேண்டுமானால் அமைதியாய் இருப்பது நல்லது. இல்லையேல் அமெரிக்க ஹவார்ட் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற உயர் அந்தஸ்தைக் கூட பெறுமதியில்லாதவாறு ஆக்கிவிடுவார்கள் இந்தியர்கள்.

**அன்புடன்,**
**ஈழத்தமிழர் அனுதாபி.**

**வரைந்தவர்: சி.கேசவன்.**

# ஆலயங்களுக்கு ஒலிபெருக்கிகள்

சில வாரங்களுக்கு முன்னர் "இறைவன் விரும்பியபடி நடந்துகொண்டால்..." என்ற தலைப்பில் இப்பத்தியிலே எழுதியிருந்தேன் அல்லவா? அதெல்லாம் ஒரு குறிப்பிட்ட ஊரிலுள்ள ஒரு கோயில் என்றில்லாமல் அதிலே குறிப்பிட்டவாறுள்ள எந்தக் கோயிலுக்கும் பொருந்தவேண்டும் என்பது தான் எனது விருப்பமாயிருந்தது.

அப்படியிருக்க அதனைப் படித்த சிலர் ஒலிபெருக்கி விவகாரம் சம்பந்தப்பட்ட மட்டில - அதெல்லாம் தங்கள் கோயிலைப் பற்றித் தான் என்று 'உரிமைகோரி', 'ஒப்புதல் வாக்குமூலம்' அளிப்பது போல நடந்துகொண்டார்களாம். அதெல்லாம் நான் எதிர்பாராத - எண்ணாத - ஒன்றாக இருந்தாலும் தொப்பி யாருக்குப் பொருந்துகிறதோ அவர்கள் அதையெடுத்து அணிந்துகொள்ளலாம் தானே! மொத்தத்திலே அக்கட்டுரை பலரையும் பல விதத்திலும் சிந்திக்க வைத்திருக்கிறதாம்!

ஓர் அன்பர் இப்படித் தெரிவித்தார். தங்கள் கோயிலுக்கும் 'ஈ அடிச்சான் கொப்பி' போல அப்படி நிரந்தர ஒலிபெருக்கிச் சாதனங்களைக் 'கொள்முதல்' செய்தால் என்ன என்று எண்ணியிருந்தார்களாம். மேற்படிக் கட்டுரை தந்த விளக்கத்தையடுத்து அதுபற்றி மீண்டும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனராம்.

### ஈயடிச்சான் கொப்பியடிச்சான் என்பது என்ன?

அதென்ன 'ஈயடிச்சான் கொப்பி' உங்களுக்குத் தெரியுமா? அதற்கான விளக்கம் இதுதான். ஒரு கெட்டிக்கார மாணவன் பரீட்சை எழுதிக்கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்திலே 'கொப்பியடிப் பதிலே' கெட்டிக்காரனான இன்னொரு மாணவனும் விடை எழுதிக்கொண்டிருந்தான். நல்லவேளையாகப் பரீட்சை மேற்பார்வையாளர்களின் காவலோ, கவனிப்போ அவ்வளவு தூரத்துக்கு இருக்கவில்லை. இவன் கெட்டிக்கார மாணவனின் விடைகளை அப்படியே 'அச்சொட்டாக'ப் பார்த்து எழுதிக்கொண்டிருந்தான். தனது பெயர், அல்லது சுட்டெண்களைச் சரியாக எழுதினானோ தெரியவில்லை.

எல்லாம் சரி கெட்டிக்கார மாணவன் விடைத்தாள்களை ஒன்று சேர்த்துப் 'பின்' பண்ணும் சமயம்......அந்தநேரம் பார்த்துத் தற்செயலாக ஈ ஒன்று வந்து அவனின் தாள் மேல் இருக்க அதையும் அடித்துவிட்டுத்தான் அவன் தாள்களைப் பின் பண்ணியிருக்கின்றான். அவனைப் பின்பற்றி விடையெழுதிக் கொண்டிருந்த அந்தக் 'கொப்பிக் கற்' மாணவன் அதுவும் பரீட்சையோடு சம்பந்தப்பட்ட ஒரு செயன்முறைதான் என்று எண்ணியிருக்கின்றான்! அவனுக்கு முன்னால் ஈ வரவில்லை. அதனாலென்ன? பக்கத்து மேசையெல்லாம் தேடி அலைந்து ஓர் ஈயை அடித்துப் பிடித்துக்கொண்டு வந்து ...! அதன் பின்னர் தான் அவன் பரீட்சை எழுதியதன் முழுப் பயனையும் பெற்றதாக உணர்ந்தானாம்! அது நிற்க.

கோயில் சட்ட திட்டங்கள் விதிமுறைகள் என்று வகுத்துக்கொண்டு அதன்படி நடந்துகொள்ளும் பட்சத்தில் நிரந்தர ஒலிபெருக்கி




களையிட்டுப் 'பயம் கொள்ள' வேண்டியதில்லை என்கிறார். திருவிழா, பூசைகளின் உபயகாரர்கள் போட்டி போட்டுக்கொண்டு தனியார் ஒலிபெருக்கிகளை வாடகைக்கு அமர்த்தித் தெருநீளம் ஒலிபெருக்கிகள் (குழாய்கள்) பொருத்துவதைக் கட்டுப்படுத்தலாம். சிவபூசையில் கரடி என்பது போல வேண்டாத சங்கதிகள் விளம்பரங்களுக்கு இடமில்லாமற் போவதுடன், சொந்த ஒலிபெருக்கியில் அளவோடு நின்று கட்டுப்பாடுகளுடன் நடந்துகொள்ள முடியும் - இப்படியெல்லாம் கூறுகிறார் அன்பர் ஒருவர்.

ஆமாம், அரசாங்க வானொலி 'ஒலிபரப்பு விதிகள்' என்று வைத்திருப்பதுபோல கோயில்களும் அப்படி ஒன்றை வைத்துக்கொண்டு அதன் கட்டுப்பாட்டுக்கு 'குரங்கின் கைப் பூமாலை' என்பதுபோலன்றி ஆன்ற விந்தடங்கிய சான்றோர்களைப் பொறுப்பாக விட வேண்டும். இதெல்லாம் மேலே குறிப்பிட்ட அன்பர் சொன்னதின் திரண்ட கருத்தாகும்.

### உண்மையாகவே வந்த ஓநாய்!

அத்தியடியைச் சேர்ந்த ஒருவர் தங்கள் பிள்ளையார் கோயிலைப் பொறுத்தவரை தாங்கள் அப்படித்தான் நடந்துகொள்வதாகக் குறிப்பிட்டார். தங்கள் கோயிலில் நிரந்தரமாக ஒலிபெருக்கிச் சாதனங்கள் இருந்தபோதிலும் தாங்கள் கட்டுப்பாட்டுடன் சொற்பொழிவு, தவில் - நாதசுரம் போன்ற மங்கள இசைகளுக்கே பெரும்பாலும் பயன்படுத்துவதாகச் சொன்னார். ஒவ்வொரு நாளும் என்றில்லாமல் உற்சவகாலங்கள், திருவெம்பாவை, சதுர்த்தி போன்ற நாள்களிலே மட்டும் அதிகாலையிலே அவை சம்பந்தமான பதிகங்களைச் சிறிதுநேரம் ஒலிபெருக்குவார்களாம். அதெல்லாம் அத்தினங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை மக்களுக்கு நினைவுபடுத்துவதாக அமையுமாம். இதையும் வரவேற்கலாம்தானே! இரண்டு பஞ்சாங்கங்களில் அந்தந்தக் கோயில் எதனைப் பின்பற்றித் திருவிழாக்கள் - பூசைகளைச் செய்கிறது - பின்பற்றுகிறது - என்பதை யாவது மக்களுக்குச் சொல்லத் தானே வேண்டும்?!

இப்போது சிறிய வகுப்பிலே படித்த ஒரு பாடம் ஞாபகத்துக்கு வருகிறது. ஆடு மேய்க்கும் ஒரு சிறுவன் யாருமற்ற வயல் வெளியிலே நின்று "ஓநாய்..... ஓநாய்...." என்று கத்துவானாம். குடிமக்கள் அலறி அடித்துக்கொண்டு அவனைக் காப்பாற்றச் சென்றால் அவன் அங்கே குறும்புச் சிரிப்புடன் நிற்பான். இப்படிப் பல நாள்கள். ஒரு நாள் உண்மையாகவே ஓநாய் வந்துவிடுகிறது. அவன் அவலக்குரல் கொடுத்தும் யாருமே அவனைக் காப்பாற்றச் செல்லவில்லை...!

உடுவிலைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபரான திரு.செ.தில்லைநாதன் தமது ஒரு அனுபவம் பற்றிச் சொன்னார். தாம் ஒரு கோயிலுக்குச் சென்றதாகவும், அங்கு ஏழாம் திருவிழா உபயகாரர் திரு....வை காரியாலத்துக்கு வருமாறு திரும்பத் திரும்ப ஒலிபெருக்கியில் சொல்லிக்கொண்டிருந்தார்களாம்...

அந்தக் கோயிலில் 'என் போட்டால் என்விழாத்' அளவுக்கு அல்லது "பார் சிறுத்தலின் படை பெருத்ததோ, படை பெருத்தலின் பார் சிறுத்ததோ" என்ற அளவுக்குக் கூ[illegible]மாயிருக்கும். அதனால் உபயகாரரைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாதிருக்கும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் சொன்னார்.

"இத்தனைக்கும் அந்த நேரத்தில் அங்கு உள்வீதி, வெளிவீதி எங்கும் நின்ற சனம் இருபது பேர் கூட இருக்காது" என்று சிரித்தவாறே!

**சஞ் அங்கிள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரோடு நோவோம்...?

குடிமக்களின் சேவைகளில் இருப்பவர்கள் பொதுமக்களின் சேவையாளர்களாக இருப்பதைக் காட்டிலும் அரச, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுச் சேவையாற்றுதைக் காட்டிலும், தமக்கு மேலுள்ள அதிகாரிகளின் கட்டளைகளைச் 'சிரமேற் கொண்டு' செய்து முடிப்பதே அதிகம் வேண்டப்படுகிறது. இது ஜனநாயக நடைமுறைகளுக்குப் புறம்பானது. தனிநபர் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலுமாகும். ஆனால், இத்தகைய அதிகாரிகளின் மோசமான செயற்பாடுகளுக்கு எதிராக நியாயமான எவ்வழிகளிலேனும் கிளர்ந்து எழுபவர்கள் சிவில் சேவையில் குறைவாகவே உள்ளமையும் அவதானிக்கத்தக்கது. அவ்வாறு கிளர்ந்து எழுபவர்கள் கலகக்காரர்களாகவும், பிழைக்கத் தெரியாதவர்களாகவும், விதண்டாவாதிகளாகவுமே பார்க்கப்படுவர். அரச சேவையிலுள்ள மூத்தவர்கள், ஓய்வுபெற்றவர்கள் புதிதாக நியமனம் பெறும் ஊழியர்களுக்குச் சொல்லும் வார்த்தை எக்காலத்திலும் மேலதிகாரிகளோடு முரண்டு பிடிக்கக் கூடாதென்பதே. ஏனெனில், அதிகாரிகள் 'அறுத்து' விடுவார்கள் என்று விளக்கமும் கூறுவார்கள். அவர்கள் தமது பட்டறிவின் மூலமே இவ்வாறு கூறுகின்றார்கள் என்பது மனங்கொள்ளத்தக்கது.

தவறுகளைச் செய்துவிட்டு மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும்போது நீதியற்ற வழியில் 'முரண்டு பிடிப்பவர்களும்' ஒருசாரார் உள்ளனர்தான். இவர்களது நடவடிக்கைகளுக்குத் 'துணை' போகாதிருத்தலே நன்மை பயக்கும்.

அறிவுப் புலத்திலேயே இத்தகைய அதிகாரக் கெடுபிடிகள் அதிகம் உள்ளதை அவதானிக்கலாம். பல்லைக்கழகங்கள், பாடசாலைகள், இதர கல்வி நிறுவனங்களில் இது அதிகம். 'வெட்டியோடி' மேலதிகாரிகளின் 'கால்பிடித்து', தகுதியான பலரைப் பின்தள்ளி அதிகாரப் பதவிகளில் குந்துபவர்களே தமது மேலாண்மையை அதிகம் செலுத்தப் பார்க்கின்றார்கள். தமது தகைமைக்கு, சேவைத் தரத்துக்கு மேலாக உள்ள யாரேனும் தமது கதிரையை அசைக்கக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையே இத்தகைய மேலாண்மைக்குக் காரணமாகும்.

ஓர் அதிகாரி, அவர் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து, சேவை நிலைசார்ந்து கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றார். எனவே, அவருக்குப் பட்டதாரிகள், பட்டப்பின் தகைமை உள்ளவர்கள், ஆங்கில பாடத்தில் தேர்ச்சியுள்ளவர் என்போரைக் கண்டாலே ஆகாது. அவர்களை 'மட்டந்தட்டி' அறுப்பதிலேயே குறியாக இருந்தார். இறுதியில் ஓய்வுபெற்றார். ஓய்வுபெற்ற போது நடைபெற்ற பாராட்டு விழாவுக்கு வருகை தந்தோர் சிலரே.

அண்மையில் ஒரு வாசகர் ஆங்கில ஆசிரியை மீது அதிகாரியொருவர் மோசமான முறையில் நடந்துகொண்டமை பற்றிய ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். இன்னொரு முதிர்ந்த ஆங்கில ஆசிரியர் அவரது கற்பித்தல் சீரில்லை எனக் கூறப்பட்டு அதிகாரியின் அழுத்தத்தால் சேவைக் காலத்துக்கு முன்பாகவே ஓய்வுறுத்தப்பட்டார். இதனால், அந்த ஆசிரியர் உண்மையாகக் கிடைக்கவேண்டிய சம்பள உயர்ச்சியை இழக்க நேரிட்டது. இன்னோர் ஆங்கில ஆசிரியை 'சினிமாப் பாணியில்' அதிகாரியால் இடமாற்றப்பட்டார். பாடசாலைக்கு வந்த அதிகாரி, ஆசிரியையை வகுப்பு எடுக்கப் பணித்தார். வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தபோதே 'கண்டபடி' ஆசிரியைக்கு ஏசி, அவரது சேவை திருப்தியில்லை எனக் கூறி இடமாற்றக் கடிதத்தினைக் கையளித்தார் அந்த அதிகாரி.

செயலமர்வு ஒன்றில் 'புலமைப் பரிசில்' பரீட்சை தொடர்பாக அதிகாரி ஒருவரின் கருத்துக்கு எதிர்க்கருத்துரைத்தமைக்காக 'இவர் கற்பிக்கத் தகுதியற்றவர்' எனத் தமது மேலதிகாரிக்குச் சிபார்சு செய்து இடைநிலை அதிகாரி ஒருவர் ஆசிரியரை இடம்மாற்ற பெறச் செய்தார்.

பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்குக் குருகுலப் பாணியில் சேவை செய்யவேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. பாடந் தொடர்பில் தர்க்க சிந்தனையோடு கருத்துரைப்பதும் மோசமான நடத்தையாகவே பார்க்கப்படுகிறது. அத்துடன், படிக்கும் காலங்களில் பிரபலமாக இருப்பதும் விரும்பப்படுவதில்லை. இதேநிலைதான் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரிகளிலும்!

உள்ளூராட்சி அமைப்புகளிலும் இத்தகைய 'அதிகார முறைகேடுகள்' அதிகம். ஆணையாளர் புத்தகத் தொகையைவிடக் குறைவாக வந்த பொருள்களுக்குக் கையொப்பமிடுமாறு களஞ்சியக் காப்பாளருக்குப் பணித்தார். மறுத்தபோது, அவருடைந்த துன்பங்கள் பல.

அதிகாரிகளின் அடாவடித்தனங்களை இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். நல்ல அதிகாரிகள் இல்லையா? ஏன் இல்லை. சுமாரான எண்ணிக்கையில் இருக்கின்றார்கள். அவர்கள் சக ஊழியர்களின் மனங்களிலும் இருக்கின்றார்கள்.

- ஏகலைவன்.

# அரபாத்தின் குடும்பம்


மனைவி, மகளுடன் அரபாத்.

அரபாத் பிறந்தது 1929ஆம் ஆண்டு. அவரது அப்பா, எகிப்து தலைநகர் கெய்ரோவில் புடைவை வியாபாரி முஹம்மது அப்துல் ரவூப். அரபாத், அல்-குத்வா அல் - ஹுசைனி என்று நீளமாக அவருக்குப் பெயர் வைத்தார்கள். அவர் பெரிதும் நேசித்த அம்மா நான்கு வயதிலேயே இறந்துவிட, ஜெருசலேமில் இருக்கும் தாய்மாமன் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். பலஸ்தீனத்தில் அவர் கால்பதித்தது அப்போதுதான்! அப்போது பலஸ்தீனம், பிரிட்டனின் காலனி நாடாக இருந்தது. ஒருநாள் பிரிட்டிஷ் இராணுவம் அவருடைய மாமா வீட்டுக்குள் புகுந்து எல்லோரையும் அடித்துச் சித்திரவதை செய்து வீட்டிலிருந்த பொருள்களை நொறுக்கிவிட்டுப்போனது. இது அரபாத்தின் இளம் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

அடுத்தநாள் அக்கம்பக்கத்து சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு அவன் இராணுவ ஆட்டம் விளையாடினான். சிறுவர்கள் அணிவகுப்பு நடத்தி, பிரிட்டிஷ் படைகளைத் தாக்குகிற மாதிரி விளையாட்டு. கையில் பிரம்பு வைத்துக்கொண்டு தன் படைகளை ஒழுங்குபடுத்திய அரபாத்தை எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

அரபாத்தின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி அதிகம் அவர் பேசியதில்லை. லட்சியத்தோடு வாழ்ந்த அவரது வாழ்க்கையில் ஒரே திருப்பம் 90 இல் நடந்த அவரது திருமணம். 61 வயதில் அவர் மணமகன் ஆனார். மனைவி சுஹாவுக்கு அப்போது வயது 28. அவர் வயதில் பாதி கூட இல்லை. சுஹா அவரைக் காதலித்துத்தான் மணந்துகொண்டார். அரபாத்தால் அந்தக் காதலை மறுக்க முடியவில்லை. சுஹா ஒரு கிறிஸ்தவர் என்பதுதான் ஆச்சரியமான விஷயம்.

சுஹா ரமல்லா நகரின் பணக்காரக் குடும்பம் ஒன்றின் வாரிசு. பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிய குடும்பம். பின்னால் அவர்கள் பாரிஸ் போய்விட்டனர். டுனீஷியாவில் அரபாத் இருந்தபோது அவருக்கு உதவியாளராகப் போன சுஹா, காதலில் விழுந்தார். திருமணத்துக்குப் பிறகு அவர் முஸ்லிமாக மதம் மாறினார். ஒரு குழந்தை பிறந்த பிறகு பதினைந்து மாதங்கள் கழித்துத்தான் இந்தத் திருமணத்தைப் பற்றி அவர்கள் வெளியுலகுக்கு அறிவித்தனர்.

அரபாத்துக்கு ஒரே ஒரு பெண் குழந்தை. அதற்கு இப்போது ஒன்பது வயதாகும். அந்தக் குழந்தையின் பெயர் ஜாஹுவா. தனது அம்மாவின் பெயரையே மகளுக்கு வைத்தார் அரபாத். குடும்பத்தோடு தன்னால் அதிக நேரம் செலவிட முடியாதென்று காரணம் சொல்லி அவர்களை [illegible] அந்த மகள் அரபாத்தை நேரில் பார்த்தது சில நாள்[illegible] போட்டோக்களிலும்தான் பார்த்து வளர்ந்தாள். [illegible] தான் மீண்டும் பார்க்கிறாள்.

# பேச்சு மேசையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று விடுதலைப் புலிகளுடன் பேசிவிட்டு கொழும்புக்கூடாக இந்தியா சென்றமையும் வாசகர்களுக்குத் தெரிந்தவிடயங்களே. அமெரிக்காவின் துணைச் செயலாளர் றிச்சர்ட் ஆர்மிடேஜ் கொழும்பு வரவிருந்ததும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வெளிவிவகாரங்களைக் காரணம் காட்டி அவரது விஜயம் இரத்துச் செய்யப்பட்டமையும், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அறிவிப்புத் தொடர்பாகக் கொழும்பில் அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட ஆர்மிடேஜ்ஜின் உரையில் விடுதலைப் புலிகள் வன்முறைகளை நிரந்தரமாகக் கைவிட்டுப் பேச்சுக்களுக்கு மீளத்திரும்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டமையும் 'விழுந்தும் மீசையில் மண்படவில்லை' என்பது போன்ற அறிவிப்புக்களே.

## வன்னியின் தீபாவளிப் பேச்சுகள்!

இந்நிலையில், தீபாவளி தினமான கடந்த வியாழக்கிழமை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர், இலங்கைக்கான நோர்வேயின் அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் அடங்கிய நோர்வேயின் உயர்மட்டத் தூதுக்குழு, வன்னி வந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தூதுக்குழுவைச் சந்தித்துப் பேசியுள்ளது. இரண்டு நாள்கள் முன்பதாக லண்டனிலிருந்து கட்டுநாயக்காவுக்கு விமான மூலம் வந்து, அங்கிருந்து இலங்கைப் படையின் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி வந்தடைந்த விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட விடுதலைப் புலிகளின் அரசியல், நிர்வாகக் கட்டமைப்புகளைச் சேர்ந்த பல சிரேஷ்ட தலைவர்களும் திரு. பிரபாகரனுடன் அப்பேச்சுகளில் பங்குபற்றியிருந்தனர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட செய்தியொன்றை ஜான் பீற்றர்ஸன், பிரபாகரன் அவர்களுக்கு எடுத்து வந்ததாக அறியவருகிறது. ஆனால், இச்செய்தி எதுவும் புதிய செய்தியல்ல. ஏற்கனவே கூறப்பட்டவிடயம் தான் என்று எரிக் சொல்ஹெய்ம் கொழும்பில் முன்னரே கூறியிருந்தார். "இறுகி உறைந்துள்ள இப்பிரச்சினையை உள்நுழைந்து அணுக முடியுமா என்று கூறுவது கடினம்" என்றார் - அவர்.

மேலும் நோர்வே தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், அண்மைய வாரங்களில் அரசிடமிருந்தும் புலிகளிடமிருந்தும் வரும் அறிகுறிகள் தனக்கு எவ்வித பெரிய நம்பிக்கைகளையும் தரவில்லை என்று முன்னமே கூறியிருந்தார். "கடினமான காலங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புகளைப் பேணுவது தானும் முக்கியமானது" என்று ஜான் பீற்றர்ஸன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே கூறியிருந்தார்.

## குரோதமற்ற உறவு சாத்தியமாகுமா?

எல்லாவற்றுக்கும் அப்பால் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை விரும்பியோ விரும்பாமலோ கொழும்பு அரசும், சர்வதேசமும் ஏற்றுக்கொள்கின்றன. அவர்களுடன் பேசித் தீர்க்க முனைகிறார்கள் என்று எடுத்துக்கொண்டால், சர்வதேச வலைப்பின்னலைக் கட்டியெழுப்புவதிலிருந்து

விடயங்களை நகர்த்தி இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தருணத்தில் நின்றுகொண்டு விடுதலைப் புலிகளுடன் குரோதமற்ற உறவை வளர்த்துக் கொண்டு பேச்சுகளை ஆரம்பிக்கமுடியுமா?

ஒருதடவை இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல இந்திய விஜயத்தின்போது பிரேரித்திருந்தமைக்கு இணங்க, கொழும்பு மாநகரில், இலங்கை வடக்கு - கிழக்கில் 1987 - 1990 காலப்பகுதிக்குள் மடிந்த இந்திய இராணுவச் சிப்பாய்களுக்கான நினைவுத் தூபியொன்றைப் பாரியளவில் அமைப்பதற்குக் கொழும்பு அரசு ஏற்பாடு செய்துவருகிறது.

'போரில் உயிர் துறந்த இலங்கைப் படையினருக்குக் கண்டியில் நினைவுத் தூபி உள்ளது. போரில் உயிர் துறந்த விடுதலைப் புலிகளுக்கு நினைவுத் தூபி வடக்கு - கிழக்கில் உள்ளது. தனது சொந்த நாட்டுப் பிரஜைகளுக்கு எதிராகப் போர் செய்து உயிர்விட்ட அந்நியப் படைக்கு ஒரு நாடு தூபி அமைத்ததாக வரலாற்றுப் பதிவு எதுவும் எந்த நாட்டிலும் இல்லையே' என்று கொழும்பு ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org